# துள்ளியெழுந்தது காற்று!

ஆர். மணிமாலா



குளிர்வாட்டியெடுத்தது!

மலைப் பிரதேசத்தில் இருப்பதுப் போன்ற பிரமை. ஃபேன் வேலையில்லாமல் தேமே என்று அமைதியாய் இருக்க, ஜன்னல்கள் இழுத்து மூடியிருக்க... அப்படியும் பனிக்காற்று பெட்ஷீட்டில் பதுங்கியிருந்த சொர்ணத்தை சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்தது.

ஊரே அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்த நடுநிசியில், தொலை தூரத்தில் நாயொன்றின் வேதனை குரல், தேய்ந்து, உணர்வைத் தொட்டது.

சொர்ணம் உறக்கம் கலைந்தாள்.

குளிரில் தொண்டை கரகரத்தது. வெதுவெதுப்பாய் தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது. ஜக்கிலிருந்த தண்ணீர் சில்லிட்டிருந்தது.

படுக்கையை விட்டு எழுந்தாள். ஜக்கை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தாள்.

சமையலறைக்குள் சென்றவள் ஸ்டவ்வை பற்ற வைத்து தண்ணீரை சூடுபடுத்தினாள்.

இடதுக்கோடி அறையிலிருந்து தொடர்ந்தாற் போல் இருமல் சப்தம் வந்தது.

சொர்ணத்தின் மாமனார் நமச்சிவாயத்தின் குரல்தான் அது!


'ரெண்டு நாளாக இருமிக் கொண்டிருக்கிறார். நாளைக்கு கண்டிப்பாக ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.' கவலைப்பட்டபடி தண்ணீருடன் வெளியில் வந்தவள், சன்மதியின் அறையில் விளக்கு எரிந்துக் கொண்டிருப்பதைப் பார்த்து கண்களை சுருக்கினாள்.

கடிகாரத்தைப் பார்த்தாள்.

*1.10.*

'இவ்வளவு நேரமாகவா விழித்துக் கொண்டிருக்கிறாள்?'





தண்ணீரை சமையல் மேடை மீது வைத்து விட்டு மகளின் அறை நோக்கி நடந்தாள். கதவில் கை வைத்ததும் திறந்துக் கொண்டது.

சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தாள் சன்மதி. ''இன்னும் தூங்காம என்னப் பண்ணிட்டிருக்கே?'' ஆச்சர்யமும், அதட்டலுமாய் மகளருகே வந்தாள் சொர்ணம்.

பேனாவை மூடி வைத்து விட்டு அம்மாவைப் பார்த்து புன்னகைத்தாள். டேபிள் மீது கத்தையாய் பேப்பர்.

''நீ தூங்கலியாமா?''

''அதே கேள்வியை என்னை திருப்பிக் கேக்கறியா? மணி என்னாச்சு பார்த்தியா? இவ்வளவு நேரமாகியும் தூங்கலேனா... உடம்பு என்னத்துக்காகும்?''

''கதை எழுதிக்கிட்டிருந்தேன்ம்மா! உடனே முடிச்சு அனுப்பணும்... அதான்!''

''அதுக்காக...?''

''தேவியிலே சின்ன நாவல் போட்டி வச்சிருக்காங்கம்மா! என்கிட்டே அருமையா ஒரு தீம் இருந்தது. டைம் அதிகமில்லே. ரெண்டு நாள்தான் இருக்கு. ஃபர்ஸ்ட் பிரைஸ் எனக்கு கிடைக்கும்ங்கற நம்பிக்கை எனக்கிருக்கு. வேகமும் இருக்கு. இதோ, இன்னும் ரெண்டு பக்கம் தான்! எழுதிட்டா கதை முடிஞ்சிடும்!''

''இல்லே... என்னால அனுமதிக்க முடியாது. எழுதின வரைக்கும் போதும். மீதி காலைல எழுதிக்க. எடுத்து வை. எந்திரி... படுத்துக்க!''

''அம்மா ப்ளீஸ்...''

''ரெண்டு பக்கம்தானே? காலைலே எழுதிக்கலாம்... எந்திரிம்மா!''

''பிடிவாதம்மா உனக்கு!'' சலிப்புடன் எழுதிய பேப்பர்களை வரிசைப்படுத்தி ஃபைலில் வைத்து பத்திரப்படுத்தினாள்.

டேபிளை அழுத்திப் பிடித்துக் கொண்டு எழுந்தவள் பக்கத்தில் நின்றிருந்த வீல்சேரை இழுத்தாள்.

''அது எதுக்கு... நான் இருக்கேன்ல?''

சொர்ணம் மகளின் கையை எடுத்து தன் தோள்மேல் போட்டுக் கொண்டு தாங்கிப் பிடித்து கட்டிலை நோக்கி அழைத்துச் சென்றாள்.

கட்டிலில் படுக்க வைத்தாள். நைட்டி விலகி மேலேறியிருக்க... பளபளவென்று மின்னிய ஒரு கால் மட்டும் நீண்டிருக்க... முழங்கால் தாண்டி துண்டிக்கப்பட்ட நிலையில் இன்னொரு கால்...

பார்க்கும் போதெல்லாம் 'ஐய்யோ'வென்று அலறும் மனசு இப்போதும் அலறியது.

மகளின் எதிரில் தன் வேதனையை வெளிப்படுத்த விரும்பாமல், நைட்டியை இழுத்து சரிப்படுத்தி விட்டாள். பெட்ஷீட்டை எடுத்து கழுத்து வரை போர்த்தி விட்டாள்.

திறந்திருந்த ஜன்னல் கதவுகளை இழுத்து மூடினாள்.

''எம்மா, ஜன்னலையெல்லாம் சார்த்தறே?''

''குளிர் வாட்டி எடுக்குது. பனிக்காத்து உனக்கு ஆகாது!''

''உனக்கு இன்னமும் நான் சின்னக் குழந்தைன்னு நினைப்பு'' என்றாள் கிண்டலாய்.

''நீ எனக்கு எப்பவும் சின்னக்குழந்தைதான். நேரமாய்ச்சு... தூங்கு.''

சொர்ணம் கதவை தாளிடாமல் சார்த்தி விட்டு வெளியேறினாள்.

பெயர்ப் பொருத்தம் எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. ஆனால் சன்மதிக்கு வெகுவாய் பொருந்தி இருந்தது.

சூரியனின் தங்க நிறமும், நிலவின் அழகும் ஒருசேர குடி கொண்டிருந்தது.

எல்லோரையும் போல் சன்மதியும் குறையில்லாத குழந்தையாகத்தான் பிறந்து வளர்ந்தாள். அவளுக்கு பதிமூன்று வயதானபோது தான் அந்த கொடூர சம்பவம் நடந்தது.

மகள் ஆசைப்பட்டாளே என்பதற்காக தன் மொபட்டில் சர்க்கஸுக்கு அழைத்துச் சென்றார் சன்மதியின் அப்பா சதாசிவம்.

சர்க்கஸ் முடிந்து வீட்டுக்குப் புறப்பட்ட போது மணி பத்து.

மகளை பத்திரமாய் வீட்டில் சேர்க்க வேண்டுமே என்ற பொறுப்புணர்வில், வாகனங்கள் அதிகம் தலைகாட்டாத பாதை வழியாக... சுற்று வழியாய் இருந்தும் பொருட்படுத்தாமல் சென்றார்.

சதாசிவம் கவனமாகத்தான் ஓட்டிச் சென்றார். ஆனால், இவரைப் போலவே குறுக்கு பாதையில் லாரியை ஓட்டி வந்த குடிகார டிரைவர், ஒரு வளைவிலிருந்து திரும்பி, கடைசி நேரத்தில் மொபட்டை பார்த்து, பதறி, பிரேக் போடுவதற்குள் எல்லாமே நடந்து முடிந்து விட்டது.

சதாசிவம் அந்த கணமே நசுங்கி இறந்துப் போனார். பின்னால் அமர்ந்திருந்த சன்மதி தூக்கி எறியப்பட்டு, காலில் லாரியின் சக்கரம் ஏறி இறங்கி... மயக்கமாகிப் போனாள்.

லாரி டிரைவர் மனிதாபிமானத்தை விட சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, லாரியை கிளப்பிக் கொண்டு போய்விட்டான்.

ரத்தம் நிறையப் போய் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த சன்மதியை கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கடந்த பிறகே, அவ்வழியே வந்த ஆட்டோ டிரைவர் அள்ளி தன் வண்டியில் போட்டு, ஹாஸ்பிடலில் சேர்த்தார்.

உயிரை மட்டும் தான் காப்பாற்ற முடிந்தது. நசுங்கி சிதைந்துப்போன ஒரு காலை வெட்டி எறிய வேண்டிய கட்டாயம்.

கனவுகள் மலரும் டீன்ஏஜின் ஆரம்ப கட்டத்திலேயே சன்மதியின் சிறகுகள் முறிக்கப்பட்டு விட்டன.

கணவனை பறிகொடுத்த துக்கம் ஒருபுறம். அருமை மகள், ஊனமாகிப் போன அவலம் ஒருபுறம் என சொர்ணத்தின் கண்களில் உற்பத்தியான கண்ணீர் இன்று வரை நிற்கவே இல்லை. சன்மதிக்கு இரண்டு அண்ணன்கள். பெரியவன் சங்கரன், இளையவன் சதீஷ்.

சதாசிவம் பெரிதாய் எதுவும் சம்பாதித்து விடவில்லை. வயதிருக்கிறது. உழைத்து சேமித்து விடலாம் என்று நினைத்திருந்தவர், தான் பொசுக்கென்று போய் விடுவோம் என்று கற்பனை கூட செய்திருக்க மாட்டாரே!

தன் மகன் கையால் கொள்ளி வாங்கிக் கொண்டு போய்விடலாம் என்று காத்திருந்த நமச்சிவாயம், மகனின் அகால மரணத்தால் துடித்துப் போய்விட்டார்.

மகனுக்குப் பிறகு அந்த குடும்பத்தை அவர்தான் காப்பாற்றி வருகிறார். மாம்பலத்தில் துரைசாமி தெருவில் மூன்று மாடி வீடு இருந்தது.

அதில் பாதியை வாடகைக்கு விட்டு, கீழே மருமகள், பேத்தி, பேரன்களுடன் இருந்தார். வாடகைப் பணம் தான் குடும்பம் நடத்த உதவியது. இன்றைய தேதியில் அந்த மாடி வீடு, கிட்டத்தட்ட ஒரு கோடிக்கு போகும்.

அம்பது வருடத்திற்கு முன்பு ஆயிரம் ரூபாய்க்கு நிலம் வாங்கி, சில ஆயிரம் செலவுப் பண்ணி கட்டிய வீடு, ஏரியா டெவலப் ஆகி, வியாபாரத்தலமாகி, கட்டிடங்களின் மதிப்பும் சர்ரென்று ராக்கெட் வேகத்தில் ஏறிப்போய் விட்டது.

தாத்தாவிற்கு பேத்தி மீது தான் கொள்ளைப் பிரியம். அவளுடைய தேவைகளை அவர் தான் கவனித்துக் கொள்வார்.

ஹாலில் அன்றைய தினசரியுடன் அமர்ந்திருந்தார் நமச்சிவாயம்.

''அம்மாடி... சொர்ணம்... காபி...!'' என்று குரல் கொடுத்தார் தினசரியிலிருந்து கண்களை எடுக்காமலே!

''இன்னைக்கு உங்களுக்கு காபி கிடையாது. கஷாயம்தான்... இந்தாங்க, குடிங்க!'' டம்ளரை நீட்டினாள் சொர்ணம்.

''கஷாயமா? எனக்கா? ஏம்மா?'' பரிதாபமாய் மருமகளைப் பார்த்தார்.

''நைட்டெல்லாம் இருமிக்கிட்டே இருந்தீங்களே! அதுக்குதான்!''

''சூடா காபி குடிச்சாலே சரியாப் போயிடும். கஷாயம் வேண்டாம்மா!'' என்றார் கெஞ்சலாய்.

''குட்மார்னிங் நமச்சு!''

குரல் கேட்டுத் திரும்பினார் நமச்சிவாயம். சன்மதி!




''குட்மார்னிங் செல்லம்!''

''என்ன நமச்சு... காலையிலேயே உன் முகம் நசுங்கின டப்பா மாதிரி இருக்கு?'' சிரித்தபடி சக்கர நாற்காலியில் அவர்களருகே வந்தாள் சன்மதி.

''தாத்தாவை இப்படி பேர் சொல்லி கூப்பிடாதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்? கொஞ்சம் கூட மரியாதையில்லாம என்ன கெட்ட பழக்கமிது?'' அம்மா கண்டித்தாள்.

''பாரு நமச்சு! நீயும் நானும் க்ளோஸ் ஃப்ரெண்ட்ஸாயிருக்கறது அம்மாவுக்கே பொறாமை.''

''அதானே... என் பேத்தி என்னை அப்படித்தான் கூப்பிடுவா. இதிலே நீ தலையிடாதே.''

''சரி, நான் தலையிடலே! நீங்களுமாச்சு, உங்க பேத்தியுமாச்சு. இந்தாங்க... இதை குடியுங்க.''

''வேண்டாம்மா... பார்த்தாலே குமட்டுது.''

''என்ன இது? கஷாயம் போலிருக்கே?''

''ஆமாம்... அதேதான்.''

''இதையேன் தாத்தாவுக்கு தர்றே?''

''நைட்டெல்லாம் தூங்காம லொக், லொக்குனு இருமிக்கிட்டிருந்தார் உன் தாத்தா. இதை குடிக்கச் சொல்லு. சளியெல்லாம் கரைஞ்சிடும்.''

''அப்படியா நமச்சு? இந்த விஷயத்திலே நான் மிஸஸ் சதாசிவத்தோட பேச்சை கேட்டுத் தான் ஆக வேண்டி இருக்கு. எனக்காக இதை நீ குடிச்சிடுவியாம்... ப்ளீஸ்!''

''என்ன மதி நீயுமா?''

''ப்ளீஸ் மை டியர் ஃப்ரண்ட்... எனக் காக.''

கெஞ்சலும், கொஞ்சலுமாய் உதடை குவித்து பேசிய பேத்தியை பார்த்ததும் தளர்ந்த உடலும், சுருக்கம் விழுந்த முகமும் உற்சாக மாக, ஒரே மடக்கில் குடித்து விட்டார்.

''வெரிகுட் நமச்சு.''

''இப்ப உங்க பேத்தியைப் பத்தி ஒரு புகார் சொல்லப் போகிறேன். நீங்கதான் கண்டிக் கணும்.''

''மிஸஸ் சதாசிவம்... எதுக்காக இப்படி மாத்தி மாத்தி புகார் வாசிக்கறீங்க? போய் சமை யலை கவனியுங்க. எனக்கும் நமச்சுக்கும் பசிக் குது.''

''பாருங்க மாமா! டாக்டர் இவளை கண் விழிக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்காரா, இல் லையா? இவ நைட்டு ஒரு மணி வரைக்கும் கண் விழிச்சு எழுதிட்டிருக்கா. இவளுக்கு லேசா தலைவலின்னாக் கூட என்னால தாங்கிக்க முடி யாது. கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்க.''

''என்டா மதி... அம்மா சொல்றது நிஜமா?''

''இல்லே நமச்சு. 'தேவி'யிலே போட்டி வச்சிருக்காங்க. உன்கிட்டே கூட ஒரு கதை சொன்னேனே. அதைதான் எழுதிட்டிருந்தேன். நாளைதான் கடைசிநாள். அதனாலதான் அவசர அவசரமா எழுதிட்டிருந்தேன்.''

''இருந்தாலும் இந்த விஷயத்திலே அம்மா சொல்றதையும் கேட்டுக்கணும். எழுதற வேலையெல்லாம் எட்டு மணியோட முடிச்சுக் கணும். எழுத்தை விட என் மதியோட ஆரோக் கியம் முக்கியம் எனக்கு.''

''சரி... இனிமேல் அப்படி செய்ய மாட் டேன். ஆமா, நான் தூங்காம இருந்தது ஒருபக்க மிருக்கட்டும். நீ ஏன் அவ்வளவு நேரம் தூங்காம முழிச்சுக்கிட்டிருந்தே?'' என்றாள் அம்மாவி டம்.

''திடீர்னு விழிப்பு வந்திடுச்சு. அவ்வளவு தான்! டிபன் ரெடியாச்சு சாப்பிட வாங்க ரெண்டு பேரும். அப்புறம், நீ எழுதி வச்சிருக் கிற கதையை கொடு. மார்க்கெட் போகும் போது அப்படியே கூரியர்ல அனுப்பிடறேன்.''

சன்மதி வியப்புடன் அம்மாவையே பார்த் தாள்.

## தோலுரிக்கும் எந்திரம்

வெங்காயம் உரிப்பதற்கே நம் நாட்டு பெ[ண்] கள் இன்றும் விரலை நம்பிக் கொண்டிருக்கிற[ா] கள். ஆனால் இத்தாலி நாட்டிலோ, ஆப்பி[ள்] ஆகட்டும் தக்காளி ஆகட்டும் எதுவாக இருந்[தா] லும் தோல் எடுக்க எந்திரங்களையே பயன்படுத்[து] கின்றனர். இவை விரைவாக உரித்து தருவதுடன் சுத்தமாகவும் உரித்து தருகின்றன.

-வச்சலா பார்த்தசாரதி, பாரீஸ்.

''என்னடி அப்படிப் பார்க்கிறே?''

''நைட்டெல்லாம் எழுதக் கூடாதுன்னு சண்டை போட்டே! இப்ப என்னடான்னா நானே போய் கதையை கூரியர்ல அனுப்பிட் வர்றேன்னு கேட்கறே! உன்னைப் புரிஞ்சுக்கவே முடியலேம்மா.''

''அதான்டி ஒரு தாயோட பேராசைங் றது. தான் பெத்த குழந்தை மேல் தூசி, துரும்பு கூட படக்கூடாது. அதே சமயம் பேரும் புகழும் வாங்கணும். நீ கதை எழுதி பத்திரிகைகளும் படிக்கிறவங்களும் பாராட்டறதைப் பார்க் றப்ப எந்த தாய்க்குதான் சந்தோஷம் வராது?''

''ரொம்ப தாங்க்ஸ்ம்மா!''

''உதைப்படுவே... நன்றி கின்றின்னு சொன்னா. எடுத்து வை... மறந்துட்டுப் போ டப் போறேன்.''

''உனக்கு ஏம்மா சிரமம்? சங்கரன் அ ணன்கிட்டே கொடுத்தனுப்பிடறேன்.''

''அதெல்லாம் வேண்டாம். நானே அனு பிடறேன். மாமா நீங்களும் ரெடியாயிருங்க மதிய சமையலை முடிச்சதும் நாம டாக்ட கிட்டே போகிறோம்.''

''எம்மா... சாதாரண இருமலை பெரிசுப் டுத்தறே? அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். ஆகற வேலையைப் பாரு.''

''சின்னக் குழந்தை மாதிரி பிடிவாத பிடிக்காதீங்க மாமா.''

''சொன்னாக் கேளு சொர்ணம். அதா கஷாயம் குடிச்சிட்டேனே... சரியாப்போ டும்.''

''சரியாகலேன்னா... வர்றீங்க.''

''சரிம்மா'' என்றார் பெருமையாய் அலு தபடி.

''அம்மா டிபன் ரெடியா?'' என்றபடி வ தான் இளைய மகன் சதீஷ்.

''ரெடியா இருக்கு. வா சாப்பிடுவே. சங் ரன் எங்கே காணோம்.''

''என்னம்மா?'' சட்டையை மடித்து வி டபடி தன் அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டா





சங்கரன். முப்பது வயது இளைஞன். பார்க்க அழகாய் கம்பீரமாய் இருந்தான்.

அவனை விட இரண்டு வயது இளைய வன் சதீஷ். அழகிலும் கம்பீரத்திலும் குறைந்த வன் அல்ல. பிரைவேட் கம்பெனியில் நல்ல வேலையில் இருந்தான்.

சங்கரன் தன் மச்சினனுடன் சேர்ந்து வாட் டர்சப்ளை பிஸினஸில் ஈடுபட்டிருந்தான்.

''டிபன் சாப்பிட வா.''

''இல்லேம்மா... அமுதா வரச் சொன்னா... அங்கே போய் சாப்பிட்டுக்க றேன்.''

''சரி''

சங்கரன் போய் விட்டான்.

நமச்சிவாயம் அவனை பார்த்து பெரு மூச்சு விட்டார்.

''இப்ப உங்க இருமல் எப்படியிருக்கு தாத்தா?''

கண்மூடி ஈஸிசேரில் சாய்ந்திருந்த நமச்சி வாயம் கண் திறந்து சிரித்தார்.

''நான் நல்லாதான்டா இருக்கேன். உங்கம் மாதான் கொஞ்சம் ஆர்ப்பாட்டம் பண் ணிட்டா.''

''அதுக்காக உங்க ஹெல்த் விஷயத்திலே கேர்லெஸ்ஸா இருக்க முடியுமா? சரி... இந் தாங்க.''

''என்னடா?''

''இந்த மாத பெண்மணியிலே என் நாவல் வந்திருக்கு. வழக்கம்போல முதல் பிரதி என் பெஸ்ட் ஃப்ரண்ட் நமச் சுக்கு.'' அதுவரை பின் பக்கம் மறைத்து வைத் திருந்த புத்தகத்தை எடுத்து தாத்தாவிடம் நீட்டினாள்.

பரபரப்பாய் வாங் கிப் பார்த்த நமச்சிவா யத்தின் முகம் பெருமி தத்தில் அகன்றது.

பேத்தியின் கன் னத்தை அன்புடன் வருடி, தலையில் கை வைத்தார்.

''நீ நல்லா வரு வேடா! கடவுள் உனக்கு ஒரு குறையும் வைக்க மாட்டார். உயர்ந்த இடத்துக்குப் போகப் போகிறே.''

''இந்த காலை வச்சுக்கிட்டா?''

''ச...ன்...ம...தி...'' சடுதியில் முகம் வாடி யது.

''ஐய்யோ தாத்தா... நான் சும்மா விளை யாட்டுக்கு சொன்னேன். அதையேன் சீரியஸா எடுத்துக்கறே? அம்மாவும், என் நமச்சும் இருக் கும் போது எனக்கு என் குறையே மறந்து போச் சுத் தெரியுமா? சரி... நான் இப்ப ரொம்ப சந்தோ ஷமாயிருக்கேன். எனக்கு இன்னைக்கு நமச்சு தான் டிபனை ஊட்டி விடணும். சரியா?''

அடுத்த ஐந்தாவது நிமிடம் பேத்திக்கு இட் லியை ஊட்டி விட்டார் நமச்சிவாயம்.

சமையலறையில் இருந்து இந்தக் காட் சியை பார்த்துக் கொண்டிருந்த சொர்ணத்தின் கண்கள் கலங்கின.

அந்த நேரம் பார்த்துதானா அமுதா வீட்டிற் குள் நுழைய வேண்டும்?

தாத்தா பேத்திக்கு ஊட்டிக் கொண்டிருப் பதை நின்று ஒரு கணம் கிண்டலுடன் நோக்கி னாள்.

அவளைப் பார்த்த நமச்சிவாயம் ''வாம்மா'' என்றார்.

அவர் பேச்சை அலட்சியப்படுத்திய வளாய் முணுமுணுத்தபடி அவர்களை கடந்து சென்றாள்.

முணுமுணுத்தாலும் எல்லோரின் காதிலும் தெளிவாகவே விழுந்தது.

"கால்தான் இல்லே... கை கூடவா இல்லாமப் போச்சு? இந்த வீட்லே சின்னதுலேர்ந்து பெரிசு வரை ஒரு தினுசாதான் இருக்கு."

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும் நமச்சிவாயமும், சொர்ணமும் துடித்துப் போய் விட்டனர்.

தாத்தாவின் முகம் துவண்டுப் போனதைப் பார்த்து சிரித்து விட்டாள் சன்மதி.

"என்ன நமச்சு... உன் முகம் விளக்கெண்ணெய் குடிச்ச மாதிரி ஆகிப்போச்சு? நீ சிரிச்சாதான் அழகாயிருக்கே. சிரி."

"அ... அது... வந்து... நீ சாப்பிடும்மா!" தன்னை சமாளித்துக் கொள்ள முயன்றும் விழிகளோரம் ஈரம் படர்ந்தது.

திடுக்கிட்டாள் சன்மதி.

"ஆர்...யூ... சீரியஸ்? தாத்தா அழறியா என்ன?"

"ஒண்ணுமில்லேடா... தூசி விழுந்திடுச்சி."

"ஓ... அமுதா அண்ணி வீசிய குப்பையிலேர்ந்து விழுந்த தூசியா? இதோ பாரு தாத்தா. அது அவங்களோட குணம். நமக்கு தெரிஞ்ச விஷயம்தானே? புதுசா ஏன் வருத்தப்படணும். நான் ஃபீல் பண்றேனாப் பார்? என் நமச்சு கையால, இருபத்திரண்டு வயசு ஆனாலும் ஒரு குழந்தையாய் சாப்பிடற சுகம் எத்தனை பேருக்கு கிடைக்கும்? எனக்குக் கிடைச்சிருக்கு. நான் ரொம்ப ஹாப்பியாயிருக்கேன். ஒவ்வொரு நிமிஷத்தையும் என்ஜாய் பண்றேன். யாரைப் பத்தியும், எதைப் பத்தியும் கவலைப்படறதில்லே. பசிக்குது ஊட்டு... மசமசன்னு நின்னுக்கிட்டு..."

நமச்சிவாயம் கலக்கம் அகன்று மறுபடி உற்சாகத்துடன் ஊட்டத் தொடங்கினார்.




தன்னறைக்குள் நுழைந்த அமுதா கைப் பையை அலட்சியமாய் வீசியெறிந்து, கட்டிலில் மல்லாந்து விழுந்தாள்.

உடைகள் அடங்கிய அவளின் லெதர் பேகை சுமந்தபடி பின்னேயே நுழைந்தான் சங்கரன்.

"இந்த வீட்லே நடக்கிற மாதிரி கூத்தை வேற எந்த வீட்லேயும் நான் பார்த்ததில்லே... சே..."

"நீ எதைப்பத்தி சொல்றே அமுதா?" ப தாபமாய் கேட்டான் சங்கரன். அந்த கேள்வியை அவன் கேட்காமலேயே இருந்திருக்கலாம்.

"இல்லே நான் தெரியாமதான் கேக் றேன். ஊர்ல, உலகத்திலே வேற யாரும் ஊன மாப் பொறக்கலையா? என்னமோ, உங்க தங் சிக்கு மட்டும் தான் ஊனம்ங்கற மாதிரி ஆளாளுக்கு தாங்கு தாங்குனு, தாங்கறீங் ஊட்டி விடறதுக்கு ஒரு ஆள், தண்ணிக் குடி பாட்ட ஒரு ஆள்னு ரவுசுப் பண்றீங்க? அ ளுக்கு ஒரு கால் மட்டும் தானே இல்லை? கை இருக்கில்லே? தானே சாப்பிட தெரியாத குழ தையா அவ?"

"....?!"

"சரி... அந்தக் கிழவனும், உங்கம்மாவு இருக்கிறவரை தானே இந்த அலட்டலெல் லாம்? அதுக்குப்பிறகு, யார் தூக்கி வச்சு கொஞ் சுவாங்களாம்?"

"ஏன் அமுதா இப்படி பேசறே? பாவப் சன்மதி..."

"ஏதேது... கொஞ்சம் விட்டா நீங்களே அவளை இடுப்பிலே தூக்கி வச்சுக்குவீங் போல...!" எழுந்தமர்ந்து கணவனை முறைத் தாள்.

"அதுக்காக இல்லே... இப்ப எதுக்கும்ம இந்த பேச்சு? டிபன் ரெடியாயிருக்கு... சாப்பிட் டுக்க அமுதா! பிஸினஸ் விஷயமா உன் தம்ப் கூட பல்லாவரம் வரை போக வேண்டியிருக்கு எனக்காக வெய்ட் பண்ணுவான். நீயும் கூட சேர்ந்து சாப்பிட்டா... கிளம்பிடுவேன்!"

"எனக்கு இப்ப பசிக்கலே.. நான் அப்ப றமா சாப்பிட்டுக்கறேன். நீங்க சாப்பிட்டு கிளம் புங்க!" தங்கள் அறையில் இருந்த டி.வி.யை உயிர்ப்பித்து அதன் முன் அமர்ந்துக் கொண் டாள்.

சங்கரன் பெருமூச்சுடன் அகன்றான்.

"அமுதா வரலியா?" என்றபடி மகனுக்கு பரிமாறினாள் சொர்ணம்.

"பசிக்கலியாம்... அப்புறமா சாப்பிட்டு கறேன்னுட்டா..."

சமையலறைக்குள் குக்கர் விசிலடிக்க.. அதை கவனிக்க சென்று விட்டாள்.

அவசர அவசரமாய் தின்றதில் நெஞ்சில் அடைத்துக் கொண்டு இருமினான் சங்கரன்.

அவசரத்தில் சொர்ணம் தண்ணீர் வைக்க மறந்து விட்டாள்.

தன்னறைக்குள் துண்டாகிப் போயிருந் காலில் செயற்கை காலைப் பொருத்திக் கொண் டிருந்த சன்மதி கிட்டத்தட்ட விரைந்து வந்து ஃப்ரிட்ஜை திறந்து தண்ணீர் கொண்டு வந்து தந்தாள்.



அவள் விரைந்து நடக்கும் போது, வலி அதிகரிக்கும். நடையில் ஊனம் பளிச்சென்று தெரியும்.

குடித்து முடித்த சங்கரன் "தாங்க்ஸ் மதி" என்றான்.

"நிதானமா சாப்பிடுங்கண்ணா... என்ன அவசரம் இப்போ?"

"அவசரமா வெளியே போகணும் மதி!"

"அதுக்காக? அம்மாவாவது முன்னாடியே தண்ணி எடுத்து வச்சிருக்கலாம்!"

சன்மதியின் பதட்டம் சங்கரனுக்குள் நெகிழ்ச்சியை உண்டு பண்ணியது.

"உன் நாவல் வந்திருக்கா சன்மதி?"

"ஆமாம்... உங்களுக்கு எப்படி தெரியும்?" ஆச்சர்யமாய் பார்த்தாள்.

"தாத்தா சின்னப்பையன் மாதிரி சுறுசுறுப்பாய் சந்தோஷமாய் வளைய வந்துக்கிட்டிருக்காரே?"

"பல்லாவரம் போகணும்ங்கறதை மறந்துட்டு அப்படியென்ன அரட்டை அடிச்சிட்டிருக்கீங்க?" அறை வாசலில் நின்றபடி குரல் கொடுத்தாள் அமுதா.

"இல்லே அமுதா.. சாப்பிட்டாச்சு... இதோ புறப்பட்டாச்சு!" தட்டிலேயே கையை கழுவியவன் விறுவிறுவென வெளியேறினான்.

சன்மதி அண்ணனையே பரிதாபமாகப் பார்த்தாள்.

கிளம்பிய அவசரத்தில் ஹெல்மெட் கூட எடுக்காமல் வந்திருந்தான் சங்கரன். சர் சர்ரென்று கடந்துச் சென்ற வாகனங்களை கிலியுடன் பார்த்தபடி பைக்கை ஓட்டினான். சராசரி வேகம் தான். அவனுக்கு எப்போதுமே பயமும், முன்னெச்சரிக்கையும் உண்டு. ரதத்தை பார்த்தால் மயக்கம் வரும். பைக்கில் சென்றால் ஹெல்மெட் இல்லாமல் செல்ல மாட்டான். அமுதாவினால் ஏற்பட்ட பதட்டத்தில் மறந்து விட்டான்.

திருமணமாகி இரண்டு வருடமாகி விட்டது. ஏனோ, அவளுக்கு பார்த்த மாத்திரத்திலேயே சன்மதி ஆகாதவளாகி விட்டாள்.

அமுதா அண்ணன் தம்பியோடு பிறந்திருந்தாலும் வீட்டிற்கு ஒரே செல்லப்பெண்! ஓரளவு வசதியான குடும்பம் என்பதால் ரொம்ப செல்லமாய், விரல்நகத்தில் அழுக்குப்படாமல் அலட்டலோடு வளர்ந்தாள். எந்த விஷயத்திலும் அவளுக்கு முன்னுரிமை கொடுத்தாக வேண்டும். அப்பா ஸ்வீட் வாங்கி வந்தால், அவளுக்குதான் முதலில் கொடுக்க வேண்டும். டி.வி.யில் அவளுக்கு பிடித்த சேனல் தான் வைக்க வேண்டும். அவளுக்கு பிடித்ததையே சமைக்க வேண்டும். அம்மாவோ அப்பாவோ, அவளை தான் கொஞ்ச வேண்டும். அமுதா நல்ல அழகி. படிப்பிலும் கெட்டி என்பதால் அவள் அலட்டலுக்கு அளவேயில்லாமல் போயிற்று.

தரகர் மூலமாக தான் சங்கரின் வரன் வந்தது. அப்போது அவன் ஒரு தனியார் கம்பெனியில் பணிபுரிந்து கொண்டிருந்தான். விசாரித்த வரையில் எந்த கெட்ட பழக்க வழக்கமும் இல்லாத நல்லியல்புகள் கொண்டவன் என்பது தெரிய வந்தது. தவிர கம்பீரமான அழகனாகவும் இருந்தான். போட்டோவிலே அமுதாவிற்கு அவனை ரொம்பவே பிடித்துவிட்டது. குடும்பமும் அருமையான குடும்பம். அதனால் உடனே பேசி முடித்து விட்டனர்.

திருமணத்திற்கு பிறகு, தன் இளைய மகனுக்கும், மருமகனுக்குமாக சேர்த்து பிஸினஸ் வைத்து கொடுத்தார் அமுதாவின் அப்பா.

பல கனவுகளுடன் அந்த வீட்டில் அடியெடுத்து வைத்த அமுதா அதிர்ந்துப் போனாள். தான் தான் அழகி என்று நினைத்திருந்தவளுக்கு, எளிமையாய், ஆனால் அதுவே பேரழகாய் வீற்றிருந்த சன்மதியை கண்டதும் முதல் பார்வையிலேயே பொறாமை எட்டிப்பார்த்தது. ஊனமுற்றவள் என்றதும் ஏனோ ஒரு சந்தோஷம். அந்த வீட்டில் அவளை உள்ளங்கையில் வைத்து தாங்குவதும், கொஞ்சுவதும் வெறுப்பை வரவழைத்தது. 'மருமகள் வந்து விட்டாள்... அப்பாடா' என்ற நிம்மதியுடன் சொர்ணம் அமுதாவை சமைக்க சொல்ல, பலமாய் தலையாட்டி மறுத்தாள் அமுதா.

"சமையலா? அதெல்லாம் எனக்குத் தெரியாது!" என்றாள்.

போதாதற்கு அவளை உட்கார வைத்து அவளுக்கு வேண்டியதையெல்லாம் சொர்ணமே செய்து தர வேண்டிய நிலை.

யாரிடமும் பழக பிடிக்கவில்லை.. "அண்ணி" என்று ஆசையோடு நெருங்கும் சன்மதியிடம் பேசவே பிடிக்கவில்லை.

சங்கரனுக்கு இயல்பாகவே தங்கை மீது பாசம். அதுவும், ஒரு கால் இல்லாதவள் என்ற பரிதாபம் அதிக பாசத்தை விதைத்திருந்தது.

பெரும்பாலும் சன்மதி செயற்கை காலுடன் தான் நடமாடுவாள். அவ்வப்போது அடி

பட்ட காலில் வீக்கமும், வலியும் வருவதுண்டு. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் செயற்கை உப கரணத்தை தவிர்ப்பதுண்டு. அப்போது ஓரிடத்தி லிருந்து இன்னொரு இடம் செல்ல அவசியம் பிறர் உதவி தேவைப்பட்டது.

அப்படி ஒரு நாள். சன்மதி ஹாலில் எழு திக் கொண்டிருந்தாள். எழுதி முடித்ததும், அவ ளின் படுக்கையறைக்கு செல்ல வேண்டும். வீக் கம் இருந்ததால்... மற்றவரின் தோளில் கைபோட்டு, ஒரு காலை ஊன்றி நடக்க முடி யாது. வீல் சேரில் அமரக்கூட சப்போர்ட் தேவைப்பட்டது.

உதவிக்காக தன் பெரிய அண்ணனை அழைத்தாள். குளித்து முடித்து குளியலறையிலி ருந்து அப்போது தான் வெளிப்பட்ட சங்கரன், தங்கையிடம் ஓடினான்.

''என்னம்மா?''

''என்னை இந்த வீல்சேரில் உட்கார வைத்து விடுண்ணா ப்ளீஸ்! தலை வலிக்குது... படுக்க வேண்டும் போல் இருக்கி றது!''

''அதற்கேன் மதி கெஞ்சவதுப் போல் கேட்கிறாய்? நான் உன் அண் ணன்டா... இதைக்கூட செய்ய மாட் டேனா?'' என்றவன் அவளை அலேக் காக இருகைகளிலும் ஏந்தி அவளின் அறை நோக்கி நடந்தான்.

''அண்ணா... அவ்வளவு தூரம் எதற்கு? இந்த வீல் சேரிலேயே...''

''இதிலென்ன சிரமம் எனக்கு? சும்மாயிரு! உடம்பு கூட சூடாயிருக் குது. உடம்பு முடியாத போதும் எழுதி தலைவலியை வரவழைத்துக் கொள்ள வேண்டுமா?''

''எழுதுவதால் தான் என்னை நான் உற்சாகப்படுத்திக் கொள்கி றேன்.''

''எழுத்தாளராயிற்றே... உன்னிடம் பேசி என் கூற்றை நிலைப்பற்றிவிட முடியுமா என்ன?''

பெருமையாய் கூறியபடி அவளை ஒரு குழந்தையைப் போல் படுக்கையில் கிடத்தி போர்த்தி விட்டான்.

அப்போது தான் கோவிலிலிருந்து வீடு திரும்பிய அம்மாவிடம் சன்மதிக்கு காய்ச்சல் இருப்பதை சொல்லி மாத்திரை தரச் சொல்லி விட்டு தன் அறைக்குச் சென்றான்.

அமுதா அவனுக்காகவே காத்திருந்தாள்.

''ஏன் வந்தீர்கள்? அங்கேயே இருந்து கொஞ்சி குலாவி விட்டு வரவேண்டியது தானே?''

''நீ என்ன சொல்கிறாய் அமுதா? எதைப் பற்றி சொல்கிறாய்?'' என்றான் புரியாமல்.

''ஆஹா... ஒன்னுமே புரியாததுப்போல் என்ன நடிப்பு? அந்த கால் இல்லாதவளை கையால தொட்டு தூக்கிட்டுப் போனீங்களே... அந்த கண்றாவியைப் பற்றிதான் சொல்கிறேன். சே... வெட்கங்கெட்ட ஜென்மங்கள்!''

''ஷட் அப் அமுதா! சன்மதி என் கூடப்பி றந்த தங்கை. நினைவிருக்கட்டும்!''

''அட... கோபம் கூட வருகிறதா? கூடப் பிறந்தவளா இருந்தா என்ன? பக்கத்து வீட்டில் பிறந்தவளா இருந்தா என்ன? பொண்ணு, பொண்ணு தானே? நானெல்லாம் என் அண் ணன் தம்பிகளை தொடக்கூட விட்டதில்லை. இங்கே என்னடான்னா...''

''ப்ளீஸ்... அமுதா! ரத்த பந்தத்தை கொச் சைப்படுத்தாதே!''



## 'ரோபோட்டை இயக்கும் செல்போன்'

மனிதன் செய்யும் வேலைகளை இப்போது ரோபோட்டே செய்கின்றன. குறிப்பாக வீட்டு வேலைகளை ரோபோட்டுகளே செய்கின்றன. ஜப் பானில் இது கன்கூடு. இப்போது இதில் மேலும் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

ரோபோட்டுகளை இயக்கும் செல்போன் களை ஜப்பானிய மொபைல் போன் நிறுவனமான என்.டி.டி. அறிமுகப்படுத்தி உள்ளது. டி.வி. நிகழ்ச்சிகளை பதிவு செய்வது, ஏ.சி. மற்றும் மின் விளக்குகளை ஆன், ஆப் செய்வது போன்ற வேலைகளை ரோபோட் மூலமாகவே செய்ய இந்த செல்போன்களிலேயே கட்டளையிடும் வகையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இனி செல்போன்கள் பேசுவதற்கு மட்டு மல்ல; ரோபோட்டுகளை இயக்கும் கருவியாகவும் டூ-இன்-ஒன்னாக செயல்படும்.

ஜப்பானியர்கள் 'செல்போன்'களில் போகப் போக என்னென்ன வித்தைகளை நிகழ்த்தப் போகி றார்களோ?

-சுகன்யா.



''நீங்க இனியொரு முறை அவளை தொட்டு தூக்கினா நம்ம பந்தம் அறுந்து போகும் பரவாயில்லையா?''

''அ...மு...தா!''

''என் புருஷன் என்னைத் தவிர வேறெந்த பொண்ணையும் தொடக்கூடாது... தங்கையா இருந்தாலும் கூட.''

சங்கரன் நொறுங்கிப் போனான்.

அமுதாவின் அனல் பேச்சு அறையைத் தாண்டி எல்லோர் காதிலும் விழுந்து இதயத் தைப் பொசுக்கியது.

அன்றிலிருந்து பிடித்தோ, பிடிக்காமலோ மனைவிக்கு அடங்கிப் போனான் சங்கரன்.

பெருமூச்சு விட்டபடி வண்டியை செலுத் தினான்.

4

தென்றல் ஜில்லிப்பாய் எலும்பை ஊடு ருவி கிச்சு கிச்சு மூட்டியது. பவுர்ணமிக்காக வளரத் துவங்கியிருந்த நிலவை கையகப்படுத்த நகர்ந்து வந்துக் கொண்டிருந்தது வெண்மேக கூட்டமொன்று.

நமச்சிவாயம் லேசாய் இருமியபடி சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்தார்.

வீட்டின் முன்புறம் முப்பதடி பரப்பில் செழித்துக் குலுங்கும் தோட்டத்தில் இது போன்று அமர்ந்திருப்பது அவருக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

சொர்ணம் கையில் டம்ளருடன் அவரை நோக்கி வந்தாள்.

''என்ன மாமா காத்து ஜிலுஜிலுன்னு வீசுது! இருமல் வேற... இங்கே வந்து உட்கார்ந் திருக்கீங்க?''

''பழகிப் போச்சம்மா. இந்த வெட்ட வெளியும், பச்சை தாவரங்களும், காற்றும் தர்ற நிம்மதி, நாலு சுவர் தரலியேம்மா.''

''இந்தாங்க... முதல்ல இந்த பாலைக் குடிங்க மாமா. மஞ்சள்தூள் சிட்டிகை போட்டு, மிளகை தட்டிப் போட்டிருக்கேன். வறட்டு இரு மலுக்கு ரொம்ப நல்லது.''

''சன்மதிக்கு கொடுத்திட்டியாம்மா?''

''ஆச்சு மாமா. இந்நேரம் தூங்கிட்டி ருப்பா.''

''இப்படி கொஞ்சம் உட்காரம்மா... பேச ணும்.''

''என்ன மாமா?'' வியப்புடன் எதிரே கல் திட்டில் அமர்ந்தாள் சொர்ணம்.

''காலைலே அந்தப் பொண்ணு அமுதா பேசினதைக் கேட்டேயில்லே?''

''அது அவளோட சுபாவம் மாமா. என்ன பண்றது?''

''எனக்கு நம்பிக்கையே போய்டுச் சும்மா.''

''யார்மேலே?''

''ரெண்டு பிள்ளைங்க மேலேயும்தான். நான் இன்னும் எத்தனை வருஷம் உயிரோட இருக்கப் போறேன்? நீயும் நூறு வயசா வாழப் போறே? நமக்குப் பிறகு இந்த பசங்க தங் கையை பார்த்துப்பாங்கன்னு நம்பினேன். ப்ச்... இந்த வீட்டுக்கு புதுசா வந்தவ என் சன்மதி யோட மனசை குத்தி கிழிக்கிறா. அவளை ஒரு வார்த்தை பேசி அடக்க முடியலியே சங்கர னால்? பொண்டாட்டி வந்ததும் கூடப் பிறந்தவ ளைப் பத்தி கவலைப்படாம பொண்டாட்டி முந்தானையிலே ஒளிஞ்சுக்கிட்டானே?''

''சங்கரனை சொல்லி என்ன இருக்கு மாமா? அவன் அப்பாவின்னு தெரிஞ்சிதான் ஆட்டிப் படைச்சிட்டிருக்கா அமுதா. ஆனா, எல் லோரும் அவளை மாதிரியே இருந்துட முடி யுமா? சதீஷ்க்கு மனைவியா வரப்போகிறவ... மனிதாபிமானம் உள்ளவளா இருக்கலாமில் லையா?''

''அவளும் அமுதாவை மாதிரியே இருந் துட்டா?''

''நல்லதையே நினைப்போமே மாமா.''

''அதே சமயம் அல்லாததையும் நினைப் போமே.''

''.....?''

''கடவுள் ஒரு விதத்தில் என் சன்மதியிடம் இரக்கமில்லாமல் நடந்திருந்தாலும், சரஸ்வதி கடாட்சத்தை நிறையவே கொடுத்திருக்கிறார். நாடறிந்த எழுத்தாளராவது எல்லோராலும், எண்ணியபடியே முடிகிற காரியமா? அவளோட அறிவுக்கும் அழகுக்கும் அருமையான வாழ்க்கை அமையப் போகுது பார்.''

''மா... மா.''

''ஆமாம்மா... என் சன்மதிக்கு சீக்கிரமே கல்யாணம் பண்ணனும். அவளுக்கும் வயசாகிட்டே வருதே.''

''எப்படி மாமா? நடக்கிற காரியமா? நல்லா நடக்கிற பொண்ணுங்களுக்கே கல்யாணம் குதிருவது பெரும்பாடா இருக்கு. நடக்க முடியாத என் பொண்ணை...'' என்று விசும்பினாள்.

''அழாதே சொர்ணம். நாட்டிலே எத்தனையோ நல்ல குணமுள்ள ஆண்கள் இருக்கிறார்கள். அதில் ஒரு தங்கமான பையனை என் சன்மதிக்காக பார்த்து முடிப்பேன்'' என்றார் உறுதியுடன்.

தயார் நிலையில் இருந்தாள் சன்மதி. முகத்தில் லேசாய் பதட்டம்.

''ஏன்டி டிபன் கூட வேண்டாங்கறே?'' கவலையாய் கேட்டாள் சொர்ணம்.

''எக்ஸாம் டென்ஷன்ல இருக்கேன்... இறங்காதும்மா. எழுதி முடிச்சிட்டு வந்து சாப்பிடறேன்.''

''அதுவரைக்கும் வெறும் வயித்தோட இருக்கப் போறியா? எதுக்கு பரீட்சை, கிரீட்சைன்னு உன்னை நீயே கஷ்டப்படுத்திக்கறே?''

''இதிலே என்னம்மா கஷ்டமிருக்கு? எனக்கு ஒரு கால் மட்டும்தான் இல்லே. ஆனா நிறைய தைரியமும், தன்னம்பிக்கையும் இருக்கு. உலகத்தை நாம எப்படிப் பார்க்கிறோமோ, அப்படித்தான் உலகமும் நம்மை பார்க்கும். நான் ஊனமாயிருக்கேன்ங்கற எண்ணமே எனக்கில்லேம்மா. என்னை அனுதாபத்தோட பார்க்கிற கண்களை தவிர்க்க நினைக்கிறேன். ஆச்சர்யமா பார்க்கிற கண்களை எதிர் கொள்ள ஆசைப்படறேன். நான் எழுதப்போகிற இந்த பேங்க் எக்ஸாமிலே பாஸாகிட்டேனா... பேங்க்லே வேலை கிடைக்கும். அது பெரிய விஷயமில்லையா?''

''வேலைக்கெல்லாம் எப்படி போவே சன்மதி?'' மிரட்சியுடன் கேட்டாள் சொர்ணம்.

''ஏன் முடியாது? மனசு தயாராயிருந்தா உடம்பு சொல்றதை செய்யும். ரெண்டு கைகளையும், ஒரு காலையும் இழந்த பனிரெண்டு வயசு சிறுவன் ஓவியப் போட்டிகள்ல கலந்துக்கிட்டு முதல் பரிசா வாங்கி குவிக்கலையா? அதுவும் அவன் வரைஞ்சது எதால தெரியுமா? மிஞ்சியிருக்கிற ஒரே காலால! அவனைப் போல் நிறைய பேர் இருக்காங்கம்மா. அவங்ககிட்டே இரு கிற தன்னம்பிக்கையிலே பத்து சதவீதம் கூட எனக்கு இல்லேன்னா, நான் உயிர் வாழறதி லேயே அர்த்தமில்லேம்மா. முதல்ல நா உன்னை மாத்தணும். இவோன்னு எப்பவும் ப தாபமா என்னைப் பார்க்கிற பார்வையை மாத் ணும். நான் சவலைப் பெண்ணல்ல... சாதனை பெண். புரியுதா?''

''வெரிகுட்... வெரிகுட் சன்மதி'' கை ளைத் தட்டியபடி வந்தார் நமச்சிவாயம்.

''ரொம்ப பெருமையா இருக்குடா உ னைப் பார்க்கும் போது.''

''குட்மார்னிங் நமச்சு. நைட்டெல்லா ஃபீவர் இருந்ததே. இப்ப எப்படி இருக்கு?''

''இருந்த கொஞ்ச நஞ்ச காய்ச்சலும் உ னைப் பார்த்ததும் ஓடியேப் போச்சு. எக்ஸ முக்கு ப்ரிப்பேர்டா இருக்கியா?''

''ம்... கரைச்சு குடிச்சாச்சு''

''மாமா... நீங்க எடுத்து சொல்லுங்க டிபன் வேண்டாங்கறா.''

''ஏன்டா வேணாங்கறே?''

''கொஞ்சம் டென்ஷனாயிருக்கு. வந்துட் சாப்பிட்டுக்கறேன்.''

''வெறும் வயித்தோட எழுத ஆரம்பிச்ச களைப்புல படிச்சது நினைவுக்கு வராது. டிப வேண்டாம். ராகி கஞ்சியாவது குடிச்சிட்டுதா போகணும். நீ போய் எடுத்துட்டு வாம்மா என்று மருமகளை அனுப்பி வைத்தார்.

''என்ன நமச்சு நீ வேற?'' சிணுங்கினாப சன்மதி.

''எக்ஸாம் சென்டர் எங்கே?''

''அண்ணா ஆதர்ஷ்.''

''கூட நான் வரட்டா?''

''ரொம்ப டயர்டா தெரியறே நமச்சு ரெஸ்ட் எடுத்துக்க... சதீஷ் அண்ணன் கூட போய்க்கறேன்.''

சற்று நேரத்தில் டம்ளருடன் வந்தா சொர்ணம்.

அதை வாங்கிப் பருகினாள் சன்மதி.

சதீஷ் பைக் சாவியை சுழற்றியபடி அவ களை கடந்துச் சென்றான்.

''சதீஷ்'' என்றழைத்தார் தாத்தா.

''என்ன தாத்தா?''

''சன்மதி இன்னைக்கு பேங்க் எக்ஸாம் எழுதப் போகிறா.''

''வெரிகுட்... ஆல் தி பெஸ்ட் சன்மதி.''

''தாங்க்யூண்ணா.''

''அவளை கூட்டிட்டுப் போய், இருந்து பத்திரமா அழைச்சிட்டு வா.''

''நானா? ஸாரி தாத்தா... எனக்கு முக்கியமா வேற வேலை இருக்கு.''

''இன்னைக்கு உனக்கு ஆபீஸ் லீவாச்சே?''

''ஆபீஸ் தவிர வேற வேலையே இருக்காதா? சே!''

''அண்ணா நீ கிளம்பு... நான் பார்த்துக்கறேன்.''

விட்டால் போதும் என்று நிமிடத்தில் காணாமல் போனான்.

''சே... என்ன பசங்க இவங்க. கொஞ்சம் கூட பொறுப்பில்லாம இருக்கானுங்களே. நேரமாகுதே... இப்ப என்ன பண்றது?'' டென்ஷனானார் நமச்சிவாயம்.

''இப்ப என்னாகிப்போச்சு நமச்சு? நானே பாய்க்கறேன். பாவம் அண்ணனுக்கு முக்கியமான வேலை இருக்கும் போது டிஸ்டர்ப் பண்ணலாமா?''

''இதை விடவும் என்னம்மா முக்கியமான வேலை?''

''சரி... விடு நமச்சு. ஒரு ஆட்டோ கூட்டிட்டு வந்துடேன்.''

''ஒரு நிமிஷம் இரு. டிரஸ் மாத்திட்டு வந்தறேன்.''

''ஆட்டோ கூட்டிட்டு வர மேக்கப்பா?'' கிண்டல் பண்ணினாள்.

''நான் உன்கூட வரப்போகிறேன்.''

''வேணாம் நமச்சு... உடம்பு சரியில்லாப்ப...''

''என்ன பெரிய உடம்பு? நான் முடிவு பண்ணியாச்சு'' என்றபடி ஓடினார்.

சன்மதி தாத்தாவை நெகிழ்ச்சியுடன் பார்க்க... சொர்ணம் பெருமூச்சு விட்டபடி நகர்ந்தாள்.

ஆட்டோ விரைந்தோடியது.

காற்றில் கூந்தல் அலை பாய்ந்தது. ஒரு கையால் ஒதுக்கி விட்டவள் தாத்தாவின் மேல் ...ரம் பட்டது.

சுட்டது.

''என்ன தாத்தா... உன் உடம்பு ரொம்ப கொதிக்குதே?'' பதறினாள்.

''வரும்போது மாத்திரை சாப்பிட்டுதான் வந்தேன். சரியாப் போய்டும்.''

''சொன்னாக் கேக்கறதில்லே. சாய்வா உட்கார்ந்துக்க தாத்தா.''

''சரி'' என்றபடி சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

'என்னால தாத்தாவுக்கு கஷ்டம்' மனசு சங்கடப்பட பார்வையை வலப்பக்கமாய் திருப்பியவள்... அதிர்ந்தாள்.

சிக்னல் விழ காத்திருந்த வண்டிகளில்... சதீஷின் பைக்கும் ஒன்று.

பைக்கில் அவன் மட்டுமில்லை. அவன் கழுத்தை கொஞ்சமும் லஜ்ஜையின்றி இறுக வளைத்து அவனோடு ஒட்டி அமர்ந்திருந்தாள் சுரிதார் அணிந்திருந்த இளம் பெண்ணொருத்தி.

பயத்துடன் மெல்ல திரும்பி தாத்தாவைப் பார்த்தாள்.

நல்லவேளை... கண்களை மூடியிருந்தார்.

சிக்னல் கிடைத்ததும் சர்ரென சீறிப் பாய்ந்த பைக், ஆட்டோவை விட்டு வெகுதூரம் போன பின்பே... சன்மதியின் இதயத்துடிப்பு சீரானது.




போஸ்ட்மேன் கொடுத்துவிட்டுச் சென்ற கத்தைக் கடிதங்களை பிரம்மிப்புடன் பார்த்தாள் சன்மதி. அத்தனையும் தாத்தாவிற்கு வந்தவை.

''போஸ்ட்மேன் வந்தானா?'' தோளில் கிடந்த துண்டால் முகத்தை துடைத்தபடி பேத்தியின் அருகில் வந்தார்.

''ஆமாம்! இவ்வளவு லெட்டர்ஸாம் உனக்கு வந்திருக்கு! எங்கிருந்து, யார் அனுப்பியிருக்காங்க?'' என்றாள் ஆச்சர்யமாய்.

''எல்லாம் உன் சம்பந்தமாகத்தான்!''

''புரியலே!''

''மணமகள் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் கொடுத்தேன். பார்த்தியா... இந்த ராஜகுமாரிக்காக எத்தனை ராஜகுமாரனுங்க போட்டிபோட்டு அப்ளிகேஷன் போட்டிருக்காங்க?'' பெருமை வழிந்தது நமச்சிவாயத்துக்கு.

''நமச்சு... நீயுமா?''

''மதி... என்னடா... ஏன் அழறே?''

''நீயும் என்னை அசிங்கப்படுத்தறே பார்த்



நியா?''

''ஐயோ... என்னடா நீ? புரியுது... நீ எதை நினைச்சு அழறேன்னு புரியுது. விளம்பரத்திலேயே உன்னைப் பத்தி விவரமா சொல்லிட்டேன். போதுமா?''

''எனக்கு எதுக்கு தாத்தா இதெல்லாம்? நான் கல்யாணம் கேட்டேனா? காலம் முழுக்க என்னை சகிச்சுக்கிட்டு குடும்பம் நடத்த... ஒரு ஆணோட வாழ்க்கையை பணயம் வைக்கணுமா?''

''அடடா... என்னாச்சு உனக்கு? இவ்ளோ கோழைத்தனமா, சுயவிரக்கத்தோட பேசக்கூடியவளில்லையே என் மதி? நீ குறைன்னு நினைக்கிறது எதுவும் உனக்கு குறையே இல்லை. மனசை விசாலமா வச்சுக்க முடியாம, யாரிடமும் அன்பா பழகத் தெரியாம, விட்டுக் கொடுத்துப் போகாமசுய நலமா வாழறாங்களே... அவங்கதாம்மா குறையுள்ளவங்க! நீ யாரு? எப்பேர்ப்பட்ட புத்திசாலி? தமிழ்நாட்டு மக்களுக்கு பரவலா அறிமுகமான எழுத்தாளர் ஆயிற்றே? ஊருக்கு மட்டும் தான் உபதேசமா? உன் கதையிலே வர்ற கதாநாயகிகளை மாதிரி நீயும் தைரியமான, தன்னம்பிக்கையான பொண்ணில்லையா? இங்கே பாருடா... இயலாததாகக் காணப்படும் ஒன்று எப்பொழுதும் உண்மையாக இருந்ததில்லை. எந்தக் காரியத்திலும் வெற்றி

யின் முதல்படிங்கறது. அந்தக் காரியத்தில் ஆர்வம் கொண்டிருப்பதுதான். புரியுதா?''

''சரியா வருமா தாத்தா?''

''ஏன் வராது? எல்லாம் நான் பார்த்துக்கறேன். இதிலே ஒரு நல்லவனை தேர்ந்தெடுக்கிறேன்''

என்றாலும் சன்மதியின் மனதில் சஞ்சலம் குடி கொண்டிருந்தது.

நமச்சிவாயம் இங்குமங்குமாக சுறுசுறுப்பாய் நடந்துக் கொண்டிருந்தார். சுத்தமாய் இருந்த நாற்காலிகளை மறுபடி துடைத்தார்.

சதீஷ், அடையார் ஆனந்த பவனிலிருந்து வாங்கி வந்த ஸ்வீட் பாக்கெட்டுகளை அம்மாவிடம் நீட்டினான்.

''வேற ஏதாவது வேணும்னா இப்பவே சொல்லிடு. அப்புறம் போக மாட்டேன்!''

''அப்படியே பூக்கடைக்கு போய் மல்லிப்பூ வாங்கிவர சொன்னேனே!''

''ஸாரிம்மா, மறந்துட்டேன்... திரும்ப அவ்வளவு தூரம் என்னால போக முடியாது. இங்கேயே எங்காவது வாங்கிக்க...!''

''இங்கே பூ சின்ன சின்னதா இருக்கும், கொஞ்சம் சிரமம் பார்க்காம...''

''ஆளைவிடும்மா! சும்மா பொண்ணு பார்க்க வர்றதுக்கே இவ்ளோ ஆர்ப்பாட்டமா?''

''ஏன் சதீஷ் இப்படி பேசறே? சன்மதி உன் தங்கச்சி. அவமேலே உனக்கு அக்கறை இல்லையா?''

''அதெப்படி இல்லாமப் போகும்? எதையும் ஒரு எதிர்பார்ப்போட, ஆடம்பரமாப் பண்ணாதே! வர்றவங்களுக்கு அவளைப் பிடிக்காம போய்ட்டா எல்லாமே வீண்தானே? ஏமாற்றம் தானே? கல்யாணம் முடிவாகட்டும்... நீ சொல்றதையெல்லாம் செய்யறேன். ப்பா... பயங்கர வெயில்... நான் போய் ஒரு குளியல் போட்டுட்டு வந்திடறேன்.''

போய் விட்டான்.

சொர்ணத்தின் கண்கள் கலங்கிவிட்டன.

நமச்சிவாயம் சிரித்தபடி மருமகளை நெருங்கினார்.

''இதுதான்... இவ்ளோதான் உன் பிள்ளைங்களோட பாசம். புரிஞ்சுதா? பெரியவன், தகப்பன் ஸ்தானத்துல கிட்டே இருந்து பண்ணணும். அவன் என்னடான்னா... பொண்டாட்டி காலையிலே அம்மா வீட்டுக்கு கிளம்பியதும் கூடவே கிளம்பிட்டான். அப்படி என்னம்மா பொண்டாட்டி மேலே பயம்? சன்மதிக்கு கல்யாணம் எவ்வளவு அவசியம்ங்கறதை இப்பவாவது புரிஞ்சுக்கிட்டியா?''

''யாரையும் நம்பத்தான் முடியலே... ஹூம்... எல்லாம் என் தலையெழுத்து! விடுங்க மாமா... நீங்க எதுக்கு தூசியை தட்டிக்கிட்டு... டஸ்ட் அலர்ஜி உங்களுக்கு. நான் பார்த்துக்கறேன்... நீங்க ரெஸ்ட் எடுங்க.''

''பொண்ணு பார்க்க வர்றது என் மதிக்குட்டியை. மூலையிலே முடங்கிக் கிடக்க முடியுமா? எந்த அலர்ஜியும் என்னை ஒன்னும் பண்ணாது. நீ உன் வேலையைப் பாரும்மா!''

''சரி... இந்த வேலையை விட்டுட்டு உங்க பேத்தி ரெடியாகிட்டாளான்னுப் போய் பாருங்க!''

''சரி... சமையல் எல்லாம் தயாராய்டுச்சில்லே?''

''ஆச்சு... சமையலறையை சுத்தம் பண்ணிட்டா வேலை முடிஞ்சது!''

நமச்சிவாயம் பேத்தியின் அறைக்குள் நுழைந்தார்.

சன்மதி கட்டிலில் அமர்ந்தபடி ஜன்னலையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

கத்திரிப்பூ நிறத்தில், கண்ணை உறுத்தாத சரிகை பார்டரில் பெங்கால் காட்டன் சேலையும், அதே வண்ணத்தில் ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். லேசாக பவுடரை பூசியிருந்ததில் பளிச்சென்றிருந்தது முகம். தலையில் ஒரு முழ முல்லைப்பூ! மெலிதாய் ஒரு செயின், வளையல் என எளிமையான அலங்காரத்திலும் சுடர்விடும் ஜோதிப் போல் இருந்தாள்.

''அட்டடா... என் மதிக்குட்டியா இது! இந்த புடவையிலே எவ்ளோ தெய்வீகமா இருக்கிறே தெரியுமா? ஆனா, தலையிலே பூ தான் கொஞ்சமாயிருக்கு!''

''சதீஷ் அண்ணா சொன்ன மாதிரி இதுக்குப் போய் ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் தாத்தா? நல்லா அலங்கரிச்சுக்கிட்டு ஒரு கும்பல் நடுவே கண்காட்சிப் பொருளா நிறுத்தறது... நினைக்கறது அசிங்கமாயிருக்கு தாத்தா. இதையே ஃப்ரண்ட்லியா, ஃபார்மல் விசிட்டா, சாதாரணமா பேசிக்கிட்டு... இப்படி இயல்பா நடந்தா நல்லாயிருக்குமே!''

''புரியுதுடா! ஆனா, சம்பிரதாயம், சாஸ்திரம்னு நிறைய பேர் இப்படிதான் குண்டு சட்டியிலே குதிரை ஓட்ட ஆசைப்படறாங்க. இதெல்லாம் மாறணும், மாறும்... அடுத்த ஜெனரேஷன்லேயாவது.''

''ஆனாலும்... என்னவோத் தெரியலே மனசு படபடங்குது!''

''எல்லாப் பெண்களுக்கும் ஏற்படற ப[...]



டம் தான் இது! பயப்படாதேடா... இப்ப வரப் போறவங்களும் சாதாரண இடமில்லே. மாப்பிள்ளையும் உனக்கு நிகரா சமூகத்துல பரிச்சயமானவர்தான். கவியரங்கம், சமூக சேவை அமைப்புன்னு தலைமை தாங்கி நடத்திக்கிட்டு வர்றார். மத்திய அரசாங்க வேலை. அம்மா, அப்பா, ஒரு தம்பின்னு கச்சிதமான குடும்பம். பேரு ஈஸ்வர். உன் அழகுக்கேற்ற அழகன்.''

''நான் அதிகமா ஆசைப்படலே தாத்தா. மனிதாபிமானம் உள்ளவரா இருந்தா போதும்.''

''இருக்கிறதாலதானே சோஷியல் வொர்க்கரா இருக்கிறார். சரிடா... இன்னும் கொஞ்ச நேரத்திலே அவங்கள்லாம் வந்திடுவாங்க. ரெடியாயிரு.''

வாசலில் கால்டாக்ஸி வந்து நின்றது.

வீடு பரபரப்பானது.

''அவங்கள்லாம் வந்துட்டாங்க... இந்தப் பூவையும் வச்சுக்க சன்மதி'' சொர்ணம் வற்புறுத்தினாள்.

''வேண்டாம்மா... இது போதும்!''

''ப்ச்... பூவை வேண்டாம்னு சொல்லக்கூடாது. தலை நிறைய வச்சுக்கிட்டாதான் அழகு. இல்லேன்னா அதைக்கூட குறையா சொன்னாலும், சொல்வாங்க... திரும்பு'' அவளை வலுக்கட்டாயமாய் திருப்பி ஆறுமுழ பூவை சூடினாள்.

அம்மா, அப்பாவுடன் வந்திருந்தான் ஈஸ்வர். பார்க்க பளிச்சென்று சிரித்த முகத்துடன் அழகாகவே இருந்தான். அவனின் பெற்றோர் டி.வி. சீரியலில் வருகிற நடுத்தர வர்க்கத்து-ஆர்ட்டிஸ்டுகளைப்போல் நாகரீகமானவர்களாகவே தெரிந்தனர்.

காபி கொண்டு வந்த சன்மதியை, ''உட்காரும்மா'' என்று தன் பக்கத்தில் தரையில் அமர வைக்க முயற்சித்தாள் ஈஸ்வரின் அம்மா.

''அம்மா... என்ன நீ புரியாம'' ஈஸ்வர் அதட்ட... சங்கடத்தில் நெளிந்தது முகம்.

''ஸாரி சன்மதி... ப்ளீஸ் உட்காருங்க'' என்று நாற்காலியை காட்டினான்.

சன்மதி சற்றே நிமிர்ந்து அவனைப் பார்த்து மெல்லியதாய் புன்னகைத்தாள்.

''ஈஸ்வரை நான் என் பிள்ளையா அடைஞ்சதுக்கு பெருமைப்படாத நாளே கிடையாது. பெத்தவங்க எங்களுக்கே இல்லாத சமூக அக்கறை, உதவுகிற குணம், இவனுக்கு எப்படி வந்துச்சுன்னே தெரியலே. போன வாரம் கூட டி.வி.யிலே வந்த அறிவிப்பைப் பார்த்துட்டு ஒரு மேஜர் ஆபரேஷன் பேஷண்ட்டுக்கு ப்ளட் டொனேட் பண்ணிட்டு வந்தான். கல்யாணம் பண்ணினா ஒரு விதவையோ, இல்லே ஏதாவது ஒரு விதத்திலே உடல் குறைபாடுள்ள பொண்ணையோதான் பண்ணுவேன்னு பிடிவாதமாயிருந்தான். நாங்களும் எவ்வளவோ எடுத்து சொன்னோம். ப்ச்... அவன் பிடிவாதம்தான் ஜெயிச்சது!'' என்றார் தந்தை.

சன்மதி ஈஸ்வரை சற்றே பிரம்மிப்புடன் நோக்கினாள்.

''எங்க ஏரியாவுல ஒழுங்கா குடி தண்ணீர் லாரி வருதுன்னா அதோட காரணகர்த்தா எங்க ஈஸ்வர்தான். வீடு நல்லா பெரிசா இருக்கே? முழுக்கவே நீங்களே புழங்கறீங்களா?''

''இல்லே சார்... பாதி வீட்டை மூணா பிரிச்சு வாடகைக்கு விட்டிருக்கோம்!'' என்றார் நமச்சிவாயம்.

''இந்த காலத்துல பணத்தை பேங்க்லே போட்டு வைக்கக் கூட பயமாயிருக்கு. வீட்டு மேலே போடறதுதான் ஸேஃப்ட்டி! வாடகைக்கு விட்டு, அந்த வருமானத்துல லைஃப் லாங் நிம்மதியா இருக்கலாம்!''

''நிஜம்தான் சார்! எங்க சன்மதி நிறைய கதை எழுதியிருக்கா!''

''பத்திரிகையிலே பார்த்திருக்கோம்.''

''இஃப்யூ டோண்ட் மைண்ட்... நான் சன்மதியோட கொஞ்சம் தனியாப் பேசணும்'' என்றான் ஈஸ்வர் இடைமறித்து.




''பார்த்து... பார்த்து உட்காருங்க சன்மதி.'' சேரில் அமர முயன்ற போது தடுமாறியவளை சட்டென பிடித்துக் கொண்டான் ஈஸ்வர்.

வெட்கத்தில் முகம் சிவந்து போயிற்று சன்மதிக்கு.

தன்னோட அறைதான் என்றாலும் புத்தம் புது இடத்திற்கு வந்ததுப் போல் பிரமை.

''ஈஸியா இருங்க சன்மதி. நாம நல்லாப் புரிஞ்சுக்கணும்னுதான் தனியா பேசணும்னு சொன்னேன். தப்பில்லையே?''

''சேச்சே.''

''வாய்ஸ் கூட அழகாயிருக்கு... உங்களைப் போலவே''

''தாங்க்ஸ்''

''உங்க கதைகள் படிச்சிருக்கேன். எப்படி எழுதறீங்க? சம்பவத்தை கண்ணெதிரே பார்க்

கிற மாதிரி அருமையான எழுத்தாற்றல். கதைக்கான கருக்களை எப்படி கேட்ச் பண்றீங்க?''

''தாத்தாகிட்டே, பால்காரிகிட்டே, அம்மாகிட்டே, இப்ப உங்ககிட்டே இப்படி பேசிக்கிட்டிருக்கப்பவே ஏதாவது மெஸேஜ் கிடைக்கும். அதைதான் கதையாக்குவேன். சில சமயம் சொஸைட்டியிலே நடக்கிற அநியாயங்கள் என்னை பாதிக்கும் போதும் கதையில் என் ஆதங்கத்தை வெளிப்படுத்துவேன்.''

''வெரிகுட். அப்புறம் எப்படி டெய்லி மேனேஜ் பண்றீங்க... இந்த பாடி கண்டிஷனை'வச்சுக்கிட்டு?''

''அ... அது.. எனக்கொன்னும் சிரமமில்லே. யாரோட துணையுமில்லாம எல்லா வேலையும் என்னால பார்த்துக்க முடியும்.''

''அப்புறம்... இன்னொரு முக்கியமான விஷயம். கேட்கறதுக்காக என்னை தப்பா நினைச்சுக்கக் கூடாது.''

''கேளுங்க.''

''மத்த விஷயத்தை வேணும்னா உங்க வீட்லே மத்தவங்களை கேட்டு க்ளியர் பண்ணிக்கலாம். ஆனா, இதை நான் உங்ககிட்டே மட்டும் தான் கேட்க முடியும்.''

அவன் புதிர் போட, சன்மதியின் இதயத் துடிப்பின் வேகம் அதிகரித்தது.

''சொ... சொல்லுங்க.''

''உ.... உங்களால இடுப்புக்கு கீழ் செயல்பட முடியுமல்லவா?''

''வாட்?''

''ஐ மீன்... ஆக்ஸிடென்டால செக்ஸ´வலா எந்த பிரச்சினையுமில்லையே? தாம்பத்யத்துல செக்ஸ்´ம் முக்கியம் அல்லவா?''

சேலையைப் பிடித்து உருவியதுப் போல் கூசிப் போனாள் சன்மதி. வெகு பிரயத்தனப் பட்டு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''இ... இல்லே.''

''வெரிகுட். அப்புறம் இந்த வீடு யார் பேரில் இருக்கிறது?''

சன்மதி அவனை நன்றாக நிமிர்ந்து பார்த்தாள்.

## யானைகளால் இடைஞ்சல்!

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை க... ருவதற்காக தாய்லாந்து நாட்டு தலைநகரான பா... காங்கில் தினமும் 1600 யானைகள் பல்வேறு ப... திகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டு அணிவகுப்பு, சாகசம் ஆகியவைகளை திறந்தவெளி அரங்கில் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. 1600 யானைகள் வீதியில் நடந்து வருவதால் போக்குவரத்து தொல்லை மற்றும் தினம் 30 விபத்தாவது நடைபெறுகின்றன. எனவே இதனை தடுக்க அரசாங்கமே இந்த யானைகளை வாங்கி இந்த சேரிக்கையை நடத்த திட்டமிட்டுள்ளது.

ஒரு யானையின் விலை ஆயிரம் டாலர். நம்ம ஊருக்கு 60,000 ரூபாய்கள்.

-பாரீஸ் பார்த்தசாரதி.



''தாத்தா பேரில். ஏன் கேட்கறீங்க?''

''தாத்தா உங்கமேலே ரொம்ப பாசம் வ... சிருக்கறதா சொன்னார். நீங்கன்னா உயிராமே...

''ஆமாம்.''

''இருக்கணும்... அப்படித்தான் இருக்... ணும். எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்... சன்மதி. வாங்க ஹாலுக்கு போகலாம்.''

அவன் எழுந்துவதற்கு ஈஸ்வர் கைகொ... டுக்க... ''பரவாயில்லை. சொன்னேனே... ய... தயவும் இல்லாம என்னால என்னோட வேலை... களை கவனிச்சுக்க முடியும்னு'' என்று மறு... தாள்.

ஹாலுக்கு வந்தனர்.

''என்னப்பா... பேசி முடிச்சிட்டியா?''

''ம்... பேசிட்டேன்ப்பா'' என்றவன் அ... பாவின் காதில் கிசுகிசுத்தான்.

''எங்களுக்கு பொண்ணை பிடிச்சிருக்... இருந்தாலும் சில விஷயங்கள் கலந்து பேசி மு... வுப் பண்ண வேண்டியிருக்கு. இன்னும் ரெண்... நாள்ல பதிலை சொல்லிடறோம்.''

''ஒரு நிமிஷம்'' என்றாள் சன்மதி.

''என்னம்மா?''

''ரெண்டு நாள் எதுக்கு? இப்பவே நா... என் முடிவை சொல்லிடறேனே.''

''என்ன முடிவு?''

''எனக்கு உங்க பிள்ளையைப் பிடிக்கலே''

''.....?!!''

''உன்னை ரொம்ப புத்திசாலின்னு நினைச்சேன். இப்படி சொதப்பிட்டியே'' என்றான் எரிச்சலுடன் சதீஷ்.

''பையன் நல்லா படிச்சிருக்கான், நல்ல வேலையில் இருக்கிறான், கண்ணுக்கு லட்சணமாகவும் இருக்கிறான். சமூக சேவை, அது இதுன்னு நல்ல பேர். உன்னை பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டாங்க. அப்புறமும் ஏன்டி உனக்கு கிறுக்கு பிடிச்சிருக்கு. முகத்திலே அடிச்ச மாதிரி பிடிக்கலேன்னு சொல்லிட்டியே... உன்னைப் பத்தி அவங்க என்ன நினைப்பாங்க?'' அம்மா பொருமினாள்.

''பிடிக்கலேன்னா, பிடிக்கலேன்னு சொல்லக்கூட எனக்கு உரிமையில்லையாம்மா?''

''அங்கே குறைன்னு நினைக்கிற அளவுக்கு ஏதுவுமே இல்லாதப்ப... என்ன காரணத்துக்காக பிடிக்கலேன்னு சொன்னே? பாரு சன்மதி... இந்த காலத்துல குறை இல்லாதவங்களுக்கே வாழ்க்கை அமையறது கஷ்டமா இருக்கு. நீ இப்படி நடந்துக்கிட்டது எங்களுக்கு வருத்தமாயிருக்கு. அதனாலதான் கேட்கிறோம்'' என்றான் சதீஷ்.

''எனக்கும் மனசுன்னு ஒன்னு இருக்குண்ணா. அதுக்குள்ளே சில எதிர்பார்ப்புகளும், விருப்பு வெறுப்புகளும் இருக்கு. நான் ஒரு காலை இழந்தவதான். ஆனா, நானும் மனுஷிதான். ப்ளீஸ்... ட்ரை டு அண்டர்ஸ்டான்ட் மீ!''. வழிந்த கண்ணீரை துடைத்தபடி அவள் அறையை நோக்கிச் சென்றாள் சன்மதி.

''பார்த்தீங்களா மாமா. புரியற மாதிரி ஏதாவது பேசறாளாப் பாருங்க.''

அதுவரை வாய்மூடி நடந்தவைகளை கவனித்துக் கொண்டிருந்த நமச்சிவாயம் மெல்ல தலையாட்டினார்.

''சன்மதியைப் பத்தி ஆளாளுக்கு விமர்சிக்கறதை முதலில் நிறுத்துங்க. அவ புத்திசாலி. நியாயமான காரணமில்லாம சன்மதி நிராகரிச்சிருக்க மாட்டா. இனி, இந்தப் பேச்சு வேணாம்.'' அவரின் குரல் தீர்மானமாக ஒலித்தது.

பத்து நாட்கள் சென்றது.

யாரும் சன்மதியிடம் அதைப் பத்தி பேசவில்லை. அவளும் சொல்லவில்லை.

அடுத்து... மற்றொரு வரனை பெண் பார்க்க வர ஏற்பாடு செய்திருந்தார் நமச்சிவாயம்.

சன்மதி கலங்கிய கண்களுடன் தாத்தாவின் எதிரில் போய் நின்றாள்.

''தாத்தா.''

''என்னடா... ஏன் முகம் வாடியிருக்கு? கண்ணெல்லாம் கலங்கியிருக்கு. என்னாச்சு?'' பதறினார்.

''வேணாம் தாத்தா... எனக்கு கல்யாணமெல்லாம் வேண்டாம். யாரையும் வரச் சொல்லாதீங்க.''

அங்கு வந்த சொர்ணத்தின் காதில் அவள் பேசியது விழ, கோபப்பட்டாள்.

''என்னதான் நினைச்சிட்டிருக்கே உன் மனசுல? கல்யாணம் வேண்டாம்னா... உனக்குன்னு ஒரு பாதுகாப்பு வேணாமா?''

''இப்போதைக்கு இந்த பேச்சு வேண்டாமே. இந்த அரைகுறை உடம்பை மறுபடி என்சான் அளவுக்கு கூசிப் போக வைக்க வாய்ப்பை ஏற்படுத்தி தராதீங்க'' கதறி அழுதாள்.

''எ... என்னடி சொல்றே... என்னென்னமோ பேசறியே...'' பயந்து போனாள் சொர்ணம்.

''அன்னைக்கு என்னை பொண்ணு பார்க்க வந்தாங்களே... அந்த ஈஸ்வர் என்கிட்டே என்ன கேட்டான் தெரியுமா?''

சன்மதி அன்று நடந்தவைகளை வெட்கமும், வேதனையுமாய் சொல்ல, சொல்ல... நமச்சிவாயமும், சொர்ணமும் அயர்ந்து போயினர்.

'இரக்கமற்ற தன்மையைக் காட்டுவதும் மனிதனுக்கு இழிவானது ஏதுமில்லை. அந்த மிருகம் என் மதியின் மனதை இந்தளவு நோகடித்து விட்டு போயிருக்கானே?' மனசே ஆறவில்லை நமச்சிவாயத்துக்கு.

''இதை ஏன்டி அப்பவே சொல்லலே? உடம்பும், பணமும் முக்கியம்னு நினைக்கிற அவனோட சமூகசேவகன்ங்கற முகமூடியை கிழிச்செறிஞ்சு அனுப்பியிருப்பேனே?''

''பகிரங்கப் படுத்திக்கிற விஷயமாம்மா இது? அதனால தான் எனக்குள்ளேயே போட்டு புதைச்சுக்கிட்டேன். இப்பக்கூட, மறுபடி அந்த மாதிரி அசிங்கம் வந்துடக் கூடாதுங்கறதால தான் சொன்னேன். தாத்தா... ப்ளீஸ் தாத்தா... நீயாவது என்னை புரிஞ்சுக்கோயேன். வேண்டாம் தாத்தா... இதெல்லாம் வேண்டாம்.''

''அழாதேடா... உன்னைப் புண்படுத்தற எந்த சம்பவமும் இனி நடக்காது. ஆனா, என் சன்மதிக்காக ஒருத்தன் பிறந்திருக்கிறான். அவனை கண்டுபிடிச்சு உன் முன்னால கொண்டு வந்து நிறுத்தறது என்னோட பொறுப்பு... சரியா? கண்ணைத் துடைச்சுக்க முதல்ல.''

பேத்தியின் தலையை ஆதுரமாய் கோதி விட்டார்.

சன்மதி தன்னை தேற்றிக் கொண்டாள். பழையபடி முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டு முழு மூச்சுடன் எழுதுவதில் கவனம் செலுத்தினாள்.

அன்று...

சன்மதிக்கு உற்சாகமாக விடிந்தது.

எல்லையில்லா மகிழ்வை தரும் செய்தியொன்று வந்தது. அதை முதலில் தன் மீது அதிகமாக பாசம் வைத்திருக்கும் தாத்தாவிடம் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தாள்.

வெளியில் போயிருந்தவர் இன்னும் வரவில்லை.

''அம்மா தாத்தா எங்கேம்மா?''

''வெளியே போயிருக்கார்.''

''அது தெரியும். எங்கே போயிருக்கார்? நீ எங்கேயாவது அனுப்பி வச்சியா?''

''இல்லேம்மா... நான் எங்கேயும் அனுப்பி வைக்கலே. யாரையாவது நண்பரை பார்த்துட்டு வருவார். நானும் அவருக்காகதான் காத்துக்கிட்டிருக்கேன். இன்னும் டிபன் கூட சாப்பிடலே.''

''மணி பத்தாயிடுச்சே? எங்கே போயிருப்பார்?'' யோசனையுடன் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

மேலும் பதினைந்து நிமிடம் அவளை காக்க வைத்து வீட்டிற்குள் நுழைந்தார்.

''எங்கே போய்ட்டே நமச்சு? நான் உன்கிட்டே ஒரு குட் நியூஸை சொல்லணும்னு எவ்ளோ நேரம் வெய்ட் பண்ணிட்டிருந்தேன் தெரியுமா?''

''என்னது குட்நியூஸா? உனக்கு தெ[...]

போச்சா?'' ஆர்வம் குறைந்துப் போனார் ந[...]

வாயம்.

சன்மதியின் முகம் மாறியது.




''அப்ப... உனக்கும் தெரியுமா நமச்[...]

''போச்சுடா... காலையிலே ஃபர்[...]

டெலிவரியிலே போஸ்ட்மேன் லெ[...]

கொடுத்துப் போனான். அதைப்பார்த்து தெ[...]

சுக்கிட்டுதான் ஸ்வீட் வாங்கிட்டு [...]

போனேன்! லெட்டர் எங்கிட்டே இருக்கிற[...]

எப்படி தெரிஞ்சுக்கிட்டே?''

''ஓ... லெட்டரும் வந்திருக்கா? நான்[...]

தகத்துல பார்த்துதான் தெரிஞ்சுக்கிட்டேன்[...]

''புத்தகமா? பேங்க் எக்ஸாம் ரிசல்ட்[...]

லாம் இப்ப புத்தகத்திலேயே போட ஆரம்[...]

சிட்டாங்களா?''

''என்ன பேங்க் எக்ஸாம் ரிசல்ட்[...]

ரிசல்ட் வந்துடுச்சா?''

''அப்படின்னா நீ எதைப்ப[...]

சொல்றே?''

''தேவியிலே சிறுநாவல் போட்டி ஒ[...]

ருந்தாங்க இல்லே... அதிலே எனக்கு [...]

முதல் பரிசு கிடைச்சிருக்கு!''

''என் தங்கமே... சரஸ்வதி தேவி... [...]

கவே எவ்வளவு சந்தோஷமாயிருக்கு. கட[...]

உழைப்புக்கேற்ற கூலியை தராம இருக்[...]

தில்லே.'' நெக்குருகிப்போனார்.

''ரிசல்ட்டை பத்தி சொல்லவே[...]

லையே நமச்சு?''

''நீ பாஸாயிட்டே மதி! உனக்கு உன்[...]

லேயே, ஆழ்வார்பேட்டை பிராஞ்ச்லே[...]

போஸ்டிங் போட்டிருக்காங்க!''

''நிஜமாகவா தாத்தா?'' சந்தோஷத்[...]

தாங்கிக் கொள்ள முடியாமல் கண்கலங்கின[...]

''உனக்கு இனி எந்த குறையும் வராத[...]

வாயைத் திற!'' இனிப்பை எடுத்து ஊட்டி[...]

சன்மதி இன்னொரு இனிப்பை எடு[...]

தாத்தாவின் வாயில் ஊட்டி விட்டாள்.

இதையெல்லாம் தள்ளி நின்று பார்[...]

கொண்டிருந்த சொர்ணம் மனப்பூர்வமாய் இ[...]

வனுக்கு நன்றி சொன்னாள்.

ஒரே வாரத்தில் வேலையில் ஜா[...]

பண்ண வேண்டும். வீட்டிலிருந்து போ[...]



[...]த சம்பளத்திற்கு ஒரு ஆட்டோவை ஏற்பாடு [...]ய்துக் கொண்டாள்.

சன்மதிக்கு அந்த வங்கி வேலை ரொம்[...]வே பிடித்துப் போனது. ஊழியர்கள் அவளி[...]ம் கண்ணியமாகவும், கனிவுடனும் பழகினர். [...]ரே வாரத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட [...]வலையை கற்றுக் கொண்டாள்.

இந்த மூன்று மாதமாய் அவளுள் புது உற்[...]கம் குடிகொண்டிருப்பதை அவளே உணர்ந்[...]. என்ன ஒன்று முன்பு போல் அதிகமாய் [...] எழுத நேரம் ஒதுக்க முடியவில்லை. [...]லையில் எழுந்து வங்கிக்கு புறப்பட தான் [...]ரம் சரியாக இருந்தது. பணி முடிந்து வீடு [...]ய் சேர்ந்து காபி, டிபன் சாப்பிட்டு ஆற, ஆற[...]க்கு எழுத உட்கார்ந்தால் எட்டு மணி வரை [...]லேயே மூழ்கிப் போனாள். எட்டு மணிக்கு [...]கு இரவு உணவு சாப்பிட்டு உறங்க தான் [...]ம் இருந்தது.

இதனால் தாத்தாவிற்கே வருத்தம் தான்! காலையில், இரவில் சேர்ந்து சாப்பிடும் [...] சில நிமிடங்கள் தான் பேசிக் கொள்ள [...]ந்தது.

''இதோ பார் மதி... இந்த லன்டே[...]மூக்க நீ என் கூடதான் பேசிட்டிருக்கணும். [...]ம் அது இதுன்னு என்னை அவாய்ட் [...] பண்ணக்கூடாது.''

''என்ன நமச்சு... பெரிய வார்த்தையெல்[...]ம் பேசறே? உன்னை அவாய்ட் பண்றதா?''

''பின்னே? நாம சிரிச்சுப் பேசி எவ்வளவு [...]நாச்சு தெரியுமா? வாரத்துல ஒரு நாள் லீவுல [...] எழுத உட்கார்ந்திடறே!''

''என்ன பண்ணட்டும் நமச்சு? எழுதறது [...]க்கு பெரிய சந்தோஷத்தைத் தருது. இப்ப... [...] நாளைக்கு அஞ்சாறு பக்கம் எழுதறதுக்கு [...] நேரம் கிடைக்குது. அதனால மாசத்துல [...] நாவல் தான் எழுத முடியுது. சரி.. இந்த [...]ண்டே முழுக்க என் நமச்சுக்காக ஒதுக்க[...]ன்... சரியா?''

''தாங்க்ஸ்டா!''

''ஆட்டோ வந்திடுச்சுப் போல... நான் [...]ப்படறேன் நமச்சு. அம்மா லன்ச் பாக்ஸ் [...]ண்டு வா... ஆட்டோ வந்தாச்சு!'' டிபன் தட்[...] கையைக் கழுவினாள்.

''இதோ...'' என்றபடி சின்னதாய் ஹாட்[...]ஸ் எடுத்து வந்தாள் சொர்ணம்.

வாங்கி தன்னுடைய ஹாண்ட் பேகில் வைத்துக் கொண்டவள்... இருவரிடமும் கண்களாலேயே விடை பெற்று வாசலுக்குப் போனவள் திகைத்துப்போனாள்.

காரணம்...

ஆட்டோவிலிருந்து மாலையும், கழுத்துமாய் இறங்கிய சதீஷும், அன்று பைக்கில் அவனோடு ஒட்டிக்கொண்டு பறந்த இளம் பெண்ணும்!

அதிர்ந்துப்போய் நின்றிருந்த அவளைத் தாண்டி தன் காதல் மனைவியின் கரம் பற்றி உள்ளே அழைத்துச் சென்றான்.

''ச...தீ...ஷ்!''

''ஐய்யோ... மாமா... இவனைப் பாருங்களேன்!''

தாத்தாவும், அம்மாவும் அதிர...

சப்தம் கேட்டு தன் அறைவாசலில் வந்து நின்றாள் அமுதா. இதழ்களில் ஏளனப் புன்னகை.

''டேய் சதீஷ்... என்னடா இப்படி வந்து நிக்கறே?''

''அம்மா.. கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணாதே! நானும் கீர்த்தனாவும் மூணு வருஷமா காதலிக்கிறோம். அவ வீட்லே அலையன்ஸ் பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க. எங்க காதலை எடுத்து சொல்லி சம்மதம் வாங்க முடியும்ங்கற நம்பிக்கை இல்லே. ஜாதியை காரணம் காட்டி ரெண்டு வீட்லேயும் மறுப்பீங்க. அதனால தான் நாங்க காலையிலே ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்!''

''எவ்ளோ தைரியமா பேசறான் பாருங்க மாமா! ஏன்டா, சன்மதிக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு தோணலே இல்லே? உன் சந்தோஷம்தான் உனக்கு முக்கியமா போச்சு இல்லே? இப்படி வேற ஜாதிப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டு வந்து நிக்கறியே! இதனால அவளோட வாழ்க்கை எந்தளவு பாதிக்கும்னு யோசிச்சியா?''

''இல்லேன்னா மட்டும் அவளுக்கு கல்யாணமே ணம் நடந்திடுமா? அவதான் கல்யாணமே வேண்டாம்னு பிடிவாதமா இருக்காளே! எத்தனை வருஷம் தான் கீர்த்தனா எனக்காக காத்துக்கிட்டிருப்பா? ஜாதி, மதம்னு இந்த காலத்திலேயும் குண்டுச்சட்டிக்குள்ளே குதிரை ஓட்டாதீங்க. கீர்த்தனா நல்ல பொண்ணு! இந்த வீட்டை கண்ணுங்கருத்துமா பார்த்துக்குவா! எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க!'' என்றான் வெகு இயல்பாய் சதீஷ்.

''பாருங்க மாமா... எப்படி பேசறான் பாருங்க. பார்த்துக்கிட்டு சும்மாவே இருக்கிங்களே!''

''என்னம்மா பேச சொல்றே? இவன் இப்படியெல்லாம் பேசாம இருந்தாதான் ஆச்சர்யப்படுவேன். வளர்ந்துட்டாங்க... சொந்தக் கால்ல நிக்கறாங்க... அதனால அவங்கவங்க வாழ்க்கையை அவங்கவங்களே தேர்ந்தெடுத்துக்கறாங்க!''

''தாத்தா... தவவுப் பண்ணி என்னை தப்பா நினைச்சுக்காதீங்க. கீர்த்தனாவை என்கிட்டேர்ந்து யாரும் பிரிச்சிடக் கூடாதுங்கறதுக்காக தான் யாருக்கும் தெரியாம...'' என்றான் கெஞ்சலாய்.

அழுதுக்கொண்டிருந்த அம்மாவின் தோளில் கை வைத்தாள் சன்மதி.

''என்னம்மா நீ? ஏன் அழறே? உங்களுக்குத் தெரியாம கல்யாணம் பண்ணினது சரியில்லே தான். மனசுக்கு கஷ்டமாயிருக்கும். புரிஞ்சுக்க முடியுது. ஆனால், அண்ணனை மனசார பாராட்டணும்மா! காதல்னா என்ன? நம்பிக் கையோட தன்னோட வாழ்க்கையை ஒப்படைக்கறது தானே? தன்னை நம்பிய பெண்ணை கைவிடாம ஏத்துக்கிட்டதை பாராட்டணும்மா! தனக்கு கல்யாணம்னதும் ஒரு ஆண், அதன் மூலமா எந்தளவுக்கு தன் வசதி வாய்ப்புகளை பெருக்கிக்கலாம்னு ஒரு பெரிய லிஸ்ட்டை கொடுத்து பொண்ணை பெத்தவங்களை சுரண்டி எடுத்திடறாங்க! ஆனா, எதையும் எதிர்பார்க்காம நடக்கிற இந்த மாதிரியான காதல் திருமணங்களை வரவேற்கணும். பெத்தவங்களும் நிலைமையை புரிஞ்சு, வறட்டு கவுரவத்தை விட்டொழிச்சு ஏத்துக்கணும். பொருளாதாரரீதியா கொஞ்சமாவது சப்போர்ட்டிவா இருந்தா தான் காதல் திருமணங்கள் தோற்றுப்போகாது. காதலிக்கறது பாவமா என்ன? சாஸ்திரம், சடங்கு, சம்பிரதாயம் எதையும் நம்பாம, முக்கியத்துவம் தராம ரெண்டு மனசு மட்டும் இணைஞ்ச இந்த கல்யாணத்தை மதிக்கணும்மா! தாத்தா.. இவங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க தாத்தா! அம்மா ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு வா!''

நமச்சிவாயம் பெருமூச்சு விட்டார்.

''போம்மா... சன்மதி சொல்றதிலேயும் ஒரு நியாயம் இருக்கு. போய் ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு வா!'' என்றார் சொர்ணத்திடம்.

சதீஷ் நம்ப முடியாமல் தங்கையை நன்றியோடு நோக்கினான்.

கீர்த்தனா இரண்டடி முன்னே வந்து

## பழங்களை எப்போ... சாப்பிட வேண்டு...

வாழைப்பழத்தை எப்போது... சாப்பிடுவதற்கு முன் சாப்பிட வேண்டு... பழத்தில் உள்ள தாது உப்புக்களும் ... ளும் அப்போதுதான் நமது உடலில்... இணையுமாம்.

இதற்கு மாறாக சாப்பிட்ட பின், ...ல் அந்த சத்துக்கள், சாப்பாடு ஜீரணமாகும் ...அதனுடன் இணைந்து சென்று விடுமாம். ...ன், திராட்சை போன்றவற்றையும் வெறும் ...றில் சாப்பிடுவதே நல்லது.

-ராஜிராதா, திருச்சி.



நெகிழ்ச்சியுடன் சன்மதியின் கை... கொண்டாள்.

''நான்... எப்படி... உனக்கு...''

''ம்ஹூம்... தாங்க்ஸெல்லாம் ... கூடாது. என்கிட்டே அன்பாயிருங்க... தும்! வீடு நிறைய உறவுக்கூட்டம் இரு... கலகலன்னு சிரிக்கப் பேசணும். அது... ஆசை! எனக்கு இன்னொரு அண்ணி இ... டாங்க. அதுபோதும். வந்து. ஆபீஸ்... மாச்சு.... நான் சுவ்விங் வந்து பே... விடைபெற்று வெளியில் வந்தாள்.

அவளுக்காக ஆட்டோ காத்திரு...

8

ஆட்டோ வழக்கமாய் செல்லு...
யில் ஏதோ ஒரு காரணத்திற்காக அ...
யாளர்கள் குழி வெட்டியிருந்தனர். ...
யின்றி வங்கியை ஒட்டியிருந்த பக்க...நாட்கள் நகர்ந்தன.
வழியாக சுற்றிக் கொண்டு வந்தார் டி...ன்மதிக்கு இந்த உலகில் எல்லாமே அழ
''ஏன் சார் வேற வழியா வர்றீங்...ப்பதுப் போல் தோன்றின.
''பேங்க் வாசல்ல குழி வெட்...அந்த தெருவில் ஆட்டோவை விட்டு
காங்க. ஆட்டோவை நிறுத்த முடியாது... நடக்கும் போது ஒரு குறுகுறுப்பு தோன்
தெருவில் தான் நிறுத்த முடியும். எ...ார்க்காதே. பார்க்காதே என்று மூளை கட்
இந்த குழியை மூட மூணு நாலு மாசம்...ிட்டாலும், கண்கள் டெலிபோன்
கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க...நோக்காமல் வருவதில்லை.
''அதனாலென்ன சார்? ஒரு ...ந்நேரமும் சிரிப்பை தேக்கியிருந்த அந்த
நடந்தா பேங்க். நடக்க முடியாதா என்...னின் அழகான முகத்தை ரசித்தாள்.
புறப்படுங்க.'' இறங்கி வளைவில் நட...ிப்பு அவளுக்கே ஆச்சர்யமாய் தோன்றி
அந்த தெருவில் நிறைய கடைக..., அதில் எந்த தவறும் இருப்பதாய் தெரி
தன. இப்போது தான் புதிதாய் பார்க்கி...லை. நிச்சயமாய் இது இந்த வயசுக்கே
அப்போது தான்.. அந்த டெ...இனக்கவர்ச்சி விஷயமல்ல. சிலரைப்
பூத்தை பார்த்தாள். அதில் அமர்ந்திரு...ம் போது ஏனோ, காரணமேயின்றி பிடித்
கான இளைஞன் ஒருவன் இவளையே...ாகும். கறுகறுப்பானவர்களை பார்க்கும்
லாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ...நாமும் சோம்பலை உதிர்த்து சுறுசுறுப்
அந்த பார்வையின் வீச்சு......ருக்கத் தோன்றுமே அதே போல், அந்த
நடையை தடுமாற வைத்தது. ...ஞனை பார்க்கும் போது, அவனைப்
...வே எப்போதும் சிரித்த முகமாய் இருக்க

வேண்டும் என்பது போல் தோன்றும். மற்றபடி வேறு எந்த எண்ணமும் இல்லை.

'ஆனாலும், ஒரு ஆணை எதிட்டுப் பார்ப்பதும், அவன் தினமும் என்னைப் பார்த்து புன்னகைப்பதும்... நல்ல விஷயம் அல்லவே!'

'ம்ஹூம்... இனி அந்த பக்கமே நிமிர்ந்து பார்க்கக்கூடாது' உறுதியாய் நினைத்துக் கொண்டாள்.

அதேபோல் நிமிர்ந்துப் பார்க்காமல் கடந்துச் சென்றாள். அன்று மட்டுமல்ல... அடுத்து வந்த பதினைந்து நாட்களும் அவள் உறுதி தளரவில்லை.

சொர்ணத்திற்கு மட்டுமல்ல, நமச்சிவாயத்திற்கே ஆச்சர்யமாகதான் இருந்தது.

கீர்த்தனா வீட்டை பளிச்சென்று வைத்துக் கொண்டாள். சொர்ணத்தை எந்த வேலையும் செய்ய விடுவதில்லை. சமையல் முதல், பரிமாறுவது துவைப்பது என்று பம்பரமாய் சுழன்றாள்.

இந்த வீட்டின் பெரிய மருமகள் மட்டும் கையில் அழுக்குப் படாமல் அமர்ந்திருப்பாள், நான் மட்டும் வேலை செய்யணுமா என்கிற போட்டி மனப்பான்மையின்றி... காபியாகட்டும், சாப்பாடாகட்டும் அமுதாவின் அறை தேடிச் சென்று இன்முகத்துடன் கொடுப்பாள். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, சன்மதியை உள்ளங்கையில் வைத்து தாங்கினாள். சொர்ணம் கூட தன் மகளை அப்படி கவனித்திருக்க மாட்டாள். அவளுக்கு பிடித்ததாய் கேட்டு, கேட்டு சமைத்தாள். உடைகளை துவைத்து அயர்ன் பண்ணி அடுக்கி வைப்பாள். அவள் அறையை படு சுத்தமாக, புத்தகங்களையெல்லாம் நேர்த்தியாக அடுக்கி வைத்தாள்.

சன்மதி வீட்டில் இருந்தபோது, அவ்வப்போது செயற்கை காலை கழற்றி வைத்து, வீல் சேரை பயன்படுத்துவாள். இப்போது பணிக்கு செல்வதால், அம்மாதிரி ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியாததால் சில சமயங்களில் கால் வீங்கி அவஸ்தைப்படுவாள். அப்போதெல்லாம் கீர்த்தனா மருந்தை இதமாய் தேய்த்து ஒத்தடம் கொடுப்பாள்.

நமச்சிவாயத்தை நேரத்திற்கு சாப்பிட செய்வாள். அதுவும் ஒவ்வாத உணவை அறவே கண்ணில் காட்டுவதில்லை

அந்த வீட்டில் யாருக்கும் அவள் எந்த குறையும் வைக்கவில்லை.

சொர்ணத்திற்கு அவளை பிடித்துப்போ

னது. தாத்தாவுக்கும் அவள் மீது பரிவு ஏற்பட்டது. கீர்த்தனா வீட்டு சொந்தபந்தங்கள் வரப் போக இருந்தனர்.

பிஸியாய் இருந்த முற்பகல் நேரம்!

வங்கியில் வாடிக்கையாளர்களின் கூட்டம் அதிகமாக இருந்தது.

முதுகு வலித்தது சன்மதிக்கு. கைவிரல்கள் மரத்துப் போனதுப்போல் ஆயிற்று. விரல்களை மடித்து சொடக்கு எடுத்தபடி லெட்ஜரில் என்ட்ரியை நோட் பண்ண தொடங்கினாள்.

மேலும் ஒரு மணிநேரம் பறந்தோட... வாடிக்கையாளர்களின் கூட்டம் கணிசமாக குறைந்திருந்தது.

'அப்பாடா' என்று நிமிர்ந்து உட்கார்ந்தவள் துல்லியமாய் அதிர்ந்தாள்.

காரணம்... அவன்!

அவன் வயதொத்த இன்னொரு இளைஞனின் தோளில் கைபோட்டபடி, சிரித்து பேசிக் கொண்டே வங்கியினுள் நுழைந்துக் கொண்டிருந்தான்.

'மைகாட்! இவனெங்கே இங்கே?'

இருவரும் மேனேஜரின் அறைக்குள் நுழைந்தனர். ஐந்துநிமிடம் மூவரும் விவாதித்ததும், கடைசியாய் மேனேஜர் சன்மதியைக் காட்டி பேசியதும் கண்ணாடித் தடுப்பிலிருந்து பளிச்சென்று தெரிந்தது.

'எதற்காக என்னைக் காட்டி பேசுகிறார்? என்ன விஷயமாக இருக்கும்?' குழம்பிப் போனாள்.

சற்று நேரத்தில் இருவரும் மேனேஜரின் கைப்பற்றி குலுக்கிவிட்டு, அறையை விட்டு வெளியேறி இவளை நோக்கி வந்தனர்.

அவளின் இதயத்துடிப்பின் ஓசை அவளுக்கே துல்லியமாய் கேட்டது. ஏஸியிலும் உள்ளங்கைகள் வியர்த்தன.

''எக்ஸ்க்யூஸ்மீ'' அவனுடன் வந்தவன் பேசினான்.

''எஸ்!''

''என் பேரு பாஸ்கர். இவர் பேரு இளங்கோ!''

இளங்கோ கை கூப்பி, ''வணக்கம்ங்க'' என்றான் அழகிய புன்னகையுடன்.

''வணக்கம்! என்ன விஷயமாய்...'' தடுமாறினாள்.

''இளங்கோவுக்கு அக்கவுண்ட் ஓப்பன் பண்ணனும். அப்ளிகேஷனை உங்ககிட்டே வாங்கிக்க சொன்னார் மேனேஜர்!''

''ஒன் செகண்ட்!'' என்றபடி அ... ஷனை எடுத்து கொடுத்தாள்.

''இளங்கோ பென் இருக்கா... கொண்டு வர மறந்துட்டேன்.''

''நானும் எடுத்துட்டு வரலையே...''

''மேடம்... ப்ளீஸ் உங்க பென்னை... டியுமா?''

''ம்''

கொடுத்தாள்.

அங்கேயே வைத்து அப்ளிகே... பூர்த்தி செய்ய ஆரம்பித்தான் பாஸ்கர்.

சன்மதி கம்ப்யூட்டரின் பட்டனை... விட்டு அதில் தன் கவனத்தை செலுத்த... தாள்.

என்னவோ அவன் மேனியை ஊ... போல் தோன்ற, யதேச்சையாய் நிமிர்ந்த... திடுக்கிட்டாள்.

இளங்கோவின் பார்வை அவ... நிலைத்திருந்தது. அதுவும் அவள் க... இமே...

சங்கடத்துடன் ஏதோ வேலை செ... போல் பாவ்லா செய்தாள்.

ஆனாலும், அவன் பார்வையை வி... வில்லை.

அருவருப்பாய் இருந்தது சன்மதிக்கு... நாள்வரை அவனின் உற்சாகமான முகத்... பார்த்து ரசித்த உணர்வுகள் கோபமாக மா...

'என்ன மனிதன் இவன்! இவ்வள... தரமானவனா? ஒரு பெண்ணை அவள் ... மலே ரசிப்பதே தவறு எனும் பொழுது... குத் தெரிந்தும் பார்வையை விலக்... வெறிப்பது...ச்சே... கேடு கெட்ட ஆண்...

ஆத்திரம் கொஞ்சம், கொஞ்சமாக... பெற்று நாக்கில் வந்து தஞ்சமடைந்தது.

'மிஸ்டர்' என்று அவள் வாயை திற... தனித்த அதே கணத்தில், ''இளங்கோ'' ... ழைத்தான் பாஸ்கர்.

''என்ன சொல்லு!'' என்றான் அப்... பார்வையை விலக்காமல்.

உடம்பெங்கும் திகுதிகுவென எ... போலிருந்தது சன்மதிக்கு.

''இங்கே கையெழுத்துப்... இளங்கோ!''

''எங்கே?'' இளங்கோவின் கை க... அலைந்தது.

''இதோ இங்கே!'' அவன் ... பேனாவை கொடுத்து கைப்பிடித்து ச... இடத்தில் தொட வைத்தான்.

இளங்கோவின் கண்கள் க...

...ர்க்க... மெல்ல நிதானமாய் கையெழுத்துப் ...போட்டான்.

இப்படியொரு அதிர்ச்சியை சன்மதி தன் ...ாழ்க்கையில் சந்தித்ததில்லை.

'இவனுக்கு பார்வை கிடையாதா?'

''கோணல் மாணலா இல்லாம சரியாப் ...போட்டிருக்கேனா பாஸ்கர்?''

''நல்லாவேப் போட்டிருக்கே! மேடம் ...ந்த அப்ளிகேஷனை யார் கிட்டே கொடுக்க...ணும்?''

''என்கிட்டேயே கொடுத்திடுங்க'' என்...ள் இளங்கோவையே பார்த்தபடி.

அவர்கள் சென்ற பிறகும் அதிர்விலிருந்து ...டுபட முடியவில்லை அவளால்.

காலிங்பெல் அலறும் சப்தம் கேட்டு, ...ர்த்தனா தீயை சிம்மில் வைத்து விட்டு வாச...க்கு விரைந்து வந்தாள்.

கதவைத் திறந்தவளின் முகம் பளிச்சென ...ர்ந்தது.

''அம்மா... வாம்மா... உள்ளே வா!''

''என்னடி இது கோலம்? புடவையை ...க்கி செருகிட்டு, முகமெல்லாம் வேர்த்து ...ிந்க... என்னப் பண்ணிட்டிருக்கே?'' பழுங்... அடங்கிய பிளாஸ்டிக் கூடையை மகளிடம் ...டுத்த குணவதி துணுக்குற்றவளாய் கேட்...ள்.

''சமையல் பண்ணிட்டிருந்தேன்!''

''துணியெல்லாம் நனைஞ்சிருக்கு!''

''அதுக்கு முன்னாடி வீட்டை கழுவி, ...னி துவைச்சேன்''

''வீட்லே இப்ப யாருமில்லையா? நிசப்த...மிருக்கு!'' சுற்று முற்றும் பார்த்தாள்.

''மாமியார் கோவிலுக்குப் போயிருக்...க, தாத்தாவும் வெளியே போயிருக்கார். என் ...டுக்காரரும், அவங்க அண்ணனும் ...பீஸ்க்கு போயாச்சு!''

''அந்த ராங்கிக்காரி?''

''யாரு அமுதாவை கேக்கறியா? அவ என் ...க்கு வீடு தங்கியிருக்கா? அவங்க அம்மா ...டுக்குப் போயிருக்கா. சமையலறைக்கு வந்...டேன். உங்கூட பேசிக்கிட்டே சமைக்க முடிச் ...றேன்.''

''ஏன்டி எல்லா வேலையும் நீ ஒருத்தியே ...ழுத்துப் போட்டு செய்யறே? அன்னைக்கு வந்... பவும் அப்படிதான், அந்த நொண்டிக்கு ஒத்த... கொடுத்துக்கிட்டிருக்கே! அப்படியென்ன ...சம் அவமேலே?''

''பாசமில்லேம்மா... வேஷம்! நீ பெத்த துங்கள்லேயே நான் ரொம்பவே புத்திசாலி. இந்த வீட்டுக் கிழமிருக்கே... அதுக்கு நொண்டின்னா உயிரு. இந்த வீட்டோட மதிப்பு என்ன தெரியுமா? கிட்டத்தட்ட கோடி ரூபா! இன்னும் உயில் எழுதி வைக்கலே. அமுதாவையும், சங்கரனையும் அவருக்குப் பிடிக்காது. என் புருஷனும் ஆரம்பத்திலே அந்தக் கிழத்துக்கு பிடிக்காத மாதிரிதான் நடந்துக்கிட்டார். அதனாலதான் நான் நொண்டிமேலே பாசமாயிருக்கிற மாதிரி நடந்துக்கறேன். கண்டிப்பா எனக்கும் ஒரு ஷேர் வரும் பார். சன்மதியோட ஒரிஜினல் காலைப் பார்த்திருக்கியா? பாதி துண்டாகி...ப்பா... பார்க்கவே அகோரமா இருக்கும். அதுக்கு தைலம் தடவி ஒத்தடம் கொடுக்கற அன்னைக்கெல்லாம் எனக்கு சாப்பாடே இறங்காது. இந்தா ஜூஸ் சாப்பிடு!''

உள்ளே தாயும், மகளும் பேசிக் கொண்டிருந்த அனைத்தும் வீட்டிற்குள் வந்த நமச்சிவாயத்தின் காதில் விழ... வந்த சுவடே தெரியாமல் வெளியேறினார்... ரத்தம் கொதிக்க!

## 9

ஆட்டோவிலிருந்து இறங்கி நடந்தவளின் கண்கள் தன்னிச்சையாய் டெலிபோன் பூத்தை நோக்கியது.

இரண்டு போன்கள் இருந்தன. இரண்டிலும் நபர்கள் பேசிக் கொண்டிருக்க, மூன்றாமவர் காத்திருந்தார்.

இளங்கோ கொஞ்சமும் புன்னகை மாறாத முகத்துடன் அமர்ந்திருந்தவன்... சட்டென எழுந்தான்.

'இதுவே, அவன் யார் என்று தெரியாதிருந்தால் இந்நேரம் அவன் செய்கைக்கு 'என்னைக் கண்டதும் பேசத் தூண்டப்பட்டு எழுகிறான்' என்றல்லவா அர்த்தம் கற்பித்துக் கொண்டிருப்பேன்?'

சன்மதிக்கு நினைத்த மாத்திரத்தில் சிரிப்பு வந்தது.

''ஒரு நிமிஷம் சார்... இதோ வந்துட்டேன்'' என்ற இளங்கோ, கையில் ஸ்டிக்குடன் வெளியில் வந்தான். பாக்கெட்டிலிருந்த கூலிங் கிளாஸை அணிந்துக் கொண்டு பிளாட்பாரம் ஓரமாகவே நடக்க ஆரம்பித்தான். கிட்டத்தட்ட சன்மதிக்கு இணையாக!

அவளை இடப்புறமாய் திரும்பி எதிட்ட

படி நடந்தவளுக்கு அவன் மீது கருணை சுரந்தது.

'எல்லா இழப்புகளையும் விட பார்வையின்றி இருப்பது தான் பெரிய இழப்பல்லவா? உலகின் அழகிய நிறங்களை, பூக்களின் அற்புத அழகை, மனிதர்களின் கோடிக்கான வேறுபட்ட முகங்களை... பார்க்க முடியாமல் இருட்டு உலகத்திற்குள் வாழ்வது எவ்வளவுப் பெரிய கொடுமை? அந்த காலத்தில் தவறு செய்பவர்களின் தண்டனையாக இருட்டறையில் போட்டு பூட்டி வைப்பார்களாமே! அதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தான். ஆனால், எண்ணற்ற ஆசைகளும், கனவுகளும் பூக்கும் இந்த வாலிப வயதில் இவனுக்கு ஏன் இந்த தண்டனை?'

எண்ணிக் கொண்டே சென்றவள் அப்போது தான் பார்த்தாள். சாக்கடையின் மேல் மூடியை, திறந்தவர்கள் அப்படியே மூடாமல் போட்டு விட்டு போயிருக்கிறார்கள். இதோ இளங்கோவின் அடுத்த அடி அந்த குழிக்குள் தான். 'மைகாட்!'

சட்டென அவன் கையைப் பற்றி தன் பக்கம் இழுக்க, எதிர்பாராத திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த இளங்கோ அவள் மேல் சாய... இருவருமே கீழே விழாதிருக்க.. அவனை தாங்கி பிடித்துக் கொண்டாள் சன்மதி.

சில கணங்கள் அதே நிலை நீடிக்க... இருவருமே சுதாரித்துக் கொண்டனர்.

''ஏன் என்னை இழுத்தீங்க?'' என்றான் கோபமாக.

''இன்னும் ஒரு கணம் தாமதித்திருந்தாலும் சாக்கடையில் விழுந்திருப்பீர்கள்!'' என்றாள் சன்மதி.

''ஐயோ...'' என்றலறினான்.

''ஒரு நிமிஷம்'' என்றவள் கடந்து சென்ற இரண்டு பாதசாரிகளை பார்த்து, ''ஹலோ எக்ஸ்க்யூஸ்மீ'' என்றழைத்தாள்.

''என்னம்மா?''

''பாருங்க... சாக்கடைய திறந்து வச்சிட்டு மூடாமப் போயிருக்காங்க! ஸ்கூல் பிள்ளைங்க இந்தப் பக்கம் நடந்து செல்லும் போது விழ வாய்ப்பிருக்கில்லையா? தயவு செய்து... இதை மூடி விட்டுப் போக முடியுமா?''

''இந்த கார்ப்பரேஷன்காரனுங்களே மோசம்மா. அங்கங்கே பள்ளம் தோண்டு வாங்க. மூட மாட்டாங்க. இப்பப் பாருங்க சாக்கடைய திறந்துப் போட்டுட்டு போயிருக்காங்க. எல்லாத்தையும் நாமதான் சரி பண்ண வேண்டியதாயிருக்கு!'' என்றவர் உடன் வந்தவருடன் சேர்ந்து மூடி விட்டுப் போனார்.

இளங்கோ இன்னும் பதட்டத்திலிருந்து விடுபடவில்லை.

''ரொம்ப தாங்க்ஸ்ங்க... நீங்க மட்டு[ம்] இல்லேன்னா... நினைக்கவே பயமாயிரு[க்]குங்க!''

''அதையே நினைச்சிட்டிருக்க வேண்[டா]டாம். ரிலாக்ஸ்!''

''என்ன இருந்தாலும் நீங்க செஞ்சது மி[க]ப் பெரிய உதவி. அதுக்கு சிறு வகையிலாவது என் நன்றியை செலுத்தணும். இங்கே பக்கத்திலே தான் என் ஷாப் இருக்கு. கண்டிப்பா ஒரு க[ப்] காபி சாப்பிட்டு தான் போகணும்.''

''பரவாயில்லைங்க... நான்...''

''மறுக்கக்கூடாது... ப்ளீஸ்...''

அவன் திரும்பி நடக்க, வேறு வழியின்[றி] பின்னே சென்றாள்.

பூத்தில் இப்போது யாருமில்லை. பேசி[ய]தற்கான கட்டணத்தை மேஜை மேல் வைத்[து] விட்டு போயிருந்தனர். அவற்றை எடுத்து கா[ஷ்] பாக்ஸில் போட்டவன், ''காலையிலிருந்[தே] குமட்டலாயிருந்தது. அதனால் தான் ஒரு புளிப்[பு] மிட்டாய் வாங்கி சாப்பிடலாம்னு பக்கத்திலே இருந்த கடைக்கு போனேன். ஆனா...'' உட[ல்] சிலிர்த்தது.

''உட்காருங்க மேடம்'' சேரை எடுத்து[ப்] போட்டான்.

அவன் செய்கைகள்... பார்வையற்றவ[ன்] என்று சத்தியம் செய்தாலும் யாரும் நம்ப மா[ட்]டார்கள்.

மேஜையோரம் இருந்த ஃப்ளாஸ்[க்]கை எடுத்து ஒரு கோப்பையில் காபியை ஊற்[றி] ''மேடம் ப்ளீஸ்... இதை வாங்கிக் கொள்ளு[ங்]கள்'' என்றான் நீட்டாமலே ஜாக்கிரதையுடன்.

''தாங்க்ஸ்'' அவனையேப் பார்த்தப[டி] வாங்கி உறிஞ்சினாள்.

''மேடம் உங்களிடம் ஒரு உண்மைமை[யை] சொல்லட்டுமா?''

''சொல்லுங்க!''

''நீங்க யாரு? கறுப்பா, சிவப்பான்னுக் கூட எனக்கு தெரியாது. ஏன் தெரியுமா?''

''தெரியும்!''

''எப்படி?'' என்றான் ஆச்சரியமுடன்.

''உங்களை எனக்கு நல்லாவேத் தெரியும்!''

''எப்படி?''

''உங்க பேர் இளங்கோ. பக்கத்திலே இருக்கிற பாரத விலாஸ் பேங்க்ல போனவாரம் புதுசா அக்கவுண்ட் ஓப்பன் பண்ணியிருக்கீங்க!''

''மைகாட்... இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றான் அப்பாவியாய்.

''அந்த பேங்க்லே தான்... நான் வேலை செய்யறேன். என் பேர் சன்மதி!''

''ஓ!''

''கூட துணைக்கு ஒரு ஆளை வேலைக்கு சேர்த்துக்கலாமே!''

''கட்டுப்படியாகாதுங்க. நான்... எனக்கு பார்வை இல்லேங்கறது தெரிஞ்ச போச்சா? யாருக்கும் தெரியக்கூடாது, என்னைப் பார்த்து பரிதாபபடக்கூடாதுன்னு... பார்வை உள்ளவன் மாதிரி கேஷுவலா நடந்துப்பேன். ஆனா, நீங்க கண்டுபிடிச்சிட்டீங்க!''

அவனின் குழந்தைத்தனமான உள்ளம் கண்டு நெகிழ்ந்துப் போனாள்.

''சரிங்க... நேரமாச்சு... கிளம்பறேன்!''

''தப்பா நினைக்கலேன்னா ஒரு ரிக்வெஸ்ட்!''

''சொல்லுங்க!''

''உங்க குரல் மனசுக்கு இதமா இருக்கு. உங்கள் வார்த்தைகள் தோழமையான உணர்வை தருது. நேரம் கிடைக்கிறப்ப என் கூட பேசுங்க... அட்லீஸ்ட் போன்லேயாவது.''

''சரிங்க!'' சிரித்தபடி அவன் தந்த நம்பரை வாங்கிக் கொண்டு சென்றாள்.

தன் சீட்டில் அமர்ந்த பிறகும் சன்மதிக்கு பிரம்மிப்பாய் இருந்தது.

சற்றுமுன் நடந்த நிகழ்வுகள்... திரும்ப, திரும்ப.. மனவோட்டத்தில் வந்துக் கொண்டேயிருந்தது.

அவன் உருவத்திற்கேற்ற கம்பீரம், குரலிலும் இருந்தது.

அவளைப் போலவே அவனுக்கும் அவளிடம் பேசியது தோழமை உணர்வைத் தந்தது.

ஹாலில் யோசனையுடன் அமர்ந்திருந்தார் தமச்சிவாயம்.

''மாமா... டிபன் ரெடியாயிருக்கு... சாப்பிட்டுக்குங்க... வாங்க...''

''......!''

''மாமா...'' மறுபடி அழைத்தாள் சொர்ணம்.

''என்னம்மா?''

''என்ன யோசனை? பத்து நாளாகவே இப்படிதான் இருக்கீங்க? உடம்புக்கு முடியலியா மாமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா!''

''சரி... சாப்பிட வாங்க!''

''எல்லோரும் வந்தாச்சா? இன்னைக்கு எல்லோரும் சேர்ந்து ஒண்ணா சாப்பிடணும்!''

''என்ன மாமா திடீர்னு?''

''எல்லோர் முன்னிலையிலும் ஒரு முக்கியமான விஷயம் பேசியாகணும்!''

''மாமா நீங்க பேசறதே புரியலே!''

''இன்னும் கொஞ்ச நேரத்திலே புரிஞ்சிடும். நீ போய் உன் பெரிய பிள்ளை, சின்ன பிள்ளை அவங்கவங்க மனைவியோடு வரச்சொல்லிடு. சன்மதி என்னப் பண்றா? அவளையும் வரச் சொல்லு!''

சொர்ணம் குழம்பினாள். அந்த வீட்டில் விரும்பாத ஏதோவொரு சம்பவம் நடக்கப் போவது போல் உணர்ந்தாள்.

அடுத்த பத்தாவது நிமிடம்...

டைனிங் டேபிள் முன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஆஜராகியிருந்தனர்.

# கடத்தப்பட்ட புத்தர் சிலை

ஒவ்வொரு ஆண்டும் நம் நாடு உள்பட ப[ல] நாடுகளிலிருந்தும் அரிய கலைப்பொருட்க[ள்] ஓவியங்கள் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டு வ[ரு]கின்றன. சென்ற ஆண்டு பிரான்சு நாட்டு கஸ்[டம்ஸ்] இலாகாவினரால் 28,000 கலைப் பொருட்கள் சட்ட விரோதமாக கடத்தி வந்தவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. தாய்லாந்து நாட்டிலிருந்து கடத்தி வரப்பட்ட 7-ம் நூற்றாண்டின் இந்த புத்தர் சிலையும் அதில் ஒன்று. இதன் மதிப்பு இரண்டரை கோடி ரூபாய்.

-பாரீஸ் பார்த்தசாரதி.



அப்படிப்பார்க்க மனதுக்கு இதமாய், அழகாய் இருந்தது.

கீர்த்தனா அனைவருக்கும் பரிமாற முற்பட்டாள்.

''பரவாயில்லை... நீயும் உட்கார்ந்து சாப்பிடு. சொர்ணம் நீ பரிமாறும்மா!''

கீர்த்தனா யோசனையுடன் கணவன் பக்கம் அமர்ந்தாள். அமுதா கணவனின் காதில் கிசுகிசுத்தாள்.

''என்ன... கிழம் சீன் காட்டுது!''

''காதிலே விழுந்துடப்போகுது!'' பயத்துடன் கெஞ்சினான் சங்கரன்.

சன்மதிக் கூட தாத்தாவை வியப்பாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'தாத்தாவிடம் புரியாத புதிர் இருக்கிறது. கொஞ்ச நாட்களாக என்னிடம் கூட சரியாய் பேசவில்லை. அடிக்கடி வெளியே போய் வந்தார். எந்நேரமும் சிந்தனையில் மூழ்கிப்போனவராய்... தவிர ஏதோவொரு கவலை வாட்டி வதைத்துக் கொண்டிருந்திருக்கிறது. அதனால் தான் என்னிடம் கூட சரியாகப் பேசவில்லை!'

''என்னவோ பேசணும்னு மாநாட்டைக் கூட்டிட்டு பேசாமலே இருந்தா என்ன அர்த்தம்?'' அமுதா கிண்டலாய் கேட்டாள்.

''முதல்ல சாப்பிட்டு முடிம்மா... அப்புறம் சொல்றேன்!''

எல்லோருமே அவசரமாய் சாப்பிட்டு முடித்தாலும், சரிவர சாப்பிடவில்லை.

நமச்சிவாயமும் கையைக் கழுவி துண்டால் துடைத்துக் கொண்டார்.

''க்கும்...'' தொண்டையை கனைத்து தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்.

''ஒரு முக்கியமான விஷயம் பத்தி பேசத்தான் உங்க அத்தனை பேரையும் கூப்பிட்டேன்...!''

''......?!''

''எனக்கும் வயசாயிடுச்சு. எந்நேரமும் எமன் வந்திடுவான்!''

''தாத்தா... என்ன பேச்சு இது?'' சன்மதி வேதனையுடன் தாத்தாவின் கையைத் தொட்டாள்.

அவளைப் பார்த்து அன்பாய் புன்னகைத்து விட்டு மற்றவர்களை ஏறிட்டார்.

''அதனால நான் உயில் எழுதிட்டேன்!''

''.......?!?!''

அங்கிருந்தவர்களின் முகங்களில் மலர்ச்சியுடன் பல்பு எரிந்தன.

## 10

கீர்த்தனாவுக்கு விசிலடிக்க வேண்டும் போலிருந்தது.

'அட... காலம் இவ்வளவு சீக்கிரம் கனிந்து வந்து விட்டதா?'

''உங்க எல்லாருக்கும் ஒன்னு சொல்ல ஆசைப்படறேன். வாழ்வில் எதுவுமே நிச்சயமில்லை... சாவைத் தவிர. நிலையற்றது என்பதற்கு மறுபெயர் தான் வாழ்வு. கடவுள் நமக்கு கொடுத்த ஆயுட்காலத்தை யாருக்காவது பயன்படறமாதிரி உபயோகிக்கப்படணும். பிறர் பாரத்தை தாங்க கைகொடுத்தால் நம்மோட பாரத்தின் கனம் குறையும். குடும்பம்ங்கறது நம் மனைவி, நம் கணவன், நம் குழந்தைன்னு சுயநலக்கூட்டுக்குள்ளே அடங்கிப் போய்டக்கூடாது. நம் மாமியார், நம் நாத்தனார், நம் தங்கைன்னு எல்லோர் மேலேயும் பாசம் செலுத்தணும். மனசை விசாலமா வச்சுக்கணும். இந்த மனசு உங்கள்ல எத்தனை பேருக்கு இருக்குன்னு நீங்களே கேட்டுக்குங்க. பிரதிபலன் எதிர்பாராத அன்புதான் இந்த உலகத்திலேயே உசந்தது.

சன்மதி அற்புதமான, அன்பான பெண். கூடப் பிறந்த அண்ணன்களால் அவளுக்கு எந்த பிரயோஜனமும் கிடையாது. சரி, அண்ணிகளாய் வந்த ரெண்டு பேருமே பொண்ணுங்க தானே? ஒரு பொண்ணோட மனசை இன்னொரு பொண்ணு தான் புரிஞ்சுக்குவான்னு நம்பினேன். ஆனா, என் சன்மதியை உதாசினப்படுத்தி அவ மனசை புண்படுத்தினீங்க.''

''தாத்தா... நான் ஒண்ணும்'' கீர்த்தனா இடைமறிக்க..

நமச்சிவாயம் கையமர்த்தினார்.

''வேண்டாம்மா... வேஷம் போட்டுக்கிட்டு மழையிலே நனைஞ்சா ரொம்ப நேரம் தாக்குப்பிடிக்காது. நீ உன் அம்மாவிடம் சன்மதியைப் பத்தி பேசியதை எல்லாம் கேட்டுக்கிட்டு தான் இருந்தேன்''

கீர்த்தனாவின் முகம் செத்த எலி போல் ஆனது.

சொர்ணமும், சன்மதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''அதனால... நீங்க யாருமே சன்மதியை கடைசிவரை கண்கலங்காம வச்சு காப்பாத்துவீங்கன்ற நம்பிக்கை எனக்கு சுத்தமாய் போச்சு!''

''எதுக்கிப்போ இவ்ளோப் பெரிய பிரசங்கம்? சொல்ல வந்ததை சீக்கிரம் சொல்லிடுங்க!'' எரிச்சலுடன் பேசினாள் அமுதா.

''அமுதா... ப்ளீஸ்!'' சங்கரன் அவள் கையைப் பற்றி மென்மையாய் அழுத்தி கெஞ்சினான்.

நமச்சிவாயம் தனக்குள் சிரித்துக் கொண்டவராய், ''இந்த வீடு என்னோட சுய சம்பாத்தியம். என் விருப்பப்படி யார்பேரிலும் எழுத உரிமையிருக்கு. அதனால சுய உணர்வுடன், மனம் நிறைந்த விருப்பத்துடன், என் பேத்தி சன்மதியின் பெயரில் எழுதி இருக்கிறேன்.''

''எ...என்ன?'' அனைவர் முகத்திலும் அதிர்ச்சி.

''சொல்லி முடிச்சிடறேனே... சன்மதி விரும்பறவரை நீங்களும் இங்கே இருக்கலாம்!''

''எதுக்கு... அவ கைய காலை அமுக்கிவிட்டு காக்கா பிடிக்கறதுக்கா? ஒட்டு மொத்தமா அவ பேர்ல எழுதி வச்ச எங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்டு நல்லா வாழ்ந்திடுவாளா?'' வெடித்தாள் அமுதா.

சன்மதி தாத்தாவையே திகைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன தாத்தா இப்படிப் பண்ணிட்டீங்க?''

''அதுக்கு காரணமிருக்கு. நீ கிளம்பு... உனக்கு நேரமாய்டுச்சு!''

அவளை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

சொர்ணம் இடிந்துப்போய் ஒரு மூலையில் அமர்ந்து விட்டாள்.

''உங்களுக்கு கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லையா? இவங்களும் இதோ, இந்த சுகராசி பெத்தெடுத்த புள்ளைங்கதானே? அந்த பாசம் கூடவா இல்லாமப் போச்சு?''

முதன் முறையாக கீர்த்தனாவின் ஆவேசமான குரலை அனைவரும் கேட்டனர்.

தாத்தா நிதானமாகவே சொன்னார்.

''மனசாட்சியைப் பத்தி நீ பேசாதேம்மா.. அதுக்கு உனக்கு எந்த தகுதியும் இல்லை!''

''தாத்தா... உனக்கு புத்திக்கித்தி கெட்டுப் போச்சா? எங்களுக்காவது குடும்பம் இருக்கு. ஆனா எதுவுமே இல்லாத, அடுத்தவங்க உதவி இல்லாம வாழ முடியாத சன்மதிக்கு கோடி ரூபா மதிப்புள்ள வீட்டை எழுதி வச்சிருக்கீங்களே... முட்டாள்தனமா...!'' என்றான் சதீஷ்.

''அதானே... இது ரொம்ப அநியாயம் தாத்தா'' பதிலுக்கு சங்கரன் வாயைத் திறக்க...

''ஆமா... லட்சக்கணக்குல பங்கை கொட்டை விட்டுட்டு இப்படியா கேட்பாங்க? கிழத்தோட சட்டையை பிடிக்க வேணுங்க...!'' அமுதா தூண்டிவிட்டாள்.

''சீ... நாயே... யார் சட்டையை பிடிக்கச் சொல்றே?''

''யோவ்... நாய், பேய்னு சொன்னே... பல்லைத்தட்டி கையிலே கொடுத்திடுவேன்... ஜாக்கிரதை!''

''என்னை சொன்னே?'' ஆத்திரத்துடன் அமுதாவை அடிக்க கையை ஓங்கினார் தாத்தா.

''யோவ்... நீ யாருய்யா என் பொண்டாட்டி மேலே கையை வைக்க?''

யாரும் எதிர்பாராத நொடிப்பொழுதில் சங்கரன் பாய்ந்து தாத்தாவின் சட்டையை கொத்தாக பற்றிக் கொண்டு உலுக்கினான்.

நமச்சிவாயம் இதை... அதுவும் வாயில்லாப்பூச்சியாய் நினைத்திருந்த சங்கரனிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை.

''டேய்... என்னடா இது? விடுடா... விடுடா..'' சொர்ணம் தன் மகனை இழுத்து பளார் பளாரென கன்னத்தில் அறைந்தாள்.

''என்னடா நடக்குது இங்கே? இதையெல்லாம் பார்க்கறதுக்கா நான் உயிரோட இருக்கிறேன்?'' கதறினாள்.

''இங்கேப் பாருங்க... இனி ஒரு நிமிஷம் கூட இங்கே இருக்கக்கூடாது. இந்த வீட்டுக்கும், இங்குள்ளவங்களுக்கும், நமக்கும் இனி சம்பந்தமில்லை. கிளம்புங்க... ஒரு லாரியை ஏற்பாடுப் பண்ணுங்க! நாம இப்பவே, இந்த நிமிஷமே போறோம்!''

''ஐயோ... அமுதா... ஏம்மா அவசரப்படறே? வேண்டாம்... போகாதீங்க...!'' சொர்ணம் திடுக்கிட்டாள்.

''சும்மா நடிக்காதே! நல்லா அந்த கிழத்துக்கு சோப்பு போட்டு எல்லாத்தையும் உன் பொண்ணுக்கு எழுதி வாங்கிட்டு... சீன் காட்டறியா? இன்னுமா இங்கேயே நின்னுக்கிட்டிருக்கீங்க?''

அவளின் அதட்டலுக்கு அடுத்த நிமிடமே சங்கரன் காணாமல் போனான்.

அந்த வார்த்தைகளின் தாக்குதலால் சுருண்டுப்போனாள் சொர்ணம்.

பேரன் தன் மேல் பாய்ந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடாத நமச்சிவாயம் தன் அறைக்குள் போய் அமர்ந்து விட்டார்.

அதன் பிறகு காரியங்கள் துரிதமாக நடந்தன.

அடுத்த ஒரு மணி நேரத்தில் தங்கள் பொருட்களை எல்லாம் லாரியில் ஏற்றி... பின்

ளேயே பைக்கில் சென்று விட்டனர் சங்கரனும், அமுதாவும்.

தெருவே வேடிக்கைப் பார்த்தது.

அடுத்து சதீஷும், கீர்த்தனாவும் பெட்டிக ளோடு புறப்பட்ட போது தான் சுயநினைவிலிருந்து மீண்டாள் சொர்ணம்.

''என்ன இது... நீங்களுமா?''

''ஏன்... இங்கேயே ஒரு வேலைக்காரியைப் போல் சட்டி, பானையை கழுவிக்கிட்டு, உங்களுக் கெல்லாம் சமைத்துக் கொட்டணுமா? அப்படி யொன்னும் வக்கத்த குடும்பத்திலிருந்து வந்தவ ளில்லை நான்!''

''டேய்... அவ புதுசா வந்தவ... புரியாமப் பேசறா.. நீயாவது எடுத்து சொல்லக்கூடாதா?''

''என் பொண்டாட்டி புதுசா வந்தவளாயிருந் தாலும், உங்களை எல்லாம் நல்லா புரிஞ்சிக்கிட்டுத் தான் பேசறா! நானும், சங்கரனும் லட்சம் லட்சமா சம்பாதிக்கறோமா என்ன? இப்படி பட்டை நாமம் போட்டுட்டீங்களே! எனக்கு என் மனைவி தான் எல் லாம். வழியை விடு!''

அவளைக் கடந்து போயினர்.

வீடு வெறிச்சென்றிருந்தது. அமைதி... மயான அமைதி.

அடிவயிற்றிலிருந்து அழுகை வெடித்துக் கொண்டு புறப்பட்டது.

அவளின் கதறல் அமைதியை கிழித்துக் கொண்டு ஓங்காரமாய் எதிரொலித்தது.

நமச்சிவாயம் அறையிலிருந்து வெளிப்பட் டார்.

''சொர்ணம்... என்னம்மா இது? அழறதை நிறுத்து!''

''போதும் மாமா! ஒண்ணும் பேசாதீங்க. இந்த வீட்டை காரணமா வச்சு என் பிள்ளைங்களை என் கிட்டேர்ந்து பிரிச்சிட்டீங்களே!''


''சொ...ர்....ண..ம்!''

''சன்மதியோட தலைவிதி... இப்படி ஆய்ட்டா! அதுக்காக என் பிள்ளைங்களோட தலை விதியையே மாத்திட்டீங்களே! கொள்ளிப்போடக் கூட ஒரு பிள்ளையில்லாம எல்லாரையும் விரட்டி யடிச்சுட்டீங்களே!''

''.......?!''

''தங்கைய தூக்கி சுமந்து பணிவிடை செஞ்சா தான் பாசமா? அவங்க மனசுக்குள்ளே இருக்கு எல்லா அன்பும்! சந்தர்ப்ப, சூழ்நிலை, ரெண்டொரு வார்த்தை பேசிட்டா... ஒதுக்கி வச்சிடணுமா?''

''அவசரப்பட்டு பழி சொல்லாதேம்மா! நான் காரணத்தோட தான் செய்தேன். நாளையே சன்மதி கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டாள்னா.. இந்த சொத்துக்காகவே ஒரு நல்ல வாழ்க்கை அமையாதா



என்கிற ஆதங்கம் தான்! இல்லேன்னா... சன்மதி இதை புத்திசாலித்தனமா பயன்படுத்திக்குவா! அவ புத்திசாலி. அவ மனசுக்குள்ளே புரட்சிகரமான சிந்தனைகள் கொட்டிக்கிடக்கு. அது என்னால மட்டும் தான் புரிஞ்சுக்க முடியும். நாளை அவ இந்த சமுதாயத்திலே ஒரு உன்னதமான இடத்துக்கு வருவா! அதுக்கு இந்த சொத்து ஒரு காரணமாயிருக்கும். நான் சன்மதிக்கிட்டே கொடுக்கப்போறது ஒரு சின்ன விதை தான். ஆனா, அதுக்குள்ளே பெரிய மரம் ஒளிஞ்சிட்டிருக்கறதை அவளால மட்டும் தான் புரிஞ்சுக்க முடியும்!''

''நீங்க என்ன சொன்னாலும், என்னாலே ஏத்துக்க முடியாது மாமா! நீங்க செஞ்சது தப்பு தான். அநியாயம் தான். உங்களுக்கு என் பிள்ளைகளை ஆரம்பித்திலிருந்தே பிடிக்கலே. அதான், சமயம் பார்த்து பழிவாங்கிட்டீங்க. நான் சாகற வரைக்கும்... நீங்க செஞ்ச துரோகத்தை மறக்க மாட்டேன்... மறக்கவே மாட்டேன்'' பொங்கிய அழுகையுடன் அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

நமச்சிவாயம் தன் நெஞ்சில் ஈட்டிப் பாய்ந்ததுப் போல் துடித்துப் போய்விட்டார்.

'நானா? பழி வாங்கிட்டேனா? துரோகம் செய்துட்டேனா? இல்லை... நான் அப்படிப்பட்டவனில்லை. மகளாக உன்னை நினைத்தேனே சொர்ணம்... என் மனசைப் புரிஞ்சுக்காம நெருப்பள்ளிக் கொட்டிட்டு போய்ட்டியே... சன்மதி... என் கண்ணே... நீயாவது என்னை புரிஞ்சுக்குவியா கண்ணே?' அவர் கண்களிலிருந்து பொலபொலவென்று உதிர்ந்தது கண்ணீர்!




**வீ**ட்டிற்குள் நுழையும் போதே வித்தியாசத்தை உணர்ந்தாள் சன்மதி.

காலியான வீட்டிற்குள் நுழைவதுப் போன்ற பிரமை.

''அம்மா... அம்மா... தாத்தா...!''

ஹாலை ஒட்டிய முதல் அறை தாத்தாவுடையது என்பதால் அறைக்குள் எட்டிப்பார்த்தாள். நிச்சலனமாய் உறங்கிக் கொண்டிருந்தார்.

ஆச்சர்யமாய் இருந்தது.

மதியம் அரைமணி நேரம் உறங்குவார். அவ்வளவுதான். மற்றபடி இவ்வளவு நேரம் உறங்கும் பழக்கம் எல்லாம் இருந்ததே இல்லை.

'இன்றென்ன புதிதாய்?' எழுப்ப மனமின்றி தன் அறைக்குச் சென்று உடை மாற்றிக் கொண்டாள்.

சூடாய் காபி குடிக்க வேண்டும் போலிருந்தது. அவள் எப்போது அலுவலகம் விட்டு வந்தாலும் உடைமாற்றிக் கொண்டு வருவதற்கு கீர்த்தனா காபியோடு அவள் முன் வந்து நிற்பாள்.

'இன்று என்னாயிற்று? எல்லோரும் வெளியேப் போயிருக்கிறார்களா?' மெல்ல நடந்து கிச்சனுக்குள் சென்றவளின் கண்கள் சுருங்கியது.

அம்மா அங்கேயே சுருண்டுப் படுத்திருந்தாள்.

திடுக்கிடலோடு அம்மாவின் அருகே அமர்ந்து கன்னத்தில் கைவைத்தாள்.

''அம்மா... அம்மா...!''

''ம்...'' கண்விழித்தவள்... மகளைக் கண்டதும் எழுந்தமர்ந்தாள்.

அழுதழுது முகம் வீங்கிப் போயிருந்தது.

''என்னம்மா... இங்கே வந்துப் படுத்திருக்கே? உடம்புக்கு முடியலையா? கண்ணெல்லாம் சிவந்து, முகமெல்லாம் வீங்கிப் போயிருக்கே?''

கேட்டதும் தான் தாமதம்... அடங்கியிருந்த அழுகை மறுபடி உற்பத்தியாயிற்று.

பதறிவிட்டாள் சன்மதி.

''அம்மா... என்னம்மா? ஏன் அழறே? என்னாச்சு? அண்ணி... அண்ணி...''

''யாரடி கூப்பிடறே? வீடு வெறிச்சோடிக் கிடக்கே? தெரியலே உனக்கு?''

''என்னம்மா சொல்றே? வீட்லே யாருமில்லையா? எல்லோரும் எங்கே போயிருக்காங்க?''

''போய்ட்டாங்கம்மா... நம்மளை எல்லாம் வேணாம்னு ஒதுக்கிட்டு, அவங்கவங்க வழியைப் பார்த்துக்கிட்டு போய்ட்டாங்க!''

''புரியலேம்மா... விளக்கமா சொல்லு!''

கண்களை அழுந்த துடைத்துக் கொண்டு சொர்ணம் நடந்தவைகளை கூறினாள்.

''காலையிலே நடந்த சொத்து விஷயமா இத்தனவுக்கு பெரிதாயிடுச்சா? என்னம்மா அநியாயம் இது? சொத்து யார் பேர்ல இருந்தா என்ன? நான் வேற, அவங்க வேறன்னு நான் ஒருநாளும் நினைச்சதில்லேம்மா. நான் மட்டுமே தனியே அனுபவிக்க மனசு வருமா? தாத்தாவுக்கு எப்படி யார் பேர்ல வேணும்னாலும் எழுத உரிமையிருக்கோ, அதே மாதிரி எனக்கும் உரிமையிருக்கில்லையா? இந்த வீடு என் ரெண்டு அண்ணன்களுக்கும் சொந்தம்தான். ஆனா, அதை பெரிய விஷயமா முக்கியத்துவம் கொடுத்து நம்மளை ஏம்மா விட்டுட்டுப் போகணும்? அதிலே எங்கேம்மா பாசம் இருக்கு? முருடலாயிருக்கே?''

''நீயும் ஏன்டி உன் தாத்தாவை மாதிரியே பேசிக்கறே? எல்லாம் ஒண்ணா இருந்துட்டு, ரெண்டு பேரை மட்டும் ஒதுக்கி வச்சா மனசு தாங்குமா? எல்லோருக்கும் உண்டானதுதானே? உன் தாத்தா அநியாயமா என் பிள்ளைங்களை என்கிட்டேர்ந்து பிரிச்சிட்டார்.''

''அம்மா... என்ன பேச்சு இது? தாத்தாவைப்பத்தி அப்படி பேசாதே! அவர் எந்த ஒரு காரியம் செய்தாலும், அதுக்கு வலுவான காரணம் கண்டிப்பா இருக்கும்.''

''உனக்கென்ன? உன் பேருக்குதானே வீட்டை எழுதி வச்சிருக்கார். அவருக்குதான் சப்போர்ட் பண்ணி பேசுவே? பெத்த பிள்ளைங்களை பிரிஞ்சு என் வயிறும், மனசும் தீயா எரியுதே... அந்த வேதனை உனக்கெங்கே தெரியப் போகுது!''

சுருக்கென்று தைத்தது வார்த்தைகள்.

தன்னை அந்நியப்படுத்திய வார்த்தைகள், அதுவும் அம்மாவிடமிருந்து வந்ததை அவளால் நம்ப முடியவில்லை.

ஆனால், வேதனை அப்பிய தாயின் முகத்திற்காக எதையும் தாங்கிக் கொள்ளும் திடத்தை வரவழைத்துக் கொண்டாள்.

''சரி... எந்திரி... ஹாலுக்குப் போ... நானே காபி போட்டு எடுத்து வர்றேன். அப்புறம் நிதானமா பேசலாம்''

சொர்ணம் மெல்ல எழுந்துப் போனாள்.

சன்மதி சமையல் மேடையை ஆராய்ந்தாள். காலையில் செய்த உணவில் கொஞ்சம் மீதமிருந்தன. மற்றபடி பகலுக்கென்று சமைத்ததற்கான முஸ்தீபுகள் இருந்ததற்கான அடையாளம் எதுமில்லை.

பாலைக் காய்ச்சி மூன்று டம்ளர்களில் ஹார்லிக்ஸ் கலக்கினாள்.

ஒன்றை அம்மாவிடம் கொண்டு சென்றாள்.

''குடிம்மா!''

''வேணாம்மா!''

''ப்ச்... எவ்ளோ டயர்டா இருக்கேத் தெரியுமா? மதியம் கூட சமைக்கலே. குடிம்மா... உன் பிள்ளைங்க இந்த வீட்டுக்கு மறுபடி வரணும்னா... குடிம்மா!''

''கண்டிப்பா வருவாங்களா?''

''அதுக்கு நான் உத்தரவாதம்! போதுமா? தாத்தாக் கூட மதியம் எதுவும் சாப்பிடலியா?''

''இல்லே...!''

''என்னம்மா நீ? உன் கோபதாபத்தையெல்லாம் சாப்பாட்லேயா காட்டறது? வயசானவங்க குழந்தைக்கு சமம். பாவம் தாத்தா! நான் போய் ஹார்லிக்ஸ் கொடுத்துட்டு வர்றேன்!''

தாத்தாவின் அறை நோக்கிச் சென்றாள்.

நமச்சிவாயம் இன்னும் அதே போஸில் படுத்திருந்தார்.

பாசத்துடன் அவர் அருகே சென்று ஒரு சேரை இழுத்துப்போட்டு அமர்ந்தாள்.

''நமச்சு... நமச்சு!''

''.....''

''நமச்சு... எந்திரி... நானே என் கையாலேயே ஹார்லிக்ஸ் போட்டு எடுத்துட்டு வந்திருக்கேன்... குடி!''

''......'' அசையவேயில்லை.

''என்ன புதுப்பழக்கம் இது? இவ்வளவு நேரமா தூங்கவே மாட்டியே! எப்படா மதி வருவான்னு வாசல்லேயே காத்திருப்பியே! இன்னைக்கு அதே மாதிரி எதிர்பார்த்து ஏமாந்துப் போய்ட்டேன் தெரியுமா?''

''.......''

''நமச்சு... என்ன நீ? இவ்வளவு நேரமா பேசறேன்... சட்டைப்பண்ணாம... தாத்தா....!'' என்னவோ உறுத்த... அவசரத் தொட்டாள்.

உடம்பு சில்லிட்டிருந்தது.

''தாத்தா...'' பதட்டத்துடன் முகத்தை திருப்பிப் பார்த்தாள். ஆழ்ந்த துயிலில் கண்கள் இறுக மூடியிருக்க... நாசியருகே கை வைத்துப் பார்த்தாள்.

அவர் மூச்சு நின்று விட்டிருந்தது.

''தா...த்...தா! தாத்தாாா...''

சன்மதியின் அழுகுரல் அந்த வீட்டையே புரட்டிப் போட... கையிலிருந்த டம்ளரை அப்படியே போட்டு விட்டு ஓடி வந்தாள் சொர்ணம்.

ஹார்லிக்ஸ் தரையெங்கும் சிதறியது.

**யா**ர் யாரைத் தேற்றுவது? அந்த வீட்டின் இரு பெண்களின் கண்களும் கண்ணீரை நிறுத்தவில்லை. நமச்சிவாயம் போய் மூன்று நாட்களாகி விட்டன.

சன்மதியின் மனது சிறிது புண்பட்டாலும் ஓடி வந்து தலையை கோதி விடுகிற முதல் கரம் தாத்தாவுடையது. அவருடைய இழப்பால் இடைவிடாது அழுதுக் கொண்டிருக்கிற அவளை தேற்றுவார் யாரும் இல்லை.

அவளை விட மோசமான மனநிலையில்

இருந்தாள் சொர்ணம். குற்ற உணர்ச்சி அவள் உள்ளத்தை செல்லாய் அரித்துக் கொண்டிருந் தது.

''நானே கொன்னுட்டேன் மதி! உன் தாத் தாவை நானேக் கொன்னுட்டேன். இந்தப் பாவி... அவர் செய்த உதவியெல்லாம் மறந்து, நன்றியில்லாம திட்டிட்டேன். அதைத் தாங்கிக்க முடியாமதான் போய் சேர்ந்துடுச்சு அந்த தெய் வம். அவர் என் பிள்ளைங்களை எந்தளவுக்கு சரி யாப் புரிஞ்சு வச்சிருந்தார்னு இப்பதானே புரி யுது? இதுப் புரியாம... என்னென்னவோ பேசிட் டேனே? மதி... உன் தாத்தாவுக்குப் போட்ட மாதிரி எனக்கும் நீயே கொள்ளிப் போட் டும்மா... நீ தான் எனக்கு பிள்ளை... வேற யாரும் என் பிள்ளைங்க இல்லே!''

மறுபடி அழ ஆரம்பிக்க...

சன்மதி அம்மாவின் அருகே அமர்ந்து தோளைத் தட்டிக் கொடுத்தாள்.

''அம்மா... இப்படியெல் லாம் பேசாதேம்மா! தாத்தா வைப் பறிகொடுத்ததே பெரிய வலி! மறுபடியும் சாவைப்பத்தி பேசா தேம்மா... அப்புறம், உன்னை விட்டா எனக்கு வேற யாரு இருக்கா?''

பதில் கூற முடியாமல் மகளின் தோளில் முகம் புதைத்து விசும்பினாள் சொர் ணம்.

நமச்சிவாயம் இறந்ததும் சங்கரனுக்கு போன் பண்ணி விஷ யத்தை சொன்னாள் சொர்ணம்.

''எங்க வயித்தெரிச்சலைக் கொட் டிக்கிட்டா இப்படி தான் உயிரை விடணும். நாங்க வரமாட்டோம்... போனை வை முதல்ல...!'' என்றான்.

''சங்கரா... அதிர்ந்து ஒரு வார்த்தைப் பேசத்தெரியாத நீயா இப்படிப் பேசறே? இங் கேப் பாரு... இந்த மாதிரியான நேரத்திலே பகை பாராட்டக் கூடாது. இதோ பார்... மதி... உங்க ரெண்டு பேருக்கும் வீட்டை மாத்தி எழுதி தர் றேன்னு சொல்லியிருக்கா... வாப்பா...!''

''அதுக்கெல்லாம் வாய்ப்பே இல்லாம அந்தக் கிழவன் பக்காவா எழுதி வச்சிட்டுப் போய்ட்டான். எந்த காரணத்தை முன்னிட்டும் அந்த வீட்டை எங்க பேருக்கு மாத்தி எழுதக் கூடாதுன்னு எழுதிட்டுப் போயிருக்கான். அதை விக்க உன் பொண்ணுக்கு உரிமையிருக்கு வேணும்னா வித்து... ஷேர் கொடுக்கச் சொல்லு...!'' கறாராய் பேச அதிர்ந்துப் போய் போனை வைத்தாள்.

அவனை விட ஒருபடி அதிகமாய் புண் படுத்தினான் சதீஷ்.

''எதுக்கு போன் பண்றே? நீயே செத்தாக் கூட வரமாட்டேன்... எவன் செத்தா எனக் கென்ன? மரியாதையா போனை வை'' என்றான் சதீஷ்.

''ச...தீ...ஷ்...''

பட்டென்று போனை வைத்து விட்டான்.

## முகூர்த்த அர்ச்சனை

சென்னை திருப்பதி என்றழைக்கப்படுகிற திருநீர்மலை யில் கோயில் கொண்ட ரங்கநாதப் பெருமான் 4 நிலையில் சேவை சாதிக்கிறார். இங்குள்ள மணிகர்ணிகா தடாகத் திருக்குளத்தின் கிழக் குக் கரையில் சப்தமாதர்களுடன் கோயில் கொண்டுள்ள தூமகேது கண பதி தமிழ்நாட்டில் 9-வது கணேச மூர்த்தமாக சக்தி வாய்ந்தவராக விளங் குகிறார்.

இந்த தூமகேது கணபதிக்கு திருமணமாகாத கன்னிப்பெண்கள் மூன்று வாரங்கள் தொடர்ந்து முகூர்த்த அர்ச்சனை, திருப்பாற்கடல் வழிபாடு செய்தால் விரைவில் திருமணம் கைகூடுவதாக ஐதீகம். வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் செவ்வாய் கிழமைகள் மட்டுமே பிரார்த்தனை நாட்கள். குழந்தையில்லாதவர்களுக்கு சங்கட சதுர்த்தியில் சந்தான கணேச ஹோமம் நடத்தப்படுவது சிறப்பானதாகும்.

-கே. ராஜலட்சுமி குமார், சென்னை.

அதில் தான் சொர்ணம் மனசு வெறுத்துப் போனாள்.




கிட்டத்தட்ட இருபது நாட்களுக்குப் பிறகு தான் வேலைக்குச் சென்றாள் சன்மதி. தாத் தாவின் மறைவு மிகப்பெரிய இழப்பு என்பதை அவரில்லாத ஒவ்வொரு நொடியும், வீட்டில் ...ந்தரமாகிப்போன வெறுமையும் உணர்த்தி ...க்கொடுத்தது.

தாத்தாவிற்கும் ஒரு நாள் மரணம் வரும் ...ன்பதை அவள் கனவிலும் நினைத்ததில்லை. ...வீட்டிலிருக்கவும் பிடிக்கவில்லை. மூன்றாவது ...நாளே வேலைக்கு செல்ல நினைத்தாள். ஆனால் ...அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் ...விட்டது. பிள்ளைகளின் அரக்க குணம், அவள் ...இதயத்தை நைந்துப்போக வைத்து விட்டது.

உடனிருந்து கவனித்துக் கொண்டாள். ...உடல் நிலை தேறிய பிறகும், மனசு பக்குவப்ப...டும் வரை, கூடவே இருந்து சொர்ணம் கொஞ் ...சம் தெளிவாகி இயல்பு நிலைக்கு வந்தப்பிறகே ...வேலைக்கு வந்தாள்.



வரும்போதே பார்த்தாள்.

இளங்கோவின் கடை மூடப்பட்டிருந்தது. இருந்த மனநிலையில் அதைப் பெரிதாய் ...னைத்து ஆராயாமல் வங்கியினுள் நுழைந் ...தாள்.

உடன் பணிபுரிபவர்கள் அவளை அன்பு ...டன் விசாரித்து ஆறுதல் மொழிகளை கூறியது... ...தமாய் இருக்க... சற்றே எல்லாவற்றையும் ...மறந்து பணியில் மூழ்கிப் போனாள்.

மாலை... நான்கு மணி இருக்கும்.

''சன்மதி மேடம்... உங்களுக்கு போன்... அந்தப் போனை எடுத்துக்குங்க... இங்கே வச்சி ...றேன்.'' அக்கவுண்டன்ட் மோகன் குரல் கொடுக்க...

தன் பக்கத்திலிருந்த போனை எடுக்கு மூன், பலவித கற்பனைகள்.

'யார் பண்ணுவது? தாத்தா ஓரிரண்டு முறை பண்ணியிருக்கிறார். இப்போது அவரும் இல்லை. எனக்கென்று இருப்பது அம்மா மட் டுமே! அம்மா தானா? ஐய்யோ அம்மாவுக்கு ஏதாவது...'

''ஹலோ'' என்றாள் பதட்டத்துடன்.

''ஹலோ... சன்மதி மேடமா?'' எதிர் முனையில் ஆண்குரலொன்று சோர்ந்த குரலில் கேட்க... குழம்பிப்போனாள்.

''யெஸ்... யார் பேசறது?''

''இளங்கோ பேசறேன் மேடம்... நல்லா ருக்கீங்களா?''

சட்டென மழைமேகமொன்று அவளைத் தழுவிச் சென்றதுப் போல் ஓர் சிலிர்ப்பு.

''ஓ... இளங்கோ! நான் எதிர்பார்க்கலே... நீங்க போன் பண்ணுவீங்கன்னு!''

''ஆமா, நான் எதிர்பார்த்தேன் மேடம்... உங்களிடமிருந்து போன் வராதான்னு ஒவ் வொரு நாளும் எதிர்பார்த்தேன்.''

''ஸாரி... நான் பதினஞ்சு நாள் லீவுல இருந்தேன். இன்னைக்குதான் வந்தேன். நல்லா ருக்கீங்களா இளங்கோ?''

''ம்ஹூம்... நல்லாயில்லே!''

''என்ன சொல்றீங்க?''

''உடம்புக்கு முடியலே மேடம்! கடை திறந்து ஒரு வாரமாயிடுச்சு. உடம்புக்கு முடி யாம நான் கஷ்டப்பட்ட இந்த ஒரு வாரமா தான் எனக்கு பார்வையில்லையேன்னு கண்ணீர் விட் டேன்!''

''.......''

''தனியா ரொம்ப அவஸ்தைப்பட்டுட் டேன் மேடம். யாராவது அன்பா ரெண்டு வார்த்தை பேசமாட்டாங்களான்னு ஏங்கிப் போய்ட்டேன். உங்களைப் பார்க்க தான் முடி யாது. அட்லீஸ்ட் உங்க குரலையாவது கேட்க ணும் போலிருந்தது. அதனால தான் வெளியிலே வந்து போன் பண்ணினேன். நீங்க என்னை தொந்தரவு செய்யறதா நினைக்கலையே!''

அவன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் இத யத்தில் பசை போட்டு ஒட்டிக் கொள்ள... கருணை சுரந்தது.

''சேச்சே... நீங்க எப்ப வேணும்னாலும் எனக்கு போன் பண்ணலாம். உங்க வீடு எங்கே யிருக்கு?''

''கடைக்கு பின்பக்கமுள்ள ரெயின்போ காலனியிலே தான்!''

''அட்ரஸ் சொல்லுங்க... வேலை முடிஞ்சதும் வர்றேன்!''

''நீங்களா? என் வீட்டுக்கா? நிஜமாகவா சொல்றீங்க?''

''ஏன் வரக்கூடாதா?''

''ஐயோ... நான் கொடுத்து வச்சிருக்கணும்... வாங்க மேடம்... காத்திருப்பேன்!''

மிகச்சிறிய வீடு!

ஒற்றை அறை! அங்கேயே படுக்கை, சமையல் எல்லாமே! சின்னதாய் பாத்ரூம்.

''உள்ளே வரலாமா மிஸ்டர் இளங்கோ?''

அவளுக்காகவே காத்திருந்தவன்... அவசரமாய் எழுந்து வந்து ''வாங்க மேடம்... உள்ளே வாங்க!'' என்றவன் பழக்கப்பட்டிருந்ததால் சிரமமின்றி சேரை இழுத்துப்போட்டான்.

அமர்ந்தவள்... அப்போது தான் அவனைப் பார்த்தான்.

துணுக்குற்றாள்.

கையிலும், காலிலும் தீக்காயங்கள்.

''இளங்கோ... என்ன இது தீக்காயம்?''

''அதுவா? நல்ல காய்ச்சலில் வீட்டோடு இருக்க வேண்டிய கட்டாயம். என் நண்பன் பாஸ்கரும் ஊரில் இல்லை. பிஸினஸ் விஷயமா ஊர் ஊரா அலைஞ்சிட்டிருக்கிறான். அதனால தனியா தவிச்சுப் போய்ட்டேன். நானே கஞ்சி காய்ச்சினேன். இந்த வீட்லே ஒவ்வொரு பொருளும் எனக்கு அத்துபடி. இருந்தாலும் சாப்பாடெல்லாம் ஹோட்டல்லதான். பெரும்பாலும் அடுப்பெரியறதே எப்பவோ ஒரு நாள் தான். அதுவும் பிறர் துணையோடுதான். ரெண்டு நாள் முன்னாடி நானே காய்ச்சி இறக்கி வைக்கிறதா நினைச்சுக்கிட்டு என் மேலேயே கொதிக்கிற கஞ்சியை கொட்டிட்டேன்!''

''ஐயய்யோ... அப்புறம்?''

''அப்புறமென்னங்க... கை, காலெல்லாம் கொப்புளிச்சுப் போச்சு.''

''டாக்டரிடம் போனீங்களா?''

''அதுக்கும் பிறர் தயவு வேணும். யாரையும் சிரமப்படுத்த விரும்பலே... கை வைத்தியம் தான்!''

''உங்களுக்கு யாருமே இல்லையா?''

''அப்படியெல்லாமில்லீங்க... அம்மாவும், அக்காவும் இருக்காங்க. திருநெல்வேலி தாண்டி ஒரு குக்கிராமம் சொந்த ஊர். அம்மா அங்கேதான் இருக்காங்க. அக்காவுக்கு கல்யாணமாகி குற்றாலம் பக்கம் இருக்காங்க!''

''அம்மாவை உங்களுக்குத் துணையா இங்கே வரவழைக்கலாமே?''

மென்மையாய் சிரித்தான். அதில் சோகம் இழையோடியது.

''அம்மா வரமாட்டாங்க மேடம்! சந்தோ
ஷமா வாழ்ந்த குடும்பம் தான்! அப்பா விவசாயி
பெரியளவுல இல்லேன்னாலும், யார் கிட்டே
யும் கடன் வாங்காம குடும்பம் நடத்த
அளவுக்கு நிறைவான வாழ்க்கைதான். நான்
ப்ளஸ்டு பாஸ் பண்ணிட்ட செய்தியை சொல்
துக்காக சைக்கிள்ல வேகமா வந்துட்டிருந்தேன்
அசுர வேகத்துல எதிரே வந்த லாரி என் மே
மோதி நான் தூக்கி எறியப்பட்டேன். சைக்கிள்
அப்பளம் போல் நொறுங்கி போச்சு. தூக்கி வீச
பட்ட நான் விழுந்ததென்னவோ வரப்பு மே
தான். உடம்புல அதிகமா அடிபடலே. ஆன
அங்கிருந்த கூர்மையான கற்கள் என் கண்கள
குத்திக் கிழித்து பார்வை போயிடுச்சு. அப்ப
வுக்கு நான்னா உயிர். தன் ஒரேப் பிள்ளைக்
இப்படியாய்டுச்சேன்னு நினைச்சு... நினைச்
புத்தி பேதலிச்சுப் போச்சு. ஒரு நாள் சுயநினை
வில்லாம வீட்டை விட்டுப் போய்ட்டார்
தேடாத இடமில்லே. கிடைக்கவேயில்லே. அ
மாவும், அப்பாவும் அந்நியோன்யமா வாழ்ந்
வங்க. அப்பா காணாமப் போனதிலேர்ந்
அம்மா வீட்டை விட்டு வர்றதில்லே. இருந்
நிலத்தை வித்து அக்காவை கல்யாணம் பண்ணி
கொடுத்துட்டோம். அம்மாவைக் காப்பாத்
ணுமே! கண் தெரியாதவனுக்கு குக்கிராமத்தில்
என்ன வேலை வாய்ப்பு இருக்கும்? அதனால
ஊர்த்தலைவர் பிரயாசைப்பட்டு சென்னை
யிலே ஊனமுற்றோருக்கான பேங்க் லோன்
வாங்கி, இந்த டெலிபோன் பூத்தை வைத்
கொடுத்தார். ஏதோ... ரெண்டு வயிறும், வாடா
அளவுக்கு வருமானம் வந்துட்டிருக்கு. பத்து
வருஷமாச்சுங்க இங்கே வந்து!''

''அப்பா கிடைக்கவேயில்லையா?''

''......''

''ஏன் கண்கலங்கறீங்க?''

''கிடைச்சாருங்க... உயிரில்லாம கிடைத்
சார்.''

''என்னது?''

''ஆமாங்க.... திருநெல்வேலி டவுன் ஆஸ்
பிடல்ல சவக்கிடங்கிலே அனாதைப் பிணங்
ளோட பிணமா கிடந்திருக்கார். அந்த ஆஸ்
டல்ல வேலை செஞ்சுட்டிருந்த ஊர்த்தலை
ரோட மச்சான் தான் பார்த்துட்டு சொன்னா
நானும், தலைவரும் போனோம். தலைவர், அ
எங்கப்பாதான்னு உறுதிப்படுத்தினார். அ
கேயே அவரை புதைச்சுட்டு வந்துட்டோ

இன்னிக்கு வரைக்கும் அப்பா இறந்த விஷயம் அம்மாவுக்கு தெரியாது!''

''ஏன்?''

''எங்கம்மாவை நீங்க பார்த்திருக்கணும். அவ்வளவு மங்களகரமா, மஞ்சள் பூசி, நாலணா சைஸுக்கு குங்குமம் இட்டு பார்வதி தேவி மாதிரி இருப்பாங்க. என் மனசுல அம்மாவோட முகம் ஆழமா பதிஞ்சிருக்கு. அந்த முகத்தை பொட்டு இல்லாம... முடியலீங்க... கற்பனை பண்ணிப் பார்க்கவே முடியலீங்க! தவிர, அந்த அதிர்ச்சியை அவங்களால தாங்கிக்கவே முடியாது. உயிரோட இருக்க மாட்டாங்க. எனக்கு எங்கம்மா வேணும். தன் புருஷன் என்னைக்காவது ஒரு நாள் தேடி வருவார். அப்படி வரும் போது... இந்த ஊர்லேயே நான் இல்லாமப் போனா... அவர் எங்கேப் போவார்னு? மனசை கல்லாக்கிட்டு... எங்கப்பாவுக்காக காத்திருக்காங்க. அந்த நம்பிக்கைய சிதைக்க விரும்பலீங்க. அதுக்காக நான் எவ்வளவு கஷ்டப்படவும் தயாரா இருக்கிறேன்.''

அவன் சொல்ல.. சொல்ல பிரம்மிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தாள் சன்மதி.

'தாம்பத்யத்தில் எந்தளவு அந்நியோன்யம் இருந்திருந்தால் அந்தம்மா... பார்வையில்லாமல் கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிற பிள்ளையைக் கூட இரண்டாம்பட்சமாக்கி, புருஷனுக்காக காத்திருப்பாள்? அதைவிட... அதைப் புரிந்துக் கொண்டு அப்பாவின் மரணத்தை தனக்குள்ளேயே புதைத்து, மனம் வெந்து, தனியே கஷ்டப்படுவான் இவன்?'

அவன் மீது அன்பும், மரியாதையும் அதிகரித்தன.

''கேட்கவே கஷ்டமாகவிருக்கிறது இளங்கோ!''

''நான் ஒரு மடையன். முதன் முதலா என் வீட்டுக்கு வந்திருக்கீங்க. உங்களைப் பத்தி எதுவும் தெரிஞ்சுக்காம, என்னோட சோக கதையை சொல்லிக்கிட்டிருக்கேன் பாருங்க. உங்களைப் பத்தி தெரிஞ்சுக்க ஆசைப்படறேன். சொல்லுங்களேன்!''

''இன்னொரு நாளைக்குச் சொல்றேன். இப்ப என்னோட புறப்படுங்க!''

''எங்கே?''

''ஆஸ்பிடலுக்கு?''

''ஆஸ்பிடலுக்கா? எதுக்குங்க?''

''ரொம்ப காயம் இருக்கு... ஃபீவர் வேற... புறப்படுங்க!''

''உங்களுக்கு எதுக்கு சிரமம்? வேண்டாங்க!'' தயங்கினான்.

''என்னை உங்க தோழியா நினைச்சிங்கன்னா புறப்படுங்க!''

களைப்பை மீறி இளங்கோவின் முகத்தில் மகிழ்ச்சிப் பரவியது.




தாத்தாவின் மறைவினால் ஏற்பட்ட காயம் இளங்கோவின் நட்பினால் ஆற ஆரம்பித்தது.

தினமும் பூத்தில் சந்தித்து இரண்டு வார்த்தை பேசாமல் வரமாட்டாள். அவனைப் பற்றி அறிந்து ஆச்சர்யப்பட்டான்.

''சன்மதி... நீங்க பத்திரிகைகளுக்கு கதையெல்லாம் எழுதுவீங்களா? அப்படின்னா ஒரு வி.ஐ.பி.யோட ஃப்ரண்ட்ஷிப் எனக்கு கிடைச்சிருக்கா? நிஜமாகவே நான் அதிர்ஷ்டக்காரன் தான்.''

''என்னது? உங்க தாத்தா இறந்த துக்கத்திலேயும் என்னைப் பார்க்க வீட்டிற்கு வந்து கனிவாய் பேசி, ஆஸ்பிடலுக்கும் அழைச்சிட்டுப் போய்... எப்படிங்க உங்களுக்கு இப்படியொரு பக்குவம் வந்தது? அதுவும் இருபத்திரெண்டு வயசுலேயே...''

விடுமுறை நாட்களில் அவன் வீட்டிற்கு சென்று விடுவாள். சில சமயங்களில் வீட்டில் சமைத்ததை எடுத்து வந்து பரிமாறுவாள்.

நெகிழ்ந்துப் போய் விடுவான் இளங்கோ.

''குருடனான என் மேலே உங்களுக்கு எப்படிங்க இவ்வளவு பாசம் வந்தது?''

''அடடா... என்ன இளங்கோ நீங்க? இப்படியாப் பேசறது? எனக்கு பிடிக்காததே இந்த தாழ்வு மனப்பான்மைதான்... சாப்பிடுங்க.''

''நானா சொல்லிக்கலேன்னாலும் குருடன்தானே?''

''என்னைப் பொறுத்தவரை அறியும் சக்தியைப் போன்ற ஒரு கண் இல்லை. அறியாமையைப் போன்ற ஒரு குருடும் இல்லை. மனுஷங்களாப் பொறந்த அத்தனை பேருக்கும் ஏதாவது ஒரு குறை இருக்கத்தான் செய்யுது. சில பேருக்கு கால் இல்லை, கை இல்லை, இதயம் பலவீனம், பணத்தாசை, பிறரை நேசிக்க மனசு வராதது... இதெல்லாமே குறைதானே? நானும் குறையுள்ள மனுஷிதான். அதையே நினைச்சு வருத்தப்படக் கூடாது. மைண்டை வேற எதிலாவது டைவர்ட் பண்ணி உயரணும். இழந்ததை நினைத்து வருந்துவதில் எந்தப் பலனு

மில்லை.''

''இப்படியொரு நிலைமையிலே நான் எப்படிங்க உயர முடியும்?''

''ஏன் முடியாது? என் தாத்தா எனக்கு அடிக்கடி சொன்ன வார்த்தைகள் இதுதான். இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் தைரியம், புத்தி, நுண்ணறிவுன்னு மூன்று நண்பர்கள் இருந்தால் போதும்... எல்லோரும் சாதனை படைக்கலாம். என் குறையை ஒரு குறையா நினைக்காததாலதான் என்னால கதை எழுத முடியுது. பேங்க் எக்லாம் எழுதி பாஸ் பண்ணி... வேலையிலே சேர முடிஞ்சது. அதுப்போல உங்களாலே ஏன் முடியாது?''

''என்னையும் கதை எழுதச் சொல்றீங்களா?''

''இப்படி எதிர்க்கேள்வி கேட்டா என்ன சொல்றது? சரி... இப்படி செஞ்சா என்ன? நீங்க ஏன் மேற்கொண்டு படிக்கக் கூடாது?''

''சன்மதி... நீங்களும் என்னை கேலிப் பண்றீங்களா?''

''சேச்சே... ஏன் அப்படி சொல்றீங்க?''

''பின்னே என்னங்க? கண் தெரியாததாலதானே கொதிக்கிற கஞ்சியை மேலே கொட்டிக்கிட்டேன். என்னைப் போய் படிக்கச் சொல்றீங்க.''

''பார்க்கதான் வாட்ட சாட்டமா வளர்ந்திருக்கீங்க. மண்டையிலே ஒண்ணுமில்லே.''

''எனக்கு நான் பதினேழு வயசுல இருந்த வரை ஞாபகம் இருக்கு. இந்த பத்து வருஷத்துல நான் நல்லா வளர்ந்திருப்பேன் இல்லே? முகமெல்லாம் மாறிப் போய், மீசையெல்லாம் நல்லா வளர்ந்து... ஏங்க நான் பார்க்க அழகாயிருக்கேனா?'' அப்பாவித்தனமாய் கேட்டான்.

சன்மதி மனம் கனக்க அவனையே பார்த்தாள்.

'தன் உருவம் கூட அறிய முடியாத வேதனை மிகப்பெரிது. இவனுக்கு என்னால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ... அதையெல்லாம் செய்ய வேண்டும்.'

''என்னங்க அமைதியாய்ட்டீங்க? அவ்ளோ மோசமாகவா இருக்கேன்?''

''சேச்சே... உங்கம்மாவா இருந்திருந்தா... 'என் பிள்ளை ராஜா மாதிரி இருக்கான். சினிமாக்காரனுங்க பிச்சை வாங்கணும். என் பிள்ளையை



## .கால்பந்து வீரரின் காதல் பயணம்

உலக விளையாட்டு வீரர்களிலேயே அதிக சம்பளம் வாங்கும் கால்பந்து வீரர் டேவிட் பெக்காம். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் ஸ்பெயினில் உள்ள மாண்ட்ரிட் கால்பந்து அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டு இப்போது விளையாடி வருகிறார். இதற்காக டேவிட் பெக்காமுக்கு பல நூறு கோடிகளை இந்த கிளப் கொட்டிக் கொடுத்துள்ளது.



ரெபேகா

உலக பிரபலங்கள் எப்போதுமே பிரச்சினைகளில் சிக்கி மாட்டிக் கொண்டு முழி பிதுங்குவது உண்டு. பெக்காம் மட்டும் விதிவிலக்காகி விட முடியுமா என்ன? ஏற்கனவே திருமணமான இவருக்கு விக்டோரியா என்ற மனைவியும், 2 மகன்களும் உண்டு.

இந்த நிலையில் இவருடன் எப்போதும் நிழலாக ஒட்டிக் கொண்டிருக்கும் இவரது உதவியாளர் ரெபேகா லூசுக்கும் இவருக்கும் அந்தரங்க உறவு இருப்பதாக செய்திகள் வெளியாகின. இது உண்மைதான் என்று ரெபேகா லூஸ் ஒப்புக் கொள்கிறார். பெக்காம் இதற்கு மறுப்பு தெரிவித்தும் பலன் இல்லை. பிரச்சினை விசுவரூபம் எடுக்கத் தொடங்கி உள்ளது.

ஆனால் பெக்காமின் மனைவி விக்டோரியா இதை நம்பத் தயாராக இல்லை. பெக்காம் தன்னை கைவிடமாட்டார் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார்.

பெக்காம் ஒரே நேரத்தில் 2 படகில் பயணம் செய்கிறாரா என்பது தெரியவில்லை. ஆனால் ரெபேகா சொல்வதை நம்பாமலும் இருக்க முடியவில்லை.

இந்த பயணம் எத்தனை நாளைக்கு என்பது தான் இப்போதுள்ள கேள்விக்குறி?

- இருமகள்.

கல்யாணம் பண்ணிக்க எந்த பொண்ணுக்கு கொடுத்து வச்சிருக்கோ'ன்னு சொல்வாங்க.''

இளங்கோ சாப்பிடுவதை நிறுத்தினான். அவன் நரம்புகளில் புதுரத்தம் பாய்ந்ததுப் போலிருந்தது.

''என்ன... என்ன சொன்னீங்க? மறுபடி சொல்லுங்க.''

''போதும்... நீங்க பார்க்க ரொம்ப அழகாகவே இருக்கீங்க. விஷயத்துக்கு வருவோம். பார்வையில்லாத லட்சக்கணக்கான பேர் படிக்கலையா என்ன? நீங்களும் ஒரு டிகிரியாவது முடிக்கணும். அதை வச்சு நிரந்தரமா நல்ல வேலையைத் தேடிக்கலாம்.''

''இதெல்லாம் சாத்தியமா சன்மதி?''

''கண்டிப்பா முடியும்... உங்களிடம் ஆர்வமிருந்தா?''

''என்மேலே உங்களுக்கே இவ்வளவு நம்பிக்கை இருக்கும் போது... அதிலே பாதியாவது என் மேலே எனக்கு இருக்கணும்ங்க. நீங்க சொல்றமாதிரி நான் படிக்கிறேன்ங்க.''



மனைவி விக்டோரியாவுடன் பெக்காம்.

''வெரிகுட்.''

அவன் தோளில் உற்சாகமாய் தட்டிக் கொடுத்தாள்.

இளங்கோவினுள் அந்த ஸ்பரிசம் இதய நரம்புகளில் வீணை வாசித்தது.

நாட்கள் வேகமாய் நகர்ந்தன.

இளங்கோவை தபாலில் பட்டப்படிப்பு படிக்க ஏற்பாடு செய்கிறாள். அதற்கான செலவையும் தானே ஏற்றுக் கொள்கிறாள்.

சனி, ஞாயிறில் தவறாது இளங்கோவின் வீட்டிற்கு வந்து விடுவாள். அவனுக்கு பாடங்களை படித்துக் காட்டுவதுடன் விளக்கிச் சொல்வாள்.

அன்று சன்மதி வீடு திரும்ப... கொஞ்சம் தாமதமாகி விட்டது. முகம் கழுவிக் கொண்டு, செயற்கை காலை கழற்றி வைத்து விட்டு, சற்றே வீங்கியிருந்த தசையின் மேல் மருந்தை தடவிக் கொண்டாள்.

சொர்ணம் காபியோடு மகளின் அருகில் வந்தமர்ந்தாள்.

''முதல்ல... காபியக் குடிம்மா'' என்றவள் காபி டம்ளரை அவளிடம் கொடுத்து விட்டு மருந்தை வாங்கிக் கொண்டாள்.

''ரொம்ப வீங்கியிருக்கே சன்மதி?'' கவலையாய் தேய்த்து விட்டாள்.

''ஆமாம்மா.... இளங்கோ வீட்டில் கழற்றியும் வைக்க முடியாது.''

''ஏம்மா?''

''இளங்கோவுக்கு நான் கால் ஊனமானவள்னு தெரியாதும்மா. தெரிஞ்சா வருத்தப்படுவார். இவ்வளவு சிரமத்திற்கிடையிலும் எனக்கு உதவி செய்யணுமான்னு என் உதவிகளை மறுத்திடுவார். அதனாலதான் சொல்லவில்லை.''

''நான் ஒன்னு சொன்னா தப்பா நினைக்கமாட்டியே?''

''என்னம்மா... சொல்லு?''

''நீ ஏம்மா அந்த பிள்ளை மேலே அவ்வளவு அக்கறை எடுத்துக்கறே?''

''ஏம்மா... நீ என்னை தப்பா நினைக்கறியா?''

''நான் நினைக்கலேன்னாலும், இந்த ஊர் தப்பாப் பேசும் சன்மதி.''

சன்மதி கண்கள் அகல அம்மாவைப் பார்த்தாள்.

''அவர் பார்வையில்லாதவர்ம்மா. அவருக்கு நான் உதவி செய்யறதை எப்படி தப்பாப் பேச முடியும்?''

''பார்வையில்லாதவனாயிருந்தாலும் அவனும் வாலிபன்தானே? நீ நல்ல மனசோடுதான் எல்லாமே செய்யறே. இங்கிருந்து சாப்பாடையும் எடுத்துக்கிட்டு அவனுக்கு பரிமாறறதையும் பாடம் சொல்லிக் கொடுக்கறதையும் பார்க்கிறவங்க வேற மாதிரி கண்ணோட்டத்திலேதானே பார்ப்பாங்க? அதுவும் இந்த

வீட்லே நான் தனியா இருக்கேனேங்கற நினைப்பே இல்லாம, லீவு நாளைக் கூட அவனுக்காக செலவிடறே.''

''அம்மா...'' சொர்ணத்தின் முகவாயைத் தொட்டு நிமிர்த்தினாள்.

''என்னைப் பார்த்து சொல்லு. ஊரைப் பத்தி நான் கவலைப்படலே. நீ சொல்லு... நீ என்னை தப்பா நினைக்கிறியாம்மா?''

''சேச்சே... பெத்தவளுக்குதான்டி தெரியும், பொண்ணைப் பத்தி! உனக்குன்னு இந்த சமூகத்துல ஒரு கவுரவம் இருக்கு. அதுக்கு எந்த வகையிலும் பங்கம் வந்துடக் கூடாதேன்னு தான் பயப்படறேன். நல்ல பேரை வாங்கறது தான் கஷ்டம். ஆனா கெட்ட பேர் வாங்கறதுக்கு ஒரு விநாடி போதும்.''

''அம்மா... நீ என்னை நம்பறே இல்லே? அது போதும். ஊரைப் பத்தி கவலைப்படாதேம்மா. அதுக்கு நல்ல விஷயங்களை பேசத் தெரியாது. அடுத்தவங்க வேதனைகளை வேடிக்கை பார்க்க மட்டும்தான் தெரியும். நான் இளங்கோ மேலே அக்கறை எடுத்துக்கறதுக்கு காரணம் இருக்கும்மா. என்னைப் போல அவரும் ஊனமுற்றவர். இருட்டுல நம்மால ஒரு நாளாவது வாழ முடியுமா? பார்வையே இல்லாத இளைஞன்ம்மா. சப்போர்ட்டுக்கு ஆள் இல்லாம அவர் கஷ்டப்படறார். நானாவது இழந்ததை செயற்கை கால் பொருத்தி சமாளிச்சுக்கறேன். அவரால முடியுமா? நான் துவண்டுப் போயிருந்தப்ப தாத்தா எனக்கு கொடுத்த தன்னம்பிக்கையதாம்மா... இப்போ நான் இளங்கோவுக்கு கொடுத்துக்கிட்டிருக்கேன். தாத்தா இருந்தா... இந்த விஷயத்துக்காக முதல் ஆளா என்னை பாராட்டி உற்சாகப்படுத்தியிருப்பார். உன் பொண்ணு ஒரு இளைஞனோட வாழ்க்கையிலே நல்லதொரு வழிகாட்டதான் பாடுபட்டுக்கிட்டிருக்கேன். ஆமாம்மா... அவருக்கு நல்லதொரு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தர்றது மட்டுமல்ல... அவருக்கு இழந்தப் பார்வையை மீட்டுத் தரணும்ங்கறது என்னோட ஆசை. அதுக்கான முயற்சிகள்லேயும் இறங்கியிருக்கேன். தாத்தா உயிரோட இருந்திருந்தா ரொம்ப சந்தோஷப்படுவார்ம்மா.''

''ஹூம்... நீ நல்லதுதான் செய்யறே... புரியுது. ஆனாலும் மத்தவங்க வாய்க்கு அவலாகிடக்கூடாதேன்னுதாம்மா பயப்படறேன். ஆமா, இதென்ன பக்கத்திலே... பேப்பரும், பேனாவும்? எழுதப் போறியா? இப்பதானே வந்தே. கொஞ்சமாவது ரெஸ்ட் எடுத்துக்கக் கூடாதா சன்மதி?''

''இது ஒரு நாவல் போட்டிக்காக எழுதிட்டு இருக்கிறேன். தடுக்காதேம்மா. வெளிநாட்டு தொண்டு நிறுவனமும், நம்ம நாட்டு இலக்கிய கூட்டமைப்பும் சேர்ந்து நடத்தற போட்டி. கண்பார்வையற்ற இளைஞர் ஒருவர் தன் வாழ்வில் எதிர்கொள்கிற பிரச்சினைகளைப் பற்றிய கதை. இன்ஸ்பிரேஷன் இளங்கோ. நம்பிக்கையோட எழுதறேன். முதல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டால் உன் பொண்ணோட கதை வெளிநாட்டிலேயும் மொழி மாற்றம் செய்யப்பட்டு... என் புகழ் பரவும்.''

''என்னவோ சொல்றே... புரியலே. எப்படியோ... உன் தாத்தா உன்னை ஆசிர்வதிப்பார்.'' குடித்து வைத்திருந்த காலி டம்ளரை எடுத்துக் கொண்டு சென்றாள் சொர்ணம்.




முதல் ஆண்டுத் தேர்வை... அவன் சொல்ல... சொல்ல... அவனுக்காக இன்னொரு இளைஞன் எழுதினார். இளங்கோ முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றான்.

நெகிழ்ந்துப்போய் கண்ணீர் உகுத்தான் இளங்கோ. சன்மதியின் கரங்களை... அவளே எதிர்பாராத கணத்தில் பற்றி கண்களில் வைத்துக் கொண்டு... முதுகு குலுங்கினான்.

சன்மதி அதிர்ந்தாள்.

''இ...ள..ங்..கோ! என்ன... என்னாச்சு? எதுக்காக அழறீங்க?''

''நா... நான் எப்படி உங்களுக்கு நன்றியை சொல்றதுன்னேத் தெரியலே சன்மதி. இன்னைக்கு பார்வையில்லாத என்னால் முதல் வகுப்பில் பாஸ் செய்ய முடிந்திருக்கிறதென்றால் காரணம் யார்? என் வாழ்க்கையில் வசந்தங்களை தேடித் தேடி கொடுத்த இந்த தேவதையின் முகத்தை நான் பார்க்கணும் சன்மதி! என்னைப் பெத்தவங்களைக் கூடப் பார்த்துட்டேன். அவங்களையோ, ஏன் என்னையோக் கூட பார்க்க ஆசைப்படலே சன்மதி. உங்களைப் பார்க்கணும். கருணை வடிவான உங்க தங்கமுகத்தைப் பார்க்கணும். ஒரே ஒரு கணம் எனக்கு பார்வை வந்துப் போய்ட்டாக் கூட பரவாயில்லை. நான் உங்களைப் பார்க்கணும்.''

அவனின் பதைப்பு, கண்ணீர், ஸ்பரிசம் அனைத்தும் அவள் மேல் அவன் எந்தளவிற்கு அன்பு வைத்திருக்கிறான் என்பதை சொல்லாமல் சொல்ல... பிரம்மிப்புடன் அவனையே ...ார்த்துக் கொண்டிருந்தாள்.

கன்னத்தில் வழிந்தக் கண்ணீரை துடைக்க ...டுத்த கையை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''இளங்கோ... ப்ளீஸ் காம் டவுன்! பெண் ...ள் அழுவதேப் பிடிக்காது. ஆண்கள் அழுவது ...பத்தம். என்னை மட்டுமல்ல... இந்த உல...த்தை நீங்கள் மறுபடி பார்க்க வேண்டும். பார்ப்...ர்கள். நம்பிக்கையோடு இருங்கள். நாளையே ...ம் ஒரு நல்ல ஐ ஸ்பெஷலிஸ்ட்டை பார்க்கி...றோம்... சரியா?''

''நிஜமாகவா... ரொம்ப... ரொம்ப ...ங்க்ஸ் சன்மதி!'' அவள் கையை உயர்த்தி புறத்...ல் முத்தமிட்டான்.

சிலிர்த்துப் போனாள் சன்மதி.

''இது என் உள்ளத்தில் பொங்கிக் கொண்...ருக்கிற அன்பின், நன்றியின் வெளிப்பாடு!''

''சரி... நேரமாச்சு இளங்கோ... நான் புறப்...டறேன். நாளை ரெடியாக இருங்கள்... டாக்...டம் போவோம்!''

''ம்...''

அன்றிரவெல்லாம் உறக்கம் வராமல் ...வித்தாள் சன்மதி.

புறங்கையில் இன்னமும் இளங்கோவின் ...சையின் குறுகுறுப்பும், உதடுகளின் சில்லிப்...ம் இருந்தன. கையை உயர்த்தி... அதையே ...மைக்காமல் பார்த்தவள், மெல்ல தன் உதட்...ன் மேல் வைத்து அழுத்திக் கொண்டாள்.

'என்ன இது? நானா? நானா இப்படி நடந்... கொள்கிறேன்? என்னாயிற்று எனக்கு? இந்த ...ய்கைக்கு என்னப் பெயர்? காதலா? நானா? ...ளங்கோவை காதலிக்கிறேனா? எப்போதி...து? கடவுளே... இதென்ன புதுக்குழப்பம்?'

'ஏன் மதி? காதலித்தால்தான் என்ன? ...ளங்கோ நல்லவன். மனிதாபிமானம் உள்ள...! தாயின் மீது அளவுக்கடந்த அன்புள்ளவன். ...ப்படிப்பட்டவனால் தான் உன்னைப் புரிந்துக் ...ள்ள முடியும்.'

'அம்மா சம்மதிப்பார்களா? அன்று கேட்ட...து அப்படியெல்லாம் எதுவுமில்லை என்...யே!'

'அன்று வரை அவர் மீது காதலிருப்பது ...க்கேத் தெரியாதே! அம்மாவிடம் எடுத்து ...ன்னால் சம்மதிக்க மாட்டார்களா என்ன? ... விருப்பத்திற்கு ஒருபோதும் குறுக்கே நிற்க...டார்கள். தன் மகளுக்கு நல்ல மனகள்ள... மட்டுமே கணவனாக வர முடியும் என்...த அறியாதவர்களா என்ன? பார்வையற்றவர் என்பதை காரணம் காட்டி வலுவாய் மறுக்கவும் முடியாது. நானும் ஊனமானவள் என்பதை மறுக்க முடியாதே! இளங்கோவை எப்படி நேசிக்க ஆரம்பித்தேன்? இரக்கப்பட்டா? நிச்சயம் இருக்க முடியாது. அவர் தன் தாயின் உணர்வுகளை மதித்து, தந்தை இறந்ததைக் கூட தெரியப்படுத்தாமல் தாயின் சந்தோஷத்திற்காக வாழ்பவர். அந்த நல்ல மனசு தான் என்னுள் நுழைய காரணமாய் இருந்திருக்கிறது.

அவர் மனதிலும் நானிருக்கிறேன். என்றாலும் இப்போதைக்கு காதலை வெளிப்படுத்திவிடக் கூடாது. அவருக்கு முதலில் பார்வை கிடைக்க செய்ய வேண்டும். அதன் பிறகு வெளிப்படுத்திக் கொள்ளலாம்.' பலதையும் எண்ணி அசைப்போட்டபடி உறங்கிப் போனாள்.

நகரின் சிறந்த ஐ ஸ்பெஷலிஸ்ட் மதிவாணனிடம் அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கியிருந்தாள் சன்மதி.

இளங்கோவை அழைத்துச் செல்ல பர்மிஷன் போட்டு விட்டு அவன் வீட்டிற்கு சென்றாள்.

இளங்கோவுடன் அவனின் நண்பன் பாஸ்கரும் இருந்தான்.

''வாங்க மேடம்... என்னை நினைவிருக்கா? இளங்கோவை அழைச்சிட்டு உங்க பேங்க்குக்கு வந்திருக்கிறேன்''

''வணக்கம்... உங்க பேரு பாஸ்கர் கரெக்ட்டா?''

''எப்படிங்க நினைவு வச்சிருக்கீங்க? ரொம்ப நாளைக்குப் பிறகு சந்திக்கறோம். வெளியூர்ல பிஸினஸ்ங்கறதால இளங்கோவை கூட இருந்து கவனிச்சுக்க முடியலியேன்னு வருத்தப்பட்டேன். ஆனா, இப்ப இளங்கோ அடைந்திருக்கிற உயரத்தை பார்க்கும்போது பிரம்மிப்பா இருக்குங்க. ஒரு பொண்ணு நினைச்சா எதையும் சாதிக்க முடியும்ங்கறதை நிருபிச்சிட்டீங்க. எழுத்தாளர் சன்மதியின் படைப்புகளை நானும் படிச்சிருக்கேன். அந்த ஆழமான கருத்துக்களும், எழுத்துக்களும் என்னை யோசிக்க வைத்தவை. அப்படிப்பட்ட சாதனையாளர்தான் இந்த சன்மதின்னு நினைக்கிறப்ப... சொல்ல வார்த்தைகள் வரலில்லை மேடம். எழுத்துக்கள்ல மட்டுமில்லே செயல்லேயும் நான் மனிதநேயம் மிக்கவள்னு சொல்லாம சொல்லிட்டீங்க!''

''நீங்க என்னை ஓவராப் புகழ்றீங்க!''

''உன்னைத் சொல்லேன். இளங்கோவுக்கு பார்வை கிடைக்க முயற்சி செய்யறீங்களாமே! சொன்னான். அவன் தம்பனா இருந்து, இதுவரை நானே யோசிக்காத விஷயம். என்னை நினைச்சா, எனக்கே வெட்கமாக தான் இருக்கு. டாக்டரைப் பார்க்க உங்களோட, நானும் வரலாமா?''

''ஓ...ஷ்யூர்! இளங்கோ... நீங்க ரெடியா?''

''ம்... ஒரே டென்ஷனாயிருக்குங்க. டாக்டர் நெகடிவ்வா சொல்லிடுவாரோன்னு.''

''ரிலாக்ஸ் இளங்கோ! எப்பொழுதும் தோல்வியை சமாளிக்க நாம தயாராயிருக்கிற மனப்பக்குவத்தை வளர்த்துக்கணும். அப்பதான் வெற்றி தாமாகவே கிடைக்கும். நல்லதையே நினைப்போமே!''

''வெல்ஸெட் மேடம்! நல்லா உறைக்கிற மாதிரி சொல்லுங்க. எப்பவும் நெகடிவ் திங்கிங் தான் இவனுக்கு. நான் போய் ஆட்டோ கூட்டிக்கிட்டு வந்திடறேன்'' வெளியில் சென்றான் பாஸ்கர்.

அடுத்து ஐந்து நிமிடத்தில், சன்மதி ஆட்டோவிலும், பாஸ்கருடன் இளங்கோ பைக்கிலுமாக புறப்பட்டார்கள்.

டாக்டர், இளங்கோவை கவனமாக ஆராய்ந்தார். பலவித டெஸ்ட் எடுத்தார்.

கிட்டத்தட்ட ஒரு மணிநேரம்.

டாக்டரின் முகத்தில் புன்னகைப் படர்ந்திருந்தது.

''உங்களுக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது இளங்கோ''

''டா...க்...டர்!''

''யெஸ்... மிஸ்டர் இளங்கோ. உங்களுக்கு மறுபடி பார்வை கிடைக்க 90 சதவீதம் வாய்ப்பிருக்கிறது.''

''ஓ... தாங்க்யூ... தாங்க்யூ லோ மச் டாக்டர்!'' ஆனந்தத்தில் கண்கள் கலங்கி விட்டன சன்மதிக்கு.

''இளங்கோவுக்கு ஆக்ஸிடண்ட் ஆகி பத்து வருஷம் தான் ஆகியிருக்கு. அவருடைய



பார்வை நரம்புகளை கூர்மையான பொருள் தாக்கியிருக்கு. நரம்புகள் பாதிக்கப்பட்டிருக்கே தவிர, கட்டாகி விடவில்லை. அதுவும் அவருடைய இடது கண்ணில் தான் முழுக்க பார்வை போயிடுச்சே தவிர வலது கண்ணில் ஒரு ஆபரேஷன் பண்ணினால் போதும்... பார்வை கிடைச்சிடும்.''

''நிஜமாகவா சொல்றீங்க?''

''அதான் சொன்னேனே... அவர் பக்கம் அதிர்ஷ்டமிருக்கு. இல்லேன்னா ரெண்டு கண்ணிலேயும் பார்வை கிடைக்க வாய்ப்பு வருமா... நீங்க ஏதாவது ஐ பேங்குக்கு தொடர்பு கொண்டு பதிவுப் பண்ணிடுங்க. கிடைச்சதும் ரெண்டு ஆபரேஷனையும் ஒரே நேரத்திலே வச்சுக்கலாம். ஆனா, ஆபரேஷனுக்கு குறைந்தது ஒரு லட்சம் ஆகும்.''

''பெரிய நம்பிக்கையை கொடுத்திருக்கீங்க டாக்டர். அதுவே போதும். கூடிய சீக்கிரம் பணத்துக்கு ஏற்பாடு பண்ணிடறேன் டாக்டர்.''

''அதுக்கு முன்னாடி கிட்டத்தட்ட மூணு மாசத்துக்கு நான் எழுதித்தர்ற மருந்து மாத்திரைகளை சாப்பிட்டு வரணும். ஆபரேஷனை தாங்கிக்கிற சக்தி அவர் உடம்புக்கு கிடைக்கணும்.''

''எழுதிக் கொடுங்க டாக்டர்!''

மருந்துச் சீட்டுடன், அவருக்கான ஃபீஸ்... பல டெஸ்ட் எடுத்ததற்கான கட்டணம் என்று மூவாயிரத்துக்கு பில் எழுதிக் கொடுத்து...

''கவுண்டர்ல கட்டிட்டு ரிசீப்ட் வாங்கிட்டு வாங்க'' என்றார்.

மூவரும் காரிடாருக்கு வந்தனர்.

''நீங்க ரெண்டு பேரும் இங்கேயே இருங்க. நான் போய் கட்டிட்டு வர்றேன்.''

''அட... அதை இப்படி கொடுங்க... நான் கட்டிட்டு வர்றேன்.'' என்றான் பாஸ்கர்.

''பரவாயில்லை... நானே கட்டிட்டு வர்றேன்!'' கொஞ்சம் வேகமாக நடந்ததில்... அந்த வித்தியாசம் தெரிந்தது பாஸ்கருக்கு.

''மேடம்... கால்ல அடிபட்டிருக்கா என்ன? தாங்கி நடக்கறீங்க?''

''அ... ஆமாம்!'' சங்கடப்பட்டான். பின் மெதுவாக நடந்துப் போய் விட்டான்.

''பாஸ்கர்...!''

''என்னடா?''

''என் தேவதை எப்படியிருக்காடா?''

''யாரை கேட்கறே நீ?'' என்றான் வியப்பாய்.

''சன்மதியை தான்!''

''இளங்கோ... நீ அவளை...''

''உயிருக்குயிராய் நேசிக்கறேன்டா! ஆச்சர்யமாயிருக்கா? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படற மாதிரி நினைக்கறியா? நானும் உணர்ச்சியுள்ள மனுஷன்தானே பாஸ்கர்? எனக்காக அவள் செய்கிற ஒவ்வொரு உதவியிலேயும் மனிதாபிமானத்தை மட்டுமல்ல, காதலையும் உணர்ந்திருக்கேன்.''

''நிஜமாகவா?''

''ஆமான்டா! ஒரு குருடனை நேசிக்கிறவ எப்பேர்ப்பட்டவளா இருப்பா? மனசுல எவ்வளவோ இருக்கு. சொல்லத் தெரியலை.''

''அவளுக்குத் தெரியுமா?''

''ம்ஹூம்... தெரியாது. ஆபரேஷன் முடியட்டும். பார்வை கிடைச்சதும் சொல்வேன். இப்ப சொல்லு... என் சன்மதி எப்படியிருக்கா?'' என்றான் ஆர்வமாய்.

''தேவதைய சன்மதி ரூபத்துல பார்க்கிற மாதிரி!''

''அப்படியா... என் சன்மதி தேவதை மாதிரி இருப்பாளா?''

இவர்கள் பேசிய அனைத்தும் பணம் கட்டிவிட்டு வந்த சன்மதியின் காதில் விழுந்தது.

பில்லில் இளங்கோ என்று டைப் பண்ணியிருந்த எழுத்துக்களை மெல்ல வருடி விட்டாள் சன்மதி. அவள் இதயத்தினுள் ஆர்ட்டீசியன் நீரூற்று ஒன்று சீறிப் புறப்பட்டது.

## 15

'இளங்கோ அதிர்ஷ்டக்காரன்' என்று டாக்டர் எந்த நேரத்தில் சொன்னாரோ? அதிர்ஷ்டக்காற்று அவன் பக்கம் சுழன்றடித்து தான் வீசியது.

மருந்து மாத்திரைகளால் அவன் உடல் ஆபரேஷனுக்கு தயாராகிக் கொண்டிருக்க... சன்மதி பணத்திற்காக முயற்சிப் பண்ணிக் கொண்டிருந்தாள். அவள் பணிபுரியும் பேங்கில் லோனுக்கு அப்ளை செய்தாலும், எதிர்பார்க்கும் அளவிற்கு கிடைக்காது என்றார் மேனேஜர்.

'என்னப் பண்ணலாம்? அம்மாவிடம் பர்மிஷன் வாங்கி வீட்டுப்பேரில் கடன் வாங்கலாமா? அம்மா தவறாக நினைத்துக் கொள்வார்களா?'

குழம்பியபடி வீட்டிற்கு சென்றால் அம்மாவின் வேதனை அப்பிய முகத்தைப் பார்த்து திடுக்கிட்டாள்.

''என்னம்மா, ஏன் ஒரு மாதிரியா இருக்கே?''

''ஒன்னுமில்லே... நீ முகம் கழுவிட்டு வா... அடை செய்திருக்கேன்!''

''இருக்கட்டும்... உன் முகம் சரியில்லே... அதுக்கான காரணத்தை சொல்லு!''

''கீர்த்தனா!''

''யாரு அண்ணியா? வந்திருந்தாங்களா?''

''அவளுக்கென்னடி மரியாதை? நாக்கிலே நரம்பில்லாம பேசறா...''.

''இங்கே வந்தாங்களா?''

''காலையிலே மார்க்கெட் போனப்ப, சதீஷ் கூட பைக்கிலே போய்க்கிட்டிருந்தவ, என்னைப் பார்த்ததும் இறங்கி வந்து...'' விசும்பினாள்.

''அழாம சொல்லும்மா!''

''இப்படியெல்லாம் ஜென்மத்தை வச்சுக்கிட்டு உயிரோட நடமாடணுமா? எங்களையெல்லாம் விரட்டியடிச்சுட்டு உன் பொண்ணு ஒரு குருடனோட கூத்தடிச்சிட்டிருக்கா. அதைக் கேக்க துப்பில்லே... அப்படி இப்படின்னு'

### ரூ.1 கோடி வைர 'டை'

குபேர மனிதர்களின் கோட்-சூட் உடைக்கு பொருத்தமாக 'காஸ்ட்லி' டை ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. நீங்கள் நினைப்பது போல இது தங்க 'டை' அல்ல. வைர வைடூரியங்களாலான 'டைமண்ட் டை'.

இந்தியாவின் சுபாஷிஸ் வைர வர்த்தக நிறுவனம் இதனை வடிவமைத்து இருக்கிறது. 'டைமண்ட் டை'யில் 264 வைரக் கற்கள் பதிக்கப்பட்டு உள்ளன. 77 காரட் எடை கொண்டது. இந்த 'டைமண்ட் டை'யை உருவாக்க பொற்கொல்லர்களுக்கு முழுசாக 5 மாதங்கள் பிடித்ததாம்.

நாடு முழுவதும் சுற்றுப் பயணத்துக்கு தயாராகிவிட்ட இதன் விலை ரூ.1 கோடி ஆகும். உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த 'டைமண்ட் டை' இதுதான்.

- ப. முத்துமாரி.

சதீஷ் இவ்வளவையும் அவளைப் பேச விட்டு வேடிக்கைப் பார்த்துக்கிட்டு...''

''சரி... அழாதே! அவங்க இதெல்லாம் பேசலேன்னாதான் ஆச்சர்யம். நான் வருத்தப் பட மாட்டேன்ம்மா! தெரியுமா? இளங்கோ வுக்கு பார்வை கிடைக்க வாய்ப்பிருக்குன்னு டாக்டர் சொல்லிட்டார்!'' என்றாள் உற்சாகமாக.

''உனக்கு சீக்கிரம் கல்யாணம் ஆகணும் சன்மதி. உன் சொத்துல பத்து பைசாக்கூட உன் அண்ணன்களுக்குத் தராதே... அதை விட பத்து ஏழைங்களுக்கு கொடு!''

அம்மா இன்னும் அந்த பாதிப்பிலிருந்து விடுபடவில்லை என்பதுப் புரிந்தது.

''சரி... பசிக்குது... டிபன் எடுத்து வைம்மா!''

முகத்தை துடைத்தபடி டேபிள் முன் அமர்ந்தாள்.

அம்மா டிபன் தட்டுடன், ஒரு கவரையும் நீட்டினாள்.

''என்னது?''

''இன்னைக்கு தபால்ல வந்தது!''

அனுப்புனர் முகவரியை பார்த்தவள், அவ சர அவசரமாய் பிரித்தாள்.

படித்தவள்... அப்படியே அம்மாவை இறுக அணைத்து கன்னங்களை எச்சில்படுத்தி னாள்.

''என்ன... என்ன மதி? அப்படியென்ன சந் தோஷமான செய்தி?''

''இனிப்பான செய்திதாம்மா! வெளி நாட்டு தொண்டு நிறுவனமும், இங்குள்ள இலக் கிய கூட்டமைப்பும் சேர்ந்து நடத்திய நாவல் போட்டியில் எனக்குதாம்மா முதல் பரிசு கிடைச் சிருக்கு.''

''நிஜமாகவா?'' அந்த தாயின் முகத்தில் பூரிப்பு.

அதன்பின் நடந்தவைதான் ஆச்சர்யமா னவை.

போட்டியில் வென்றதற்கான பரிசுத் தொகையான ஐம்பதாயிரத்தை, அமைப்பாளர் கள் அவளை நேரில் சந்தித்து, வாழ்த்துக் கூறி கொடுத்தனர்.

அப்போது தான், அவர்கள் இயலாதவர்க ளுக்கு கல்வி, வேலை வாய்ப்பு, மருத்துவம் போன்றவற்றிற்கு நிறுவனம் மூலம் உதவிகள் செய்து வருவதாக அறிந்து மிகவும் உற்சாகமா னாள்.

இளங்கோவைப் பற்றி அவர்களிடம் எடுத்துக் கூறினாள்.

''நீங்களே சொன்ன பிறகு மறுக்க முடி யுமா? எங்கள் ஐ பேங்கின் மூலம் உடனடியா கண்ணுக்கு ஏற்பாடு செய்து விடலாம். ஆபரே... ணுக்கு ஆகும் முழு செலவையும் எங்கள் நிறு... னமே ஏற்றுக் கொள்ளும். தவிர, அவர் குண... னதும் நல்ல சம்பளத்தில் வேலையும் போட்டு தருகிறோம்... அதுவும் எங்கள் நிறுவனத்தி... கிளைகளில் ஒன்றில்!''

நெகிழ்ந்துப் போய் கைகூப்பினாள்.

''ரொம்ப தாங்க்ஸ் சார்... இந்த பெரிய உ... வியை என்னால் மறக்க இயலாது!''

''நாங்கள் செய்யப்போவது பெரிய உத... யல்ல மிஸ். சன்மதி! நீங்கள் தனியாளாய் ஒ... பார்வையற்ற இளைஞருக்காக இவ்வளவு பா... பட்டிருக்கிறீர்களே... அதுவும் உங்கள் உடல்... மத்திற்கிடையிலும்! அதுதான் பெரிய வி... யம்!'' என்றனர்.

இளங்கோவினால் நம்ப முடியவில்லை.

''சன்மதி... நீங்கள் சொல்வதெல்லா... நிஜமா? இன்னும் பத்தே நாட்களில் நான் உ... னைப் பார்க்கப் போகிறேனா? புதிய வாழ்க்... யில் அடியெடுத்து வைக்கப் போகிறேனா?''

''இப்படி எமோஷனலாகக் கூடாதுன்... டாக்டர் சொல்லியிருக்காரில்லையா?''

''அவர் சொல்லுவார். அவருக்கென்... தெரியும் என் மனசைப்பத்தி. அப்புறம் ச... மதி...''

''சொல்லுங்க!''

''நான் கேட்காமலேயே எனக்கு பெ... உதவிகளை எல்லாம் செய்யறீங்க! ஆபரே... முடிஞ்சு வந்ததும் உங்களிடம் நான் ஒன்... கேட்பேன்.... தருவீர்களா?''

''என்ன அது?''

''ம்ஹூம்... இப்ப சொல்ல மாட்டே... பட், தரப் பிடிக்கலேன்னா... என் மே... கோபப்பட்டு என் நட்பை துண்டித்து விட... டாது!''

''என்னால் கொடுக்க முடிகிற எதை... கொடுப்பேன் இளங்கோ! அதைப்பிறகு ப... துக் கொள்ளலாம். இப்போதைக்கு ஆபரே... முடியும்வரை ரெஸ்ட் எடுங்க. நாளைக் கா... யில் நீங்கள் மும்பை செல்ல வேண்டும்.''

''ஏன் சன்மதி, இங்கே ஆபரே... பண்ண முடியாதா? நான் முதலில் உங்... முகத்தை பார்க்க ஆசைப்படுகிறேன்''

''இல்லை இளங்கோ. அவர்களுக்கு... தமான ஆஸ்பிடல் மும்பையில் தான் இரு... றது.''

அப்போது...

''போஸ்ட்'' என்ற தபால்காரரின் குரலைத் தொடர்ந்து கவர் ஒன்று வந்து விழுந்தது.

''லெட்டரா? யார்கிட்டேர்ந்து?''

''உங்க அம்மாவிடமிருந்து இளங்கோ!''

''அம்மாவிடமிருந்தா? நான் தான் இந்த மாசத்துக்கான பணத்தை அனுப்பி வச்சிட் டேனே... ஒரு வேளை அம்மாவுக்கு உடம்புக்கு ஏதேனும்... ப்ளீஸ்... கொஞ்சம் படிச்சு சொல் லுங்களேன்!'' என்றான் பதட்டத்துடன்.

அவன் நினைத்துப் போலவே அம்மா வுக்கு உடல்நிலை சரியில்லை.

கர்ப்பப்பையில் கேன்சர்! உடனடியாக ஆபரேஷன் பண்ணியாகணுமாம். பணத்துடன் உடனே ஊருக்கு வரும்படி எழுதியிருந்தாள்.

விஷயம் அறிந்தால் உடனே ஊருக்கு ஓடி விடுவான். மும்பைக்கு செல்வது கான்சலாகும்.

''படிங்க சன்மதி!''

''ஒண்ணுமில்லை... இளங்கோ! உங்க ...ளைப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறதாம். ...ஒரு முறை ஊருக்கு வந்து விட்டு போக வேண் ...டும் என்று எழுதியிருக்கிறார்கள்.''

''ப்பா... நான் பயந்தேப் போய்ட்டேன்.''

''ஆபரேஷன் முடிஞ்சதும் உங்க ஊருக் ...குப் போய் அம்மாவுக்கு இன்ப அதிர்ச்சிக் ...கொடுங்க!''

''சரிங்க'' என்றான்.

''என்னடி சொல்றே? கோவிலுக்குப் ...போய் அடிப்பிரதட்சணம் பண்ணப்போறியா?'' ...சொர்ணம் மகளை வியப்புடன் பார்த்தாள்.

''ஆமாம்மா! இன்னைக்கு இளங்கோ ...வுக்கு மும்பையிலே ஆபரேஷன். நம்பிக்கை ...இருந்தாலும், கூடவே ஒரு பயமும் இருக் ...கும்மா! அதனால தான்!''

''அதுக்காக? இதோப்பாரு சன்மதி.. உன் ...உடம்பையும் கொஞ்சம் நினைச்சுப்பாரு! அடிப் ...பிரதட்சணம் பண்ணினா.. கால் ரொம்பவே வீங் ...கிப் போயிடும்''

''பரவாயில்லேம்மா!''

''இப்பல்லாம் ரொம்பப் பிடிவாதம் பிடிக் ...கிறே சன்மதி! அப்படிதான் மூணு நாளுக்கு ...முந்தி இளங்கோ அம்மாவுக்கு ஆபரேஷன்னு ...திருநெல்வேலிக்கு போய் வந்தே! அம்பதாயி ...ரத்தை அவனுக்கு செலவுப் பண்ணிட்டு ...வந்தே!''

''நல்ல காரியம் தானேம்மா?''

''இல்லேன்னு சொல்லலே... ஆனா, ...எனக்கு நீ முக்கியம்டி!''

''எனக்கொன்னும் ஆகாதும்மா... கவ லைப்படாதே... நான் கோவிலுக்குப் போய் வந் திடறேன்.'' போய் விட்டாள்.

இது புதிய சன்மதி. கோவிலுக்கு போக லாம் என்று பத்துமுறை அழைத்தால் ஒரு முறை தான் வருவாள்! அப்படிப்பட்டவள் இளங்கோ விற்காக வேண்டிக் கொண்டு கோவிலுக்கு செல் வதென்றால்? அவள் முகத்தில் தெரிந்த பதட் டம், கவலை இதுவரை பார்க்காதது.

மகளின் மன உணர்வுகள் தாய்க்குப் புரியா மலில்லை.

'கடவுளே... இது நல்லதாயிருந்தால் அப் படியே நடக்கட்டும். என் மகளின் சந்தோஷம் தான் எனக்கு முக்கியம். அவள் மனதிற்கேற்ற வாழ்க்கை அமையட்டும்.' மானசீகமாய் வேண் டிக் கொண்டாள் சொர்ணம்.

மும்பை!

மருந்து வாசனையும், டெட்டால் நெடி யும் இளங்கோவின் மூக்கை தொட்டது.

'சன்மதி... சன்மதி' என்று மனசு அவள் பெயரையே உச்சரித்துக் கொண்டிருந்தது.

''மிஸ்டர் இளங்கோ... மெல்ல எந்தி ரிங்க!'' டாக்டர் தமிழை அழகாக உச்சரித்தார்.

எழுந்தமர்ந்தான்.

''இன்னைக்கு உங்க கண்களின் கட்டை பிரிக்கப் போகிறோம்.''

''டாக்டர் அதற்கு முன்பாக என் ஃப்ரெண்ட் பாஸ்கரை இங்கே வரவழையுங்கள் ப்ளீஸ்!''

''அவரும் இதோ... இங்கேதான் இருக்கி றார்!''

''ஆமா இளங்கோ... இங்கே தான் இருக் கிறேன்!''

''பாஸ்கர் சன்மதியோ....''

''போட்டோ தானே? ரெடியா வச்சிருக் கேன். கட்டைப் பிரிச்சதும் நீ அவள் முகத்தி லேயே முழிக்கலாம்... சரியா?''

''தாங்க்ஸ் பாஸ்கர்!''

மெல்ல கட்டைப் பிரித்தார் டாக்டர்.

''மிஸ்டர் இளங்கோ... மெல்ல... ரொம்ப மெல்ல உங்க கண்களைத் திறங்க...''

''குட்... எதிரே உள்ளங்க தெரிய றாங்களா?''


இளங்கோவிற்கு முதலில் இருட்டாய் இருந்தது. அதன் பிறகு ஏதோ மசமசப்பாய் மேகங்கள் நகருவதுப்போல்... கண்கள் கூசியது. இன்னும் கஷ்டப்பட்டு பார்வையை கூர்மை யாக்க... சாம்பல் நிறம் விலகி... கொஞ்சம்

கொஞ்சமாய் பிம்பம் பெரிதாகி பளிச்சென தெரிய ஆரம்பித்தது.

கண்களில் கருணையையும், முகம் முழுக்க வசீகரத்தையும் தேக்கிய புன்னகைப் பூவாய் சன்மதியின் போட்டோ... தெளிவாய் தெரிய... "சன்மதி" என்றபடி நெக்குருக அந்த போட்டோவை வாங்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான் இளங்கோ.

டாக்டர் உள்பட அனைவரின் முகத்திலும் ஆனந்தம்.

"சக்ஸஸ்!" கட்டை விரலை உயர்த்தினார் டாக்டர்.



## 16

"என்ன இளங்கோ... சின்னப் பிள்ளை மாதிரி அடம் பிடிக்கறே? உடனே சென்னைக்கு புறப்படணும்னா எப்படி? இன்னும் இங்கே ரெண்டு நாள் இருக்கணும்னு டாக்டர் சொல்லிட்டார்." சலித்துக் கொண்டான் பாஸ்கர்.

"எனக்கு ஒண்ணுமில்லே பாஸ்கர். ஐயம் ஆல் ரைட். எனக்கு உடனே சன்மதியப் பார்க்கணும். ப்ளீஸ் பாஸ்கர்."

"டாக்டர் சம்மதிக்கணுமே."

"எப்படியாவது சமாளி. என்னால இனி அவளைப் பார்க்காம ஒருநாள் கூட இருக்க முடியாது. நான் செவ்வாய்க்கிழமை வருவேன்னு நினைச்சுக்கிட்டிருப்பா. ஸன்டே வீட்லே இருப்பா. அப்ப அவ முன்னாடிப் போய் நின்னு... அவ முகத்திலே கொப்புளிக்கிற ஆச்சர்யத்தை பார்க்கணும்... ப்ளீஸ்."

"காதல் ரொம்பதான் முத்திப் போச்சு... இரு டாக்டர்கிட்டே பேசிட்டு வர்றேன்."

**வீ**ல்சேரை உருட்டியபடி கிச்சனுக்குள் நுழைந்தாள் சன்மதி.

"சொர்ணம்... பசிக்குது... இன்னுமா முடியலே?"

"உதைப்படுவே ராஸ்கல். பேர் சொல்லியா கூப்பிடறே?"

மணக்க மணக்க சிக்கன் கிரேவியை கிளறிக் கொண்டிருந்த காண்டியாவேலே அவளை அடிக்க செல்லமாய் ஓங்கினாள்.

"அதானே உன் பேரு? அப்பா உன்னை எப்படிம்மா கூப்பிடுவார்? ஷார்ட்டா சொர்... சொர்ணா?" சொல்லிவிட்டு கபகபவென சிரித்தாள்.

மனம் நிறைந்திருந்தது சொர்ணத்திற்கு.

தாத்தாவின் மறைவிற்குப் பிறகு இப்போதுதான் மனம் விட்டு சிரிக்கிறாள். அதுவும் இந்தப் பத்து நாளாக உற்சாகமாக இருக்கிறாள். இளங்கோவிற்கு ஆபரேஷன் முடிந்து இரண்டு கண்களும் நன்றாகத் தெரிவதாக மும்பையிலிருந்து போன் வந்ததிலேர்ந்து சிரிப்புக்கு பஞ்சம் இல்லை.

என்ன ஒன்று... அன்று அடிப்பிரதட்சணம் பண்ணியதில் கால் வீங்கி... ரத்தம் கசிந்து புண்ணாகி விட்டது. செயற்கை காலை பொருத்தி நடக்கையில் வலி உயிரை எடுக்கிறது. அதனால் மெடிக்கல் லீவு எடுத்துக் கொண்டாள்.

''என்னைக் கிண்டல் பண்றதுன்னா உனக்கு அல்வா சாப்பிடற மாதிரியாச்சே? ஒரு அரைமணி நேரம் பொறுத்துக்க, எல்லாம் ரெடியாகிடும். இப்ப கால் வலி எப்படியிருக்கு?''

''பரவாயில்லேம்மா. சரி... அதுக்குள்ளே மருந்தைப் போட்டுக்கறேன்.''

மறுபடி ஹாலுக்கு வந்தவன், டீப்பாய் மீது வசதியாய் மருந்தை வைத்து, நைட்டியை உயர்த்தி, பஞ்சால் மருந்தைத் தொட்டு தொட்டு மென்மையாய் தேய்த்து விட்டாள்.

''நீ இங்கேயே இரு பாஸ்கர்... நான் மட்டும் உள்ளேப் போகிறேன்'' பைக்கை விட்டு இறங்கினான் இளங்கோ.

'இன்னும் சில நொடிகளில் என் இதய நிலாவைப் பார்க்கப் போகிறேன்' அவன் உள்ளம் குதித்து கும்மாளமிட்டது.

வாசலிலேயே பைக்கில் காத்திருந்தான் பாஸ்கர்.

கதவு திறந்தே இருந்தது. சிக்கன் மசாலாவின் மணம் நாசியை நிரப்பியது.

'சன்மதி என்று குரல் கொடுக்கலாமா? வேண்டாம்... மெல்ல நடந்து அவள் முன் போய் நிற்கலாம்.'

பூனைப் பாதம் வைத்து உள்ளே நுழைந்தான். சின்ன ஹாலைக் கடந்து, விஸ்தாரமான ஹால் வந்தது.

அங்கு அமர்ந்திருந்த இளம் பெண்ணை பார்த்து மிக மிக அதிர்ந்தான்.

'வீல்சேரில் அமர்ந்திருப்பது சன்மதியா? கடவுளே... அவளுடைய கால் ஏன் இப்படி இருக்கிறது? ஐயோ... என்ன கொடூரம் இது? சன்மதி ஊனமானவளா? இதை ஏன் முன்பே என்னிடம் சொல்லவில்லை?'

அந்தக் காட்சி அவனை தாக்கியது. முகம் கனிக்க வைத்தது.

ஏதோ நிழலாட... நிமிர்ந்த சன்மதி இன்ப அதிர்ச்சியில் வார்த்தைகள் வராமல் தவித்தாள்.

''இ...ள...ங்...கோ!''

''ச... சன்மதி?''

''நான்தான்... நான் தான் சன்மதி. எப்ப வந்தீங்க? என்ன ஆச்சர்யம். வாங்க... உட்காருங்க.'' ஆர்வ மிகுதியில் எழுந்தவள்... தடுமாறி கீழே நழுவி விழுந்தாள்.

''அம்மா...!''

சப்தம் கேட்டு சொர்ணம் ஓடி வந்து தூக்கினாள்.

அப்போது கூட அவளுக்கு கை கொடுத்து தூக்க வேண்டுமென்று தோன்றவில்லை இளங்கோவுக்கு.

அவன் முன் விழுந்தது சங்கடமாயிருந்தாலும் சுதாரித்துக் கொண்டாள்.

''என்னடி இது? ஏதாவது வேணுமின்னா என்னைக் கூப்பிட வேண்டியதுதானே? ஏற்கனவே புண்ணாகி...''

''அம்மா இளங்கோ வந்திருக்கார்ம்மா.''

அப்போதுதான் அவனைப் பார்த்தாள் சொர்ணம்.

மிரட்சியுடன் கொஞ்சமும் சிரிப்பின்றி வாட்டசாட்டமாய் நின்றிருந்தான்.

''வாப்பா... உன்னைப் பத்தி சன்மதி நிறைய சொல்லியிருக்கா. உட்காரு...''

''அம்மா குடிக்க ஏதாவது எடுத்துட்டு வாம்மா... முதல்ல.''

''இல்லைங்க... வேண்டாம்.''

''அட... ரொம்பதான் பிகு பண்ணி[...] கிட்டு. நீ கொண்டு வாம்மா. நான் உங்களை[...] எதிர்பார்க்கவே இல்லே இளங்கோ. ப்பா... இது[...] கனவா... நிஜமான்னே புரியலே. என்னை நேர்[...] பார்வை பார்க்கறது இளங்கோதானா?'' பரவச[...] பட்டாள்.

''ரெண்டு நாள் முன்னதாகவே வரக்கூடிய[...] சூழ்நிலை. அப்புறம்... நான் கிளம்பறேனே.''

''என்னங்க இது? இப்பத்தானே வ[...] தீங்க?''

''வேற முக்கியமான வேலை இருக்கு[...] அதுக்கு முன்னால உங்களை பார்க்கணும்னு[...] நினைச்சேன்... அதான் வந்தேன். நான் வ[...] றேங்க.'' அங்கு நிற்பதே தணல் மேல் நிற்பது[...] போலிருந்தது. இங்கிருந்து தப்பித்து ஓடி வி[...] மாட்டோமா என்றிருந்தது... இளங்கோவிற்கு[...]

''அப்படியா? நான் உங்ககிட்டே நிறைய[...] பேசணும் இளங்கோ. சரி-கிளம்புங்க. நா[...] நாளைக்கு வீட்டுக்கு வர்றேன்.''

''சரிங்க... வர்றேங்க.'' போய்விட்டான்.

அவனிடம் ஏதோ ஒரு வித்தியாசம் இரு[...] பதை உணர்ந்தாள் சன்மதி.

பாஸ்கர் புருவம் உயர்த்தினான்.

''என்னடா போன வேகத்திலே திரும்[...] வந்துட்டே? சன்மதி இல்லையா?''

''நீ முதல்ல வண்டியை எடு.'' என்றா[...] எரிச்சலுடன்.

''ஹலோ இளங்கோ... ஹவ் ஆர் யூ[...]

வாசலில் வந்து நின்றிருந்த சன்மதியை சங்[...]டத்துடன் பார்த்தான்.

''வா... வாங்க சன்மதி?''

''ரெண்டு நாளா வீடு பூட்டிக் கிடந்ததே? [...]ந்துட்டுப் போனேன்.''

''ஆம்பளை வீட்லேயே அடைஞ்சு [...]டக்க முடியுமா?''

''...?''

''கொஞ்சம் அலைஞ்சிட்டிருக்கேன் சன்[...]தி. வேலையில் சேர்றதுக்கான அப்பாய்ன்ட்[...]மண்ட் ஆர்டர் கொடுத்துட்டாங்க. ஆபீஸ் பால[...]ரக்கத்துல. காலையிலே சீக்கிரமா கிளம்ப[...]ணும். வீடு திரும்ப எட்டு ஒன்பது கூட ஆகும். [...]ளை ஜாய்ண்ட் பண்றேன்'' கண்கள் சுவற்[...]றைப் பார்த்தன.

''லோ... வீட்டுப்பக்கம் வந்துடாதேன்னு [...]ல்றீங்க.''

''சேச்சே... அதுக்கில்லே...''

''நானும் விளையாட்டுக்கு சொன்னேன். [...]ரி வே கங்க்ராஜுலேஷன்ஸ்'' சிரித்தபடி [...]கையை நீட்ட... தயங்கி பின்... அதைப் பற்றி [...]குலுக்கி ''தாங்க்ஸ்'' என்றான்.

''அப்புறம்... கேட்கணும்னீங்களே... [...]ளுங்க.''

''எதை?'' என்றான் புரியாமல்.

''ஆபரேஷன் முடிஞ்சு வந்ததும் என்[...]கிட்டே என்னமோ கேட்கணும்னு சொன்னீங்[...]களே'' என்றாள் குறும்புடன்.

''அ... அது சும்மா ஒரு பேச்சுக்கு சொன்[...]னேன்.''

சன்மதி அவனை கூர்ந்து கவனித்தாள். [...]வனிடம் புறத்தே புலப்படாத ஏதோ ஒரு மாற்[...]றத்தை உணர்ந்தாள்.

''ஒரு நாளைக்கு வீட்டுக்கு வாங்க [...]ளங்கோ. அம்மா உங்ககிட்டே பேசப் பிரியப்[...]படறாங்க. அன்னைக்கும் வந்ததும் ஓடிட்[...]டீங்க... சரியாப் பேசலே.''

''ச... சரிங்க... ஒரு நாளைக்கு வர்றேன்.''

''ஓக்கே... பை இளங்கோ.'' விடைபெற்[...]

அதற்கடுத்து வந்த நாட்களில் இளங்கோ[...]வைப் பார்க்கவே முடியவில்லை. அவனாவது [...]னில் தொடர்பு கொள்வான் என்று எதிர்[...]பார்த்தாள். ம்ஹூம்... பண்ணவில்லை.

ஒரு மாதம் ஓடிப்போனது.

அவனைப் பார்க்காமல் மனசு எதிலும் [...]பின்றி அவதிப்பட்டது.

ஞாயிறும் வீடு பூட்டிக் கிடந்தது. இந்த [...]று கண்டிப்பாய் வீட்டில் இருப்பான் என்று மனசு சொன்னது.

சென்றாள். கதவு திறந்துதான் இருந்தது. இதயம் உற்சாக கும்மியடிக்க அருகே சென்றவள், ''சன்மதி'' என்ற பெயர் காதில் விழவும் நின்றாள்.

''சன்மதிய நீ இப்படி அவாய்ட் பண்றது கொஞ்சம் கூட சரியில்லே இளங்கோ. நீ இன்னைக்கு உலகத்தைப் பார்த்து ரசிக்கிறேன்னா... அதுக்கு முழுக் காரணம் சன்மதிதான். உன்னை படிக்க வச்சு, உனக்கொரு வேலை வாங்கிக் கொடுத்தது... எல்லாமே சன்மதிதான்.''

''நான் இல்லேன்னு சொல்லலையே பாஸ்கர்?''

''பிறகேன்... அவளைப் பார்க்கக் கூடாதுன்னு ஞாயிற்றுக்கிழமைகள்ல கூட பூட்டிக்கிட்டு வெளியேப் போய்ட்டே? சன்மதி என் தேவதைடான்னு உருகினியே...''

''பரித்தவனுக்கு கிடைச்சதெல்லாம் ருசியாகத்தான் தெரியும். நான் அவமேலே மரியாதை வச்சிருந்தேன். அவ எப்படி இருப்பான்னு தெரியாமலே கற்பனையிலேயே காதலிச்சேன். ஆனா, அவ ஒரு கால் இல்லாதவளா இருப்பான்னு நான் நினைக்கவேயில்லே. என்கிட்டேயும் சொல்லாமலே மறைச்சிட்டாளே இவன் கண் தெரியாதவன்... நாம எப்படியிருந்தாலும் சம்மதம் சொல்லிடுவான்ங்கற எண்ணம் தானே.''

''சீச்சீ... இவ்வளவு அபத்தமா கற்பனை பண்ண உனக்கு எப்படிடா மனசு வந்தது? அந்த குறையை ஒரு குறையாகவே நினைக்காமல் இருந்திருக்கலாம். அப்படி நினைச்சதாலதானே உனக்கு ஒரு தாய் மாதிரி கூடயிருந்து இவ்வளவு உதவிகள் பண்ணியிருக்கா.''

''போதும் பாஸ்கர். அவளைப் பத்திப் பேசி மூட் அவுட் பண்ணாதே. அவ என்கிட்டே மறைச்சது தப்பு. முன்னாடியே சொல்லியிருந்தா... ஒரு டிஸ்டன்ஸோட... மரியாதையோட பழகியிருப்பேன். கண் பார்வை கிடைக்க காரணமா இருந்துட்டா... நான் வாழ்க்கை கொடுத்துடணுமா? எனக்கென்று விருப்பு வெறுப்பு இருக்கக் கூடாதா?'' என்றான் ஆதங்கத்துடன்.

அதற்கு மேல் அங்கு நிற்க முடியவில்லை சன்மதியால். சேற்றை வாரி அவன் மேல் கொட்டி விட்டது போல் அசிங்கமாயிருந்தது. கண்கள் பொங்கியது.

வேகமாய் நகர்ந்தவள் தடுமாறி விழப் போனாள். சட்டென சுதாரித்து நடக்க ஆரம்பித்தாள்.

அவளைப் பார்த்து விட்ட பாஸ்கர் நெற்றியில் பட்டென்று அடித்துக் கொண்டான்.

''டேய்... சன்மதிடா...!''

## 17

மேலும் இரண்டு மாதம் கடந்தது.

சன்மதி பிசியாய் இருந்தாள். இளங்கோவினால் ஏற்பட்ட காயத்தை வலுக்கட்டாயமாய் மறந்தாள். மனசு தளரும் போதெல்லாம் தாத்தாவை நினைத்துக் கொள்வாள்.

'நமச்சு எனக்கு தைரியத்தைக் கொடு... தைரியத்தைக் கொடு!' என்று பிரார்த்திப்பாள் எழுத்திற்கு அதிக நேரம் ஒதுக்கி எழுதி குவித்தாள்.

சொர்ணம் தான் மகளைப் பார்க்கும்போதெல்லாம் ரத்தக்கண்ணீர் வடித்தாள்.

மகன் இளங்கோவை நேசித்ததும், அவளால் ஆக வேண்டிய காரியம் முடிந்ததும் நட்பை முறித்துக் கொண்டதும் அவள் சொல்லாமலே புரிந்துக் கொண்டதுதான். அதை வேறு கேட்டு அவளை மேலும் புண்படுத்த தாயுள்ளம் விரும்பவில்லை.

'ஏன் கடவுளே... என் மகளுக்கு மட்டும் ஏனிப்படி நடக்கிறது? அவளை மாலையும் கழுத்துமாக பார்க்க எனக்குக் கொடுப்பினை இல்லையா?' தனியே அழுதழுது கரைந்து போனாள்.

இந்த வேதனையிலிருந்து அவள் எப்படி மீண்டு வரப்போகிறாள்? என்று பயந்துக் கொண்டிருந்தவளை ஆச்சர்யப்படுத்தினாள் சன்மதி.

தன் பெயரிலிருந்த அந்த வீட்டை ஒரு கோடியே இருபது லட்சத்திற்கு விற்றாள். அதில் இருபது லட்சத்தை அம்மாவை கெஞ்சி கேட்டு சம்மதிக்க வைத்து இரண்டு அண்ணன்களுக்கும் தலா பத்து லட்சம் கொடுத்தாள்.

சென்னையை அடுத்த புறநகரில் விலைக்கு வந்த பெரிய கட்டிடத்தை அம்பது லட்சத்திற்கு வாங்கிப் போட்டாள். பார்த்து வந்த வேலையை ராஜினாமா செய்தாள்.

அதுவரை இதுகுறித்து எதுவும் கேட்காத சொர்ணம் மகளை ஆதங்கத்துடன் பார்த்தாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கிறே? இவ என்னதான் பண்ணப் போறான்னா?''

''....?''

''வாழ்க்கைங்கறது கல்யாணம், குழந்தை

# சர்ப்ப விநாயகர்

பாபநாசத்தில் உள்ள சர்ப்ப விநாயகர், மற்ற
விநாயகர் அமைப்பிலிருந்து மாறுபடுகிறது. விந
யகரின் திருமேனியில் ஐந்து சர்ப்பங்கள் அலங்
சிக்கின்றன.

ஐந்து தலை சர்ப்பம் தன் படங்களை விரி
துக் குடையாகவும், இடையில் ஆடைக்கு மே
அணியும் இடைக் கச்சுப் போன்று ஒரு சர்ப்பமு
திகழ்கிறது. மார்பில் பூணூலாக ஒரு சர்ப்பமு
வேறு இரு சர்ப்பங்கள் திருக்கரங்களிலு
அமைந்து அழகூட்டுகின்றன.

குடை போன்று படம் விரித்துள்ள ஆதிசேஷனோ தன் உடலை விநாயகப் பெருமானின் முதுகில் தவழவிட்டு வால் பகுதியை அவரது திருமலர்ப் பாதம் அமைந்துள்ள பகுதியில் முடிப்பது போல உள்ளது.

இந்நிலையை உற்று நோக்கினால் பெருமான் ஆதிசேஷனின் மடி மீது அமர்ந்துள்ளது போலத் தோன்றுகிறது.

- தேவி பிரசன்னா, குடந்தை.



குட்டி... இதிலே மட்டும் அடங்கிப் போய்ட
இல்லைம்மா. அதையும் தாண்டி நிறை
இருக்கு.''

''எனக்கு தெரியும்டி ராஜாத்தி. நீ அந்த நா
மாப் போகிற இளங்கோவுக்காக எவ்வளவு க
டப்பட்டே? அடிப்பிரதட்சணம் பண்ணி பு
ணாகிக் கூடப் போச்சே? பாவி... பாவி அவ
நல்லாயிருப்பானா?''

''என்னம்மா இது? நான் பேச வந்த
வேற. சபிக்காதேம்மா... யாரையும் மனசால
கூட வெறுக்காதே. இனிமே நாம ரெண்
பேரும் இந்த விஷயத்திலே சர்வ ஜாக்கிரதை
நடத்துக்கணும். ஏன்னா நம்ம ரெண்டு பேரு
குமே பெரிய பொறுப்பு இருக்கு.''

''என்னடி சொல்றே?''

''காலுக்கு செருப்பு சின்னதாயிருந்
லும், ரொம்ப அழகாயிருக்கேன்னு போட்டு
முடியுமா? வாழ்க்கையும் அப்படிதான். சூ
லைகள் வாழ்க்கையின் பாதையை தீர்மானிக்
றப்ப... அதிலே கல்லு, முள்ளுப் பார்த்து நட
றதுதானே புத்திசாலித்தனம்? இந்த பில்டிங்
ஏன் வாங்கினேன் தெரியுமா?''

''...?''

''ஆதரவற்ற, ஆதரவுள்ள எல்லா ஊன
றோர்களுக்கும் அடைக்கலம் தரப் போறேன்

''ச..ன்...ம..தி...''

''ஆமாம்மா... ஒவ்வொரு நிமிஷத்தை
இனி, பயனுள்ளதா திருப்தியா செலவழிக்
போறேன். என் கூட இருந்து நீயும் ஹெ
பண்ணனும். இருக்க இடமும், நல்ல உண
கொடுத்து, தொழில் பயிற்சி கொடுத்து வே
வாய்ப்பு ஏற்படுத்தித் தர்றதுதான் நம்ம கு
கோள். இங்குள்ள எல்லோரையும் பார்க்
போது என் இழப்பு தூசுன்னு தோணு



னக்கு. அம்பது லட்சத்தை
பேங்க்லே டெபாசிட் பண்
ணிட்டேன். அதிலேர்ந்து வர்ற வட்டி, செல
வுக்கு போதாது. அதனால தொண்டு நிறுவனம்,
ல்ல மனசுள்ள பணக்காரர்கள்னு உதவி கேட்
ப் போறேன். கண்டிப்பா கிடைக்கும். என்
வாழ்க்கையை பயனுள்ள வகையில் அமைக்கப்
ப் போறேன். அதுக்கு கண்டிப்பா உன்னோட
சிர்வாதம் எனக்கு வேணும்மா.''

''என் கண்ணே...'' என்றவள் மகளை
முத்தணைத்து கன்னத்திலும், நெற்றியிலு
மாய் இதழ் பதித்தாள் கண்ணீருடன்.

''உன் உடம்புல ரொம்பவே உப்பு சேர்ந்
டுச்சு...'' அம்மாவின் கண்ணீரை சுவைத்தபடி
அவள் கன்னத்தை துடைத்தாள்.

கட்டிடத்தை செப்பனிட்டுக் கொண்டி
ருந்ததை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்
தாள் சன்மதி. அந்த இல்லத்தில் அதுவரை பதி
னைந்துபேர் சேர்ந்திருந்தனர். அவர்களுக்காக
சொர்ணம் சமைத்துக் கொண்டிருந்தாள். அங்கே
பதான் அம்மா, மகளின் இருப்பிடமும்.

பணத்தை அநியாயத்துக்கு செலவு பண்
ணனே என்று உடன்பிறந்த இரண்டு சகோதரர்க
ளும், கிடைத்ததை பெற்றுக் கொண்டு சபித்துக்
கொண்டிருந்தனர்.

ஒரு பக்கம் காய்கறி, பழவகை தோட்டம்
அமைக்க வேலை நடக்க... இன்னொரு பக்கம்
போர்டு எழுதிக் கொண்டிருந்தார் பெயிண்டர்.

''சன்மதி''

பழக்கப்பட்ட குரல் அழைக்கவே, சட்டென திரும்பினாள்.

இளங்கோ.

''வாங்க... மிஸ்டர் இளங்கோ'' என்றாள் சலனமின்றி.

''உங்க முகத்திலே விழிக்கவே எனக்கு அருகதை இல்லை சன்மதி. என்னை மன்னிச்சிடுங்க.''

''எதற்கு பெரிய வார்த்தை?''

''உங்க அருமைத் தெரியாம புண்படுத்திட்டேன். ஊருக்கு போய் அம்மாவைப் பார்த்தப்பதான்... அவங்க உயிரையும் காப்பாத்தி இருக்கீங்கன்னு புரிஞ்சது. இப்படிப்பட்ட தங்க மனசை புரிஞ்சுக்காம... நான் தப்புப் பண்ணிட்டேங்க. உங்ககிட்டே மன்னிப்பு கேட்டு அதுக்கு பரிகாரமா உங்களை கல்யாணம் பண்ணிக்கறும்னு தேடினேன். கஷ்டப்பட்டு இப்பதான் கண்டுபிடிச்சேன்.''

சன்மதி உதடு பிரியாமல் சிரித்தாள்.

''கல்யாணம்ங்கறது பரிகாரமா? மனசும், மனசும் பரிமாறிக் கொள்ற பவித்ரமான விஷயத்தை பரிகாரமா நினைக்கறீங்களா? பாருங்க இளங்கோ... மேற்கொண்டு... இந்த விஷயம் நமக்குள் வேண்டாம்னு நினைக்கிறேன்.''

''ப்ளீஸ் சன்மதி... அவசரப்படாம...''

''ம்ஹூம் நிதானமா யோசிச்சு, நிரந்தரமான முடிவை நான் எடுத்தாச்சு. நீங்க கிளம்பலாம். கல்யாணம் முடிவானதும் சொல்லுங்க... கண்டிப்பா வாழ்த்த வருவேன்.''

''ப்ளீஸ்...''

''நீங்க இப்படி கெஞ்சறதே எனக்குப் பிடிக்கலே இளங்கோ. தன்னம்பிக்கை இழக்கிறவங்க பண்ற வேலை அது. ப்ளீஸ்... நேரத்தை வீணாக்க வேண்டாமே'' உறுதியாய் சொல்லி விட்டு தன் வேலையை கவனித்தாள்.

'நமச்சிவாய குடில்' பெரிய பெரிய எழுத்துக்களை பெயிண்ட் மூலம் அழகுப்படுத்திக் கொண்டிருந்தார் பெயிண்டர்.

இளங்கோ கண்ணீருடன் அவளையே திரும்பித் திரும்பி பார்த்தபடி வெளியேறினான்.

கல்லிலே கடவுளை காண வேண்டும், கடவுளைக் கல்லாக்க முற்பட்டு விடக் கூடாது.

(முற்றும்)